MADRAS

## லோக

# இன்ப துன்பம்.

மதுரைமாநகரம்

கவிராஜ கந்தசாமி பிள்ளை அவர்களால்

இயற்றப்பட்டு,

கோ. பெருமாள் முதலியாரால்,

PRINTED AT THE

SREE SUBRAMANIA VILASAM PRESS,

MADRAS.

1915.

*Registered Copy-Right.* [ANNAS 6.

R
N15
85691

உ
சுந்தர கணேசர் துணை.

# பூலோக இன்ப துன்பம்.



இஃது,
மதுரை மாநகரம்
கவிராஜ
**கந்தசாமிபிள்ளை அவர்களால்**
இயற்றப்பட்டு,

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
4 - OCT 1916
MADRAS

**கோ. பெருமாள் முதலியாரால்**

சென்னை:
ஆர். கெ. ராஜு அண்ட் கம்பெனி,
ஸ்ரீ வேணுகானம் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

சுத்தமான பதிப்பு.

**1915**

இதன் விலை] [அணா 6.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

2050
894·8113

## ரிஜிஸ்டர்ட் காபிரைட்

# அறிவிப்பு.

இதனால் சகலமான கனதனவான்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில்:—இந்த பூலோக இன்ப துன்பமென்னும் கதையை மதுரைமாநகரம் சுந்தர ஜெயவீர சூர தீர கவிராஜ கந்தசாமி பிள்ளை யவர்களால் இயற்றப்பட்டு யானாகிய கோ. பெருமாள் முதலியா ரவர்களால் பொருளுதவி புரிந்து சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்களது 1867-வருஷத்திய 25-வது ஆக்டு 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின் பிரகாரம் (ரிஜிஸ்டர்ட் காபிரைட்) செய்யப்பட்டிருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இந்நூலை எவர்களும் அச்சிடக்கூடாது.

இப்புத்தகமும் இன்னும் இதரமான புத்தகங்களும் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
கோ. பெருமாள் முதலியார்,
நெ. 18, பெருமாள் கோவில் தோட்டம்,
முதல் தெருவு, சென்னை.

85691
R
N15

உ

சுந்தர கணேஸர் துணை.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 4-OCT 1916 MADRAS.

# பூலோக இன்ப துன்பம்.

சீருலாவிய வானமும் வையமும் படைத்த காருண்யமூர்த்தியாகிய பகவான் சகல ஜீவர்களையும் சிருஷ்டித்து மனோவாக்குக் காய மிம்மூன்றினாலும் சுகாசுகங்களை அனுபவித்தற்கேற்ப மெய், வாய், செவி, நாசி, நேத்திர மென்னும் பஞ்சேந்திரியங்களையும் உண்டாக்கி ஞானமார்க்கத்தையோ அஞ்ஞானமார்க்கத்தையோ அடைந்து அவரவர் சக்தியானுசாரம் சுகதுக்கங்களை அனுபவித்திடச் செய்கின்றார். இதற்கு காரியதரிசிகளாகிய நவக்ரகங்களெனும் சூரியன், சந்திரன், குஜன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி, ராகு, கேதுவெனும், ஒன்பது நவக்கிரகங்களையும் ஏற்படுத்தி மாந்தர்களின் பிராரத்வ கர்மானுசாரவிதியை, சஞ்சிதத்தில் அனுபவித்திடச் செய்கின்றார். இவையனைத்துங் கவனித்துணரும் ஆன்மா அற்பசுகத்திற் கிச்சித்திடாமல் பேரின்ப வாழ்வை விரும்பி சதா பக்தியானந்தமாய் பாப புண்ணியமற்று காண்டல், உரை, அனுபவமெனும் மூன்றையும் கடந்து முமுக்ஷுவாய்த் தன்னைத் தானறிந்து தலைவனிற் கலந்து சைதன்ய வஸ்துவை நாடி ஜோதியிற் கலந்து சிதாகாசமாயிருப்பார். (இவர்கள் தான் உத்தமர்.)

சிலர் பகவத் பக்தியானுசாரமாய் ஜீவகாருண்யத்தை நாடி உலகிற்ஜனித்துய்யும் ஆன்மாக்களை வருத்தலாகாதென மதித்து தானதர்ம பரோபகாரம் புரிந்து ஆகாமியத்திற்கு லாபத்தைத்தேடுவதுபோல புண்ணிய சீலராயிருந்து வாழ்நாட் குறுகிய பின்னர் ஊற்றைச் சரீரத்தை விடுத்து ஆன்மா சகிதமாய் ஆண்டவன் திருவடியைநாடி அவ ரனுமதியினால் மறுஜனன மெடுத்து தனதான்ய சம்பத்திற் சிறந்த ஐஸ்வந்தராகவும், கவீஸ்வரர்களாகவும்பிறந்து உத்தமபத்தினி, நற்குணமைந்தருடன் இல்லறவாசியா யிருந்து "வேஷக்காரர்கள் மாறிமாறி வருவதுபோல" இறந்திறந்து பிறந்தாலும் மேன்மக்களாகவே இருப்பார்கள். (இவர்கள் தான் மத்திபர்.)

சிலர் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, வேட்கை யென்னும் அஷ்டவித துர்க்குணங்களிலும் மனதைச் செலுத்திக்கொண்டு பல விடத்திற் கலகம்புரிந்து, அண்டைவீட்டு சண்டை கண்குளிரப் பார்ப்பதே தமாஷாயிருக்குமெனும் மூடத்தனத்தை முன்னிட்டு ஊராருடமைக்குப் பேயாய்ப்பறப்பதும் பொறாமைப்படுவதும், நயவஞ்சகம், கெடுதோஷித்தனத்தையெல்லாம் பந்துஜன மித்திரர்போல சொந்தம்பாராட்டி அவனைக் கெடுப்போம் இவனைக் கெடுப்போமென்னும் வீணெண்ணங்களை மனதில் வகித்து யாரையும் பிழைக்கவிடாமல் பாபகிர்த்தியம் புரிந்து பழிதேடிக்கொண்டு ஜனனங்கள்தோறும் பலவித துயரனுபவிப்பார். (இவர்கள் தான் அதமர்.)

ஆகையால், என தன்பார்ந்த நண்பர்காள்! ஒரு தாய் வயற்றிற் பிறந்த பிள்ளைகளில் ஒருவன், அரண்மனை உத்தியோகம் புரிந்து, ஐந்நூறு, அறுநூறு விராகன்சம்பாதித்து மனைவி மைந்தருடன் சுகானந்தமாயிருப்பதும், மற்றொருவன் கைத்தொழில் புரிந்து தினம் தினம் நாலணா, ஐந்தணா, சம்பாதித்து அப்போதைக்கப்போது வயற்றை வளர்த்துக் கொள்ளுவதும் இன்னொருவன் அன்னமோ ராமச்சந்திராவென அன்னக்காவடியாய்த் திரிந்து அலைச்சற்படுவதும் வேறொருவன்வயற்றை வளர்ப்பதற்குத் தெரியாமல் குத்து கைஅடியுடன் கண்ட விடத்தில் திருடி சிறைச்சாலையில் அவதிப்படுவதும் இவர்களால் நேர்ந்தனவோ? அல்லது தாயினால் நேர்ந்தனவோ வென்பதை புத்திமான்கள் கவனித்தால் யான் சொல்லாமலே எல்லோருக்கும் தெள்ளிதாய் விளங்கும் அஃதெவ்விதமெனின்.

வெண்பா.

மாலைப்பொழுதன்று மஞ்சளரைத்தே குளித்து
வேலைமெனக்கெட்டு விழித்திருந்து—சூலாகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானாலென் செய்வாள் பின்.

என்னுந் தன்மையாய் தாயானவள் பிரயாசையுடன் பிள்ளைகளைப்பெற்று அவர்கள் சீராகப் பிழைக்கவேண்டுமென்று வித்யாசாலையில் விடுத்து கல்விகற்பிக்கச் செய்தால் சிலர் "தாய்

சொற்றுறந்தால் வாசகமில்லை" யென்னுந் தன்மையாய் வித்யா சாலையிற்சென்று கல்வியை கற்றுக்கொண்டு பெருந்தன்மையா யிருந்திடில் நல்ல உத்தியோகஞ்செய்து நாலு துட்டு சம்பாதித் துத் தாய்தகப்பனையும் காப்பாற்றுவான் தானும்சீராக பிழைப் பான். அவ்விதமின்றி, அடீ போடீபோ பெற்றுவிடமாத்திரம் தெரியும் வளர்க்கத் தெரியாதோ? கூலிவேலை செய்தாவது சோறு போடென்று ஏமாற்றி தின்றுக்கொண்டு விளையாடித் திரிந் தால் அவன்கதி ஆபத்தாய் முடியுமல்லவோ அப்பால் தன்னைப் போன்ற மனிதர் நல்ல உத்தியோகஞ்செய்து திரவியங்களை சம் பாதித்து மனைவி மைந்தருடன் சுகானந்தமா யிருந்தால், அவர் களைப் பார்த்து வயரெறிந்து, ஐயோ!

கட்டளைக் கலித்துறை.

அள்ளிக்கொடுத்திடும் செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற நாளையிலே யென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.

என்று விசனப்பட்டழுதால் முடியுமா அதுபோலவே ஜீவர் கள் பிராரத்வத்தில் செய்வதெல்லாம் அநியாய அக்ரம பாபத் தொழிலை யனுசரித்து ஆண்டவனுக்கு விரோதமாய் ஜீவர்களை வருத்தப்படுத்திக் கொண்டிருந்து, பழிபாவங்களை மூட்டை கட் டி வைத்துக்கொண்டும் சஞ்சிதத்திற் சரீரமெடுத்து கஷ்ட நிஷ் டூரமடைந்துக் கலங்கும்போது, ஐயோ கடவுளே உனக்குக்கண் ணில்லையோ யான் இப்படி அவதிப்படுகின்றேனே யென்றால் வி னை சம்பந்தம் விட்டுப்போகுமா? இவை யனைத்திற்குங்காரணம் * மனதுதான். இந்த மனமென்னும் புரவிக்குப் பஞ்சேந்திரிய மென்னும் சேணம் தொகுத்து சித்தமென்னும் கடிவாளமிட்டு அறிவானந்தன் கையிற் கொடுத்து ஞானமார்க்கமாய்ச் சென்று ஆத்மலாபம் தேடிக்கொள்வாயென்று ஆண்டவன் விதித்திருப்ப தால், அறிவானந்தன் பக்தியென்னும் கொறடாவினால் திடவை ராக்கியமென்னும் ஞான பார்வையுடன் மனமென்னும் புரவியை த் தட்டிக்கொண்டு ஞானமார்க்கமாய்ச் சென்றிடினும் மாயையெ

* மனதென்பது ஒரு பொருளல்ல, நினைப்பதை மனனஞ் செய்வது மனதென்னும் பெயராயின.

னும் இருள்சூழ்ந்திடில் அறிவானந்தன் வைராக்கிய பார்வையற்று மயங்கி நின்று பக்தியென்னுங் கொறடாவையும் சித்தமென்னும் கடிவாளத்தையும் கைநழுவ விடுத்திடுவான். அச்சமயம் மனமென்னும் புரவி பேயைப்போற் பறந்து அஷ்டவித துர்க்குணத்திலும் பஞ்சமாபாதகங்களிலும் போய்விழுந்து பழிபாபத்தைத்தேடி சரீரத்திற்கு பலவித துன்பம் விளைக்கின்றன. அச்சமயம் ஆன்மாவுக்கும் பலவித சஞ்சலமே தோற்றும் மற்றவையனைத்தும் விவரித்துரைப்பின் இவ்வேடிடங் கொள்ளாதாகையினால், இனி பூலோகத்தில் ஒவ்வொருவரும் ஊழ்வினையென்னும் பிராரத்வகர்மானுசாரத்தினால் சஞ்சிதத்தில் அனுபவித்த கஷ்டநிஷ்டூரங்களும் அறிவினால் ஆபத்தையகற்றி இன்ப சுகானந்தமெய்திய விநோதமும் கதாசாரமாய்ப்புகலுதும் கவனிப்பீராக.

இங்ஙனம்,

கவிராஜ கந்தசாமி பிள்ளை.

உ

# திருச்சங்கு ராஜன் கதை.

அவனியிற் சிறந்த நங்நகரென அறிஞர்களாற் புகலருங்கீர்த்திவாய்ந்த அயோத்தியா புரியினைப் பரிபாலனஞ்செய்யும் திரிச்சங்கு ராஜன் தனது சிம்மாசனத்தமர்ந்து அரசுரிமை புரிகையில் ஓர்நாள் தமது குருநாதனாகிய வதிஷ்டர் பிராப்தமாகி ஆசிகூற திருச்சங்கு ஆசிரியன் மலரடியில் வீழ்ந்து பணிந்து சுவாமி! அடியேன் இச்சரீரத்துடன் சுவர்க்கலோக மனுக கிருபை புரிந்தருளல்வேண்டுமென்க, வதிஷ்டர் புந்நகை புரிந்து வேந்தே "கிட்டாதாயின் வெட்டெனமற" என்பதுபோல அவ்வீணெண்ணத்தை மறந்திடுகவென்றனர். அரசன் ஆலோசித்து, சுவாமி! குருகடாக்ஷ மிருக்குமாயின் கிட்டாதபொருளேதேனுமுண்டோவென்றனன். வதிஷ்டர் முனிந்து மன்னுபிராரத்வகர்மானுசாரம் சரியா யமைந்திடில் சஞ்சிதத்திற்றானே கிடைக்கும். உனக்கு ஊழ்வினைப் பயன் அவ்வளவு வலுவானதல்ல, இதைக்குறித்துப் பேராசைபடலாகாதென சொல்லிவிட்டுப்போயினர். திருச்சங்கு ராஜன் விசனமுற்றவனாயிருந்தனன். அச்சமயம் விஸ்வாமித்திரர் ப்ராப்தமாயினர், அவரைக்கண்டு வணங்கி ஆசனந்தந்து அமர்ந்தருள்வீரென நமஸ்காரம் புரிந்தனன். "அகத்தின் குறிமுகத்திற்றெரியுமென்பதுபோல" திரிச்சங்கு ராஜன் மனவருத்தத்தைக் கவனித்த விஸ்வாமித்திரர் மிகவும் பரிதாபமுற்றவர்போல அவனை அருகி லழைத்து மாநிலம் புகலருங்கீர்த்தி வாய்ந்த மஹாராஜேஸ்வரா! செந்தாமரைக் கமலம்போற் றேஜஸமைந்த நின் முகாரவிந்தம் இத்தினம் யாதுகாரணத்தால் பருதியின் வெப்பத்தாற் றீய்ந்துலர்ந்த சரசென வதங்கி இருக்கின்றனவென்று வினவினர். திருச்சங்குராஜன் தனது மனவருத்தத்தையும் வதிஷ்டர் புகன்றவையும் தெள்ளிதாய்ப்புகன்றனன். அத்தருதி விஸ்வாமித்திரர் கலகலவென சிரித்து சபாஷ்! வேந்தே! ஒன்றுக்கு முதவா தவனை ஆசிரியனாக மதித்த உனக்கு யாதேனுங் கைவல்யமாகுமா? ஒருக்காலும் முடியாதுதான் ஆனால் என்னையே நீ குருவென மதித்திடுவாயாகில் நானேயதினமே உன்னை இந்த சரீரத்துட

னே சொர்க்கபதியிற் போய் இராஜரீகம் புரியும்படியாய்ச் செய் வேனென்று, வதிஷ்டர் மீதிருக்கும் பகையினால் தன்னைத்தானே புகழ்ந்து தனது சமர்த்தை வெகுவாய்ச்சிலாகித்துச்சொன்னார். "இவ்வார்த்தையைக் கேள்வியுற்ற திருச்சங்கு ராஜனுக்கு எவ்வ ளவு சந்தோஷம் உண்டாயிருக்குமோ இதைவாசிக்கும் அறிஞர் களே கவனித்துக்கொள்வாரென மதிக்கின்றேன்" அத்ததி அம் மன்னன் ஆனந்த சாகரத்தில் மூழ்கியவனாய்க் குதித்துக்கூத்தா டி சிரமேற்கரங்குவித்து விஸ்வாமித்திரரைப் பலவிதமாய்ப் புக ழ்ந்து சுவாமி! யான் இத்தினமே புனிதனாயினேனென்று மனக் களிப்புற்றிருந்தனன். விஸ்வாமித்திரர் வதிஷ்டர்மீது வீராப்பு கொண்டு நாளைக்கே திருச்சங்கு மன்னனை சொர்க்கபதவிக்கு அனுப்பவேணுமென்று வனத்திற்சென்று தனது வழக்கப்படியே தப நிலையிலிருந்து விட்டனர். அப்பால் வதிஷ்டர் அரண்மனையில் வந்தவுடனே திருச்சங்குராஜன் மரியாதை செய்யாமல் இறுமாப் புடனிருந்தனன். இதனைக் கவனியாத வதிஷ்டர் வேறுவிதமாய் மதித்து, மன்னா! ஏன் வீணெண்ணங்கொள்கிறாய்? நீ இந்த சரீரத் துடன் சொர்க்கலோக மணுகமுடியாது. இனி அந்த ஆசையை விடுத்து உலகாசையைவகித்து சந்தோஷமாயிருப்பாயென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற திரிச்சங்குராஜன் கலகலவென சிரித்து ஐயா வதிஷ்டரே உம்மைப்போன்ற குருவிருந்தால் முடி யாது தான் யான் இன்றுமுதல் விஸ்வாமித்திர மஹா ரிஷியை குருவாய் மதித் திருப்பதால் அவர் என்னை நாளையதினம் யான் கோரியபடியே அவருடைய மகிமையினால் என்னை உயிருடனே சொர்க்கபதவிக்கு அனுப்புவார். இனி நீர்வந்தவழியைப் பார்த் துக்கொண்டு போவீரென்றனன். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற வதிஷ்டமஹாரிஷிக்குக் கோபம்பெருகி அடடா குருத்துரோகி நீ இன்றுமுதல் நீசனாய்போகக்கடவதென சபித்தனர் மஹான் களின் வாக்கியம் பழுதுறுமல் அரசனுடைய களைமாறி நீச வடிவ மாய் விடவே தேவர்களெல்லோரும் விசன மடைந்தனர். அரண் மனையிலிருப்பவரும் அதிக சஞ்சல முற்றவராயினர். மறு தினத் தில் விஸ்வாமித்திரர் வந்து தனது தபோபலத்தினால் தேவ விமா னத்தை வரவழைத்து திருச்சங்குராஜனை அதன்மீதிலேற்றி சுவ ர்க்கபதவிக்குப் போவாயென்று சுகீபவாவென ஆசீர்வதித் தனுப் பினர்.

அப்பால் திருச்சங்குராஜன் ஜெயம் ஜெயமென்று விமானத்தின் மீதமர்ந்து தேவலோகத்தை நாடிச் செல்லும்போது தேவர்களனைவரும் திடுக்கிட்டு அடடா! ஈதென்ன விபரீதம்? அடடா! நீசா நீ இங்குவரலாகுமோ வென்றதட்ட திருச்சங்குராஜன் அமரரை அதட்டி நீங்கள்கேட்கவேண்டியதென்ன விஸ்வாமித்திராக்ஞையினால் வருகிறேனென்று சொர்க்கபதியருகில் நெருங்கின உடனே தேவர்களனைவரும் அடடா! கிஞ்சிற்றும் அஞ்சுதலின்றிய குருத்துரோகி நீ வதிஷ்டரால் நீசனாய்ப்போக சாபம்பெற்றும் மனோகர்வத்தை விடாமல் மஹான்களாற் புகலரும் கீர்த்தி வாய்ந்த தேவலோகத்திற்கு வரத்தகுமோவென கடுகடுத்து விமானத்தைக் குப்புற விழத்தள்ளினார். அச்சமயம் அவன் ஆரோகணித்து வந்த விமானம் கீழ்மேலாய்த் தலைகீழாய்புரண்டுருண்டு பூமியை நாடிவருகையில் திருச்சங்குராஜன் மனந்தடுமாறி ஐயையோ விஸ்வாமித்திர மஹாரிஷியேயென்று கூச்சலிடுவதற்கும் நேரமின்று கவுசிகா அபயம் கவுசிகா அபயம் அபயமென்று பெருங்கூச்சலிட்டுக்கொண்டிருப்பதைக் காணிற்றபம்புரியும் விஸ்வாமித்திரர் கேள்வியுற்று கோபாக்னி ருத்திரன்போற் சினந்து அஞ்சாதே திருச்சங்குமன்னா அஞ்சாதே திருச்சங்குமன்னா வென அதி தீவிரமாய்கூடி விமானத்தைத் தனது இடது கையினால் பிடித்து ஒரே பாய்ச்சலாக சொர்க்கபதி யருள் என்று நக்ஷத்திரமண்டலத்தில் விமானத்தை நிறுத்தி இத்தகியே யான் இந்த தேவர்களை யெல்லாம் மாற்றிவிடுகிறேன் நவககிரகங்களையும் அஷ்டவசுக்களையும்மாற்றி வேறுவேறாய்ச் சிருஷ்டித்து விடுகிறேனென்று வீராவேசமாய்ச் சொல்வதைக் கேள்வியுற்ற தேவர்களனைவரும் மனமிரண்டு ஐயையயோ இனியாது தீது விளையுமோவென மனந்திகைத்து விஸ்வாமித்திரரைப்பணிந்து சுவாமி! உமது சிஷனுக்கு அந்தர சொர்க்கமாவது தருவீர் எங்கள்மீது கோபிக்கவேண்டாமென்று சிறமேற் கரங்குவித்து அஞ்சலியஸ்திராய் வேண்டுகையில் விஸ்வாமித்திர மஹாரிஷி மனமிரங்கி தேவர்கள் மீதுள்ள சீற்றத்தைத் தணித்து அவர்கள் புரிந்த குற்றத்தையும் மன்னித்து திருச்சங்குராஜனுக்கு அந்தரசொர்க்கமளித்து அப்பா! நீ ஜனனமரணோபாதையின்றி இங்ஙனமே வீற்றிருப்பாயென்று ஆசீர்வதித்தனர். அச்சமயம் திருச்சங்குராஜன் விஸ்வாமித்திரரைப் பணிந்து சுவாமி யான்தான் இவ்விதமாயிருந்திடினும் தனது புத்

திரனுகிய அரிச்சந்திரனுக்காயினும் சரீரத்துடன் சொர்க்கபதவி யடையும்படி அனுக்கிரகஞ்செய்திடல் வேண்டுமென பிரார்த்தித்தனன். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற விஸ்வாமித்திருக்குச் சந்தோஷம் பெருகி அப்பா! திருச்சங்குமன்னு நீகேட்ட வரத்தின்படியே கொடுத்தேன். ஆகையால் உன் புத்திரனுகிய அரிச்சந்திரனுக்கு பிராரத்வகர்மானுசாரம் வலுவில்லாமல்போனுலும் சஞ்சிதத்தில் உன்னுடைய தபத்திற் பாதியாகிலும் கொடுத்து அவனுடைய மனைவிமைந்தருடன் சரீரத்துடனேசொர்க்கப்பதவியணுகும்படியாய்ச்செய்து விடுகிறேனென்று திருச்சங்குராஜனுக்கு வரங்கொடுத்து விட்டுத் தமது வாச்ஸ்தானத்திற்குச்சென்று தபஞ்செய்துக் கொண்டிருந்தனர்.

## படிப்பினை.

நாம் இந்தக் கதையில் கவனித்ததென்ன சரீரத்துடனே திருச்சங்குராஜன் சொர்க்கலோகமணுக ஆவலுற்றுத் தனது குருநாதனைக்கேட்க அவர் மறுத்தது நீதியோ அநீதியோவென்று மவுனமாயிருந்திடில் வசிஷ்டர் எவ்விதத்திலேனும் அவன் கோரிக்கை நிறைவேற்றுவர் அதையும் வெறுத்து தனது குருவின் பகைஞனை ஆசிரியனுய் ஏற்படுத்தி சொர்க்கலோகமணுக வரம்பெற்றுனும் ஆதிகுருவை அவமதித்ததினுல் தனக்கு அந்தரசொர்க்கம் கிடைக்கும் பாக்யமிருந்தும் நீசனுய்ப்போக சாபம்பெற்றுன்.

ஆகையால் உலகிற் ஜனித்த மாந்தர்கள் புதியகுருவினுல் எவ்வளவு தனக்கு மேன்மை கிடைத்திடினும் பழைய குருவை மறக்கலாகாது.

# அரிச்சந்திரன் கதை.

இன்னம் ஆயோத்தியபுரி பரிபாலனஞ்செய்திருந்த திருச்சங்குராஜன் அந்தரசொர்க்கமணுகிய பின்னர் அமைச்சர்கள் ஆலோசித்து அவனுடைய புத்திரனுகிய அரிச்சந்திரனையே அரசுரிமைக்குச் சுதந்திரஞ் செய்யவேண்டுமென்று அறியாச் சிறுவனுயிருந்தபோதிலும் பெரிதல்லவென்று ஆலோசித்துக்கொண்டிருக்கையில் தமது வழக்கப்படியே வசிஷ்டர் அரண்மனையில் வருகலாயினர். அச்சமயம் அரிச்சந்திரன் அவர்திருவடியில்வீழ்ந்து பணிந்தனன்

அவர் கருணைகூர்ந்து சுகீபவாவென் றாசீர்வதித்து ஆசனத்தி லமரச்செய்தனர். பின்னர் மந்திரிகள் வதிஷ்டரைநோக்கி சுவாமி! இந்நகரினைப் புரக்கும் மன்னன் சொர்க்கபதியிற்போய்ச் சேர்ந்தனரே இத்தறி இந்நகரினை பரிபாலனஞ் செய்வதற்கு ஓர் அரசனை ஏற்படுத்தல் வேண்டுமென பிரார்த்தித்தனர். அமைச்சர் வாய்மையைக் கேள்வியுற்ற வதிஷ்டர் ஆலோசித்து நீவிர் நவின்றதுண்மையே மன்னனின்றிய நகர் மயானம் போலாகுமெனும் மூத்தோர் வாக்கியம் பிசகாது. ஆகையால் இந்நகரிற்கு ஓர் மன்னனை நியமித்தல் சிரேஷ்டமென மதித்து அருகி லிருக்கும் அரிச்சந்திரனைப் பார்த்து இவன் இளவயதமைந்தவனு யிருந்திடினும் இராஜநீகத்திற் குரியவனே யாகுமெனத் தீர்மானித்து ஓர் சுபதினத்தில் அரண்மனையை சிங்காரிக்கச்செய்து அரிச்சந்திரனுக்கு மங்கள ஸ்நானஞ் செய்வித்து ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்துக்கொண்டு வரச்செய்து சிம்மாசனத்தி லமர்த்தி செங்கோலை கரத்திற்றந்து நவரத்தினகசித மணிமகுடத்தை கரத்திலேந்தி சுகீபவாவென ஆசீர்வதித்து அரிச்சந்திரன் சிரசிற்சூடி அக்ஷதைத் தூவினர். அருகி லிருந்த அமைச்சராதியோரனைவரும் மனமகிழ்வெய்தினர். அரிச்சந்திரன் குருவிஸ்வாச முறைபிறழாது வதிஷ்டர் திருவடியிற் பணிந்து சுவாமி, அடியேன் அறியாச்சிறுவனுச்சுதே இந்த இராஜ்யபாரத்தைத் தாங்கமுடியுமோவென்று மிகவும் பரிதாபமாய்ப் புகன்றனன். கருணாநிதியாகிய வதிஷ்டர் கருணைகூர்ந்து அப்பா! அரிச்சந்திரா! அரசு புரிவது ஆச்சரியமல்ல. காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாச்சரியம் இடும்பை, வேட்கையென்னும் அஷ்டவிததுர்க்குணங்களையுமகற்றி பொய்சொல்லுதல், களவுபுரிதல், அநியாயமின்றி கொலைசெய்தல், கட்குடித்தல், பிறர் பொருளை இச்சித்தலென்னும் பஞ்சமாபாதகங்களையும் அருகில் வரவொட்டாமல் தடுத்து ஞானமார்க்கத்தினை யனுசரித்து மனையாளுடன் இல்வாழ்க்கையிற் பிரவேசித்து சுபகர்மங்களனைத்தும் வழுவின்றி நடாத்தி துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனனுயிருந்திடில் அரசர்க்கினமின்றி அவனியைப் பரிபாலனஞ்செய்துக்கொண்டிருப்பாய். பாபிகளை தண்டிக்கும் எமதர்மராஜனும் அக்கினி ஆற்றின்மேல் அந்தர சிம்மாசனமிட்டு வலதுகாலைச் சந்தனக் குழம்பின் கிண்ணத்திலும் இடது காலை அக்கினி குழம்பின் கிண்ணத்திலும் வைத்து சிரசின்மேல் மிருதுவான ஓர் மயிராற் கட்டிதொ

ங்கவிட்டிருக்கும் மலையின்கீழ் மணிமகுடஞ் சிரசிற்சூடி எமலோகத்தில் அரசு புரிகின்றார். அவ்வித நியாய நட்பத்தை யனுசரித்திருப்பவர்கள்தான் இகத்திற்கீர்த்தியும் பரத்தில் முக்தியுமடைகுவாரென்று போதித்துவிட்டுத் தமது வாசஸ்தானத்திற்குப் போய்விட்டார்.

அப்பால் அரிச்சந்திரன் ஆசிரியன்சொற்படியே துர்க்குணமனைத்தும்தனக்குப்பகையெனமதித்து சாந்தசீலனாய்தனது அமைச்சர்களாகிய சகுணன் சத்தியகீர்த்தியெனும் மந்திரிகளுடன் சிம்மாசனத்தமர்ந்து குடிகளிடம் அறிலோர் கடமையேற்று, தானதர்ம பரோபகாரமனைத்தும் வழுவின்றிபுரிந்து துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனனாய் சிற்றரசர் திறைசெலுத்த தீரவீரப்ரகாசமாய் இராஜரீகம் செய்துக்கொண்டிருந்தனன்.

இவ்வனம் நிற்க கன்னமாபுரி மன்னனாகிய மதிதயமகாராஜன் மகப்பேறின்றி மனையாளுடன் மலைவனமணுகி மஹாதபம் புரிகையில் பரமன் பிரசன்னமாகி வேந்தே உனக்கு கற்புநிலைவழுவுறாத உத்தமபுத்திரி ஜனித்திடுவாளென வரமளித்தோம்அச்சிசுபிறந்து வளர்ந்து கன்னிப்பருவமாயினபின் அவள்கழுத்திலிருக்கும் மங்கிலியத்தை யாவனொருவன் காண்கின்றானோ அவனுக்கே அவளை மணஞ்செய்திடுகவென வரமளித்து மறைந்தனர். மதிதயன் மனையாளுடன் தபநிலை விடுத்தெழுந்திருந்து பரமனைத் தியானித்து சிவயநமஃவெனும் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டே வனத்தைவிடுத்து அரண்மனையில்வந்து இல்லறமார்க்கத்திற் பிரவேசித்திருக்கையில் மஹாராணி கர்ப்பவதியாகி தசமதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் பாலசந்திரோதயம்போற் பிரகாச தேஜஸமைந்த ஓர் பெண் குழந்தையைப்பெற்றனள். அரசன் முதலனைவோரும் ஆனந்த பரவசமடைந்தவராய் சந்தோஷித்து சந்திரமதியென பெயரிட்டு மிகவும் மேன்மையாக வளர்த்துக்கொண்டிருந்தனர். சந்திரமதி நாளுக்குநாள் வெகு மேன்மையாய் வளர்ந்து ஐந்து வயதான பின்வித்யாசாலையிற்சென்று போதகாசிரியனால் எழுத்து, அசைச், சீர், தளை, இலக்கண இலக்கிய சாராம்ஸமனைத்தும் தெள்ளிதாய்க் கற்றுணர்ந்து பனிரெண்டாவது வயதில் பருவதிசையுடைந்தனள். மதிதயராஜன் மனமகிழ்ந்து சுயம்வரப்பந்தல்ஜோடித்து சகல தேசமன்னர்களையும் வரவழைத்து தனது குமாரத்தி

யாகிய சந்திரவதியின் கரத்தில் மலர்மாலையைத்தந்து உனது மனதிற் கிசைந்தமணாளன் கழுத்திற் சூடுவாயென்னவே அரசர்களனைவரும் ஆசையாயிருந்தனர். அப்போது அயோத்திபுரி மன்னனாகிய அரிச்சந்திரனும் சென்றிருந்ததினால் மலர்மாலைதாங்கிவரும் சந்திரவதியைக்கண்டு ஆச்சரியமடைந்தவனாய் ஆ! ஹா! பார்த்தீர்களா! இராஜராஜாக்களே இந்த மதிதயமஹாராஜன் நம்மையெல்லாம் அவமானஞ்செய்வதற்கு வரவழைத்து மங்கிலிய மணிந்த பெண்ணின் கழுத்தில் மலர்மாலைகொடுத்தனுப்பி யிருக்கின்றாரே ஈதென்ன மோசடி யென்று நகைத்தனன். அருகிலிருந்த அரசரெல்லாம் ஆச்சரியமடைந்து ஈதென்ன இவ்விதமாய்ப் புகல்கின்றீரே. அந்தக் கன்னியின் மங்கிலியத்தைக்காண்கிலோமேயென்று சொல்லிக்கொண்டிருந்தனர். இச்சங்கதியைக் கேள்வியுற்ற மதிதய மஹாராஜனுக்குப் பரமன் புகன்றவை ஞாபகம்வந்து. ஆம் ஆம் அரிச்சந்திரமன்னன் புகன்றதுண்மையேயென்றுபரமன்கொடுத்த வரத்தையும் விபரமாய்ப்புகன்று சந்திரவதியின் கழுத்திலிருக்கும் காணுமங்கிலியத்தை கண்ணுற்றவர்களே கலியாணஞ்செய்துக் கொள்ளவேண்டியதென தீர்மானஞ்செய்து விட்டனன். சந்திரமதியும் மற்ற அரசர்களை மதித்திடாமல் அரிச்சந்திரனே புருஷனெனக்கருதி அவன் கழுத்தில் மலர்மாலை சூடினள். அப்பால் மதிதயமஹாராஜன் தனது குமாரத்தியாகிய சந்திரவதியை அரிச்சந்திர மஹாராஜனுக்குக் கலியாணஞ்செய்து சீதனவரிசையனைத்தும் வெகு விமரிசையாய்க் கொடுத்தனுப்பினன்.

அப்பால் அரிச்சந்திரன் தனது பத்தினியுடனே கன்னமாபுரியைவிடுத்து அயோத்தியாபுரியில் வந்து தனது மனைவியுடன் சுகானந்தமாய் வாழ்ந்திருக்கையில் சந்திரவதி கர்ப்பவதியாகி தச மதியும் நிறைந்து ஓர் சுபதினத்தில் ஆண்குழந்தையைப் பெற்றனள். அரிச்சந்திரன் ஆனந்தபரவசமடைந்து லோகிதாஸனென பெயரிட்டு வெகு மேன்மையாய் வளர்த்துக்கொண்டிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமாயிருக்கையில் தேவலோகத்தில் யாவரும் சேர்ந்திருக்கையில் தேவேந்திரன் சபையோரைப் பார்த்து ஐயா! பூலோகத்தில் பொய்சொல்லா மன்னர்கள் யாவரேனுமுளரோவென்றுவினவினர். அருகிலிருந்தவசிஷ்டரெழுந்து நின்று புரந்தரா பூலோகத்தில் தனது சீஷனாகிய அரிச்சந்திரனை

ருவனே அஷ்டவித துர்க்குணத்திலும் பஞ்சமாபாதகத்திலும் சிக்காமல் சுத்தாத்மாவா யிருக்கின்றனன். அவனையன்றி மற்றொருவனை சொல்வதற்கு முடியாதென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அமரேந்திரன் சந்தோஷித்து சுவாமி அத்தகைய உத்தமனை சிஷனுய் வகித்து உமது மகிமை யானென்ன வென்றுரைப்பேனென்று அவரை வெகுவாய்ப்புகழ்ந்து சபையோர்காள்! இம்மஹானுக்கு நீங்க ளனைவரும் வந்தனுபசாரம் புரிதல் வேண்டுமெனப்புகன்றனர். இந்திரன் இவ்விதமாய்ச் சொல்லி வாய்மூடு முன்னமே அங்ஙனமிருக்கும் விஸ்வாமித்திரருக்குப் பொறுமை யதிகரித்துக் கோபாக்கினி ருத்திரன்போற்சினந்து அப்பா வதிஷ்டா அந்த அரிச்சந்திரனே பொய்யனுச்சுதே அவனை மெய்யனென்றப்படிப் புகழ்ந்தன யென்று தொடுவழக்காடினர். அப்போது சபையிலிருந்த நாரதரெழுந்து ஐயா! நீங்கள் இவ்விதமாய் சண்டைதொடுப்பதினல் பிரயோசனமில்லை அந்த அரிச்சந்திரன் வாயினல் பொய்வருவிப்பவர்யார்? பொய்வராமற்படி செய்பவர்யார்? இதற்கு பந்தயமென்ன தெரிவிப்பீரென கலகத்தை விளைத்துவிட்டனர். அப்போது வதிஷ்டரெழுந்திருந்து சபையோர்களே அரிச்சந்திரன் மாத்திரம்பொய்மொழி புகன்றால் எனது தாடிமீசையனைத்தும் சிறைத்துவிட்டு தபசிலையணுகாமல் சிரமேற் கட்குடத்தை யெடுத்துக்கொண்டு தென்திசை மார்க்கமாய்ப் போய்விடுகிறேனென்று சபதஞ்செய்தனர். விஸ்வாமித்திரரெழுந்து தேவர்களே அந்த அரிச்சந்திரன் வாக்கினல் பொய்சொல்லாமல்படி செய்வேனுகில் என் தபத்திற்பாதி அரிச்சந்திரனுக்குக் கொடுத்துவிட்டு அன்றைய தினத்திலிருந்து வதிஷ்டனை அவமதியாமல் வணங்கி நடப்பேனென்று சபதஞ்செய்துவிட்டு இந்த வதிஷ்டனை அயோத்திக்குப் போகாமலிருக்கும்படி சொல்வீரென்றனன். வதிஷ்டரும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து தேவலோகத்திலேயேயிருந்தனர். விஸ்வாமித்திரரெழுந்து தேவர்களே உங்களில் யாவரையேனும் ஓர் சமயத்தில் நினைத்தால் தடைசொல்லாமல் வரவேணுமென்று பிரார்த்தித்துக்கொண்டு அயோத்தியிற்சென்று அரிச்சந்திரன் வாயில் பொய் வருவிக்க வேணுமெனும் ஆலோசனை யாகவே யிருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் நிலை இவ்விதமாயிருக்கையில் அயோத்தியாபுரியைப் பரிபாலனஞ்செய்யும் அரிச்சந்திர மஹாராஜன்

தனது புத்திரனாகிய லோகிதாஸனுக்கு வித்தியாப்பியாசஞ்செய்
வதற்காக ஓர் சுபதினமேற்படுத்தி ஆசிரியனுக்கு தக்ஷிணை தாம்
பூலம் சமர்ப்பித்து லோகிதாசனை வித்யாசாலையில் விடுத்து தா
னதர்ம பரோபகாரம் புரியுந்தருணம் விஸ்வாமித்திரர் இதுதான்
சமயமென்று அதி தீவிரமாய் அரண்மனையில் வந்தனர். அரிச்
சந்திரன் அவருக்கு நமஸ்காரம் புரிந்து ஆசனமளித்தனன். அச்
சமயம் உதட்டில் உறவும் மனதிற்பகையும் வகித்திருந்த விஸ்வா
மித்திரன் அரிச்சந்திரனுடைய நற்குணத்தை வெகுவாய்ப் புகழ்
ந்து இவன் பொய்யுரையா மன்னனென்பதற்குச் சந்தேகமில்லை
யாம் எவ்விதமாய் இவன் அசத்தியனாய்ச் செய்வதென ஆலோ
சித்து, வேந்தே யான் ஓர் வேள்வி நடத்தவேண்டுமென்றனர்.
அரிச்சந்திரன் சம்மதித்து சுவாமி! தேவரீருக்கு எவ்வளவு பொன்
வேண்டுமோ தெரிவித்தீராகில் இச்சமயமேதருகிறேனென்றனன்.
விஸ்வாமித்திரன் மனமகிழ்ந்து, வேந்தே! யானையின் மீதிலேறி
ஓர் போர்வீரன் கரத்தில் தனுசையேந்தி அதில் கவண்தொடுத்து
ஆகாயமார்க்கத்திலெறிந்தால் எவ்வளவுதூரம் போகிறதோ அவ்
வளவு திரவியம் வேண்டுமென வினவினர். அரிச்சந்திரன் அவ்
விதமே கொடுத்தனன்.

அப்பால் விஸ்வாமித்திரர் அரசனிடம் வாங்கிய திரவியத்
தை பிறகு வாங்கிக்கொள்வோமென்று அவனுடைய பொக்கி
ஷத்தில் வைத்திருக்கும்படியாய்ச் சொல்லிவிட்டு கானிற்சென்று
மிருகங்களை உற்பத்திசெய்துவிட்டனர். அவைகள் நகரிற் பிரவே
சித்து பயிர்களை அழிக்க நகரவாசிகள் மன்னன்பாற் றெரிவித்த
னர். அரிச்சந்திரன் தனது அமைச்சருடன்வேடவில்லியரை அழை
த்துக்கொண்டு கானிற்சென்று மிருக வேட்டையாடுகையில் விஸ்
வாமித்திரரேவிய ஓர் பன்றியானது சேனைகளையெல்லாம் சின்ன
பின்னஞ் செய்வதைக்கண்ட அரிச்சந்திரன் அதனையும் அடித்துத்
துரத்த விஸ்வாமித்திரன் இரண்டு நீசமாதர்களை சிருஷ்டித்து
அனுப்ப அவர்கள் அரிச்சந்திரன் முன்வந்து ஆடல்பாடல் புரிந்
து தம்மை சுகிக்கும்படி வேண்ட அரிச்சந்திரன் கூடாதென
மறுத்துத் துரத்தினன். அந்தப் பெண்கள் விஸ்வாமித்திரர்
முன் ஓடிவந்து சுவாமி எங்களை அரிச்சந்திரன் அடித்துத் துரத்
தினனென்று கோவெனக் கத்தியழுதனர்கள். விஸ்வாமித்திரர்
கோபாக்கினிருத்திரன்போற் சினந்து ஓடோடியும் வந்து அரிச்

சந்திரன் கிரீடத்தை உதைத்துத்தள்ளி அடடா! நீ இத்ததியே இந்தப் பெண்களுடன் சுகித்திடல் வேண்டுமென மிரட்டினர். அரிச்சந்திரன் அவர் திருவடியில் வீழ்ந்து பணிந்து சுவாமி எனது இராஜரீகத்தை உமக்குத் தத்தஞ் செய்திடினும் செய்வே னன்றி இந்த அற்பசுகத்திற் கிச்சித்திடேனென மறுத்தனன். சரி அப்படியானால் தேவர்கள் சாக்ஷியாய்த்தாரைவார்ப்பாயென அவ்விதமேசெய்து கொடுத்துத் தனது அணிபணிதிகளும் கழட் டிக்கொடுத்து தானும் பத்தினியும் புத்திரனும் மந்திரியும் காவி வஸ்திரமணிந்துக்கொண்டு பரதேசி கோலமாயினர். இவர்கள் மன உறுதியைக் கவனித்த விஸ்வாமித்திரர் தான் முன்பு பொக்கி ஷத்தில் வைத்திருக்கும்படி சொன்ன திரவியத்தைக் கொடுப் பாயென்று தொடர்வழக்காடினர். சரி அப்படியானல் ஓர் கூலி யாளை என்னுடன் அனுப்புவீராகில் அந்நியதேசத்திற்சென்று உமது கடனுக்குத் தகுந்த திரவியத்தை வாங்கித் தருகிறே னென்றான். விஸ்வாமித்திரன் சம்மதித்து சுக்கிரபகவானை நினைந் தனர். அவர் பிராமணரூபமாய்வருக அவருக்கு நக்ஷத்திரேச னென பெயர்வகித்து அரிச்சந்திரன் கொடுக்கவேண்டிய பணத் தை வசூலித்துக் கொண்டு வருவாயென்றனர். அவரும் நன் கெனச் சம்மதித்து அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாஸன், சத்தியகீர்த்தியுடனே செல்லும்போது அவர்களை வெகுவாய் இம் சித்து விஸ்வாமித்திரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை இல்லை யென்று சொல்வாயென்று பலவிதமாய்த் தொந்திரவு செய்து அரசனுக்கு அண்ணுந்தாளிட்டும் நெற்றியில் பாராங் கல்லைத் தூக்கி வைத்தும் லோகிதாஸனுக்குக்கிட்டி மாட்டி அநேக வித துன்பங்கள் புரிந்தும் அரிச்சந்திரன் நெறிதவறாமல் தான் கொடுக்கவேண்டிய கடன் உண்மையே காசியில் வந்தால் யாவ ருக்கேனும் அடிமையாகி கடன்கொடுக்கிறேனென்று அழைத்துச் செல்லுந்தருணம் விஸ்வாமித்திரர் அக்கினிபகவானை நினைந்தனர். அவரும் ஓர் பிராமணரூபமாய்வந்து முனிபுங்கவா யாது விசே ஷமென வினவினர். சுவாமி நீர் காசியிற்சென்று சந்திரவதி யையும் லோகிதாஸனையும் விலைக்கு வாங்கிக்கொண்டு அவர்கள் பொய் சொல்லும்படியாய்க் கிருபைபுரிதல் வேண்டுமென்று அ னுப்பினர். அக்கினி பகவானும் தனது பத்தினியாகிய ஜ்வா லாதேவியுடனே காசியில் வந்து காலகண்டன் காலகண்டியெனும்

பிராமணர் காசியாத்திரை போயிருப்பதை ஞானதிருஷ்டியா லுணர்ந்து அவர்களைப்போ லுருமாறியிருக்கையில் அந்த பிரா மண வீதியாய் அரிச்சந்திரன் சந்திரமதியை விலை கூறிக்கொண் டுவருகையில் தான் விஸ்வாமித்திரர் கடனை நக்ஷத்திரேசனுக்கு கொடுப்பதாகச் சம்மதித்து சந்திரவதியை விலைக்கு வாங்கிக் கொண்டு லோகிதாஸனையும் அடாவடி தொடக்குசெய்து அழை த்துக்கொண்டு போயினர். அப்பால் அரிச்சந்திரன் தரகன் கூ லிக்காக தான் விலையாவதற்குத் தயாராயிருக்கையில், விஸ்வா மித்திரர் எமனை நினைக்க அவர் வந்து தன்னை ஏன் அழைத்தீ ரென வினவினர். சுவாமி! நீகாசியில் வெட்டியான் ரூபமாய்ச்செ ன்று அரிச்சந்திரனை விலைக்குவாங்கி அடிமையாகச்செய்து பலவித துன்பம் புரிந்து அவன் வாயில் ஓர் பொய் சொல்லும்படி செய்வீ ரென்றனுப்பினர். எமதர்மராஜன் தனது பத்தினியாகிய சாமளா தேவியுடன் காசியில் வந்து, அங்கு பழமையாயிருக்கும் வீரவாகு செல்லாத்தாயென்னு மிருவரையும் தமது தூதர்களால் இமோற் பர்வதசாரலில் கொண்டுபோய் விடுக்கும்படிசெய்து தாங்களிருவ ரும் அவ்வீட்டில் குடித்தனம்செய்துக்கொண்டிருக்கையில் தரகன் கூலிக்காக சத்தியகீர்த்தி அரிச்சந்திரன் சிரமீது புல்லைவைத்து விலை கூரிக்கொண்டு வருகையில் எமதர்மராஜாவாகிய வீரவாகு வெட்டியான் அரிச்சந்திரனை விலைக்கு வாங்கிக்கொண்டு மயானத் திலுற, பற்பலவித தொழிலனைத்தும் புரியச்செய்து எவ்விதத்தி லேனும் அரிச்சந்திரனைப் பொய்பேசும்படி பிரயாசையெடுத்தும் முடியாமற்போனதினால் எமதர்மனும் சாமளாதேவியும் ஆச்சர்ய மடைந்தனர். அப்பால் அரிச்சந்திரன் வீரபாகுகுறிக்கும் வேலை களையெல்லாம் தவறாமல் செய்துக்கொண்டும் எஜமானுக்கு ஊழி யம்புரியும் தொழிலுக்கு விக்கினம் நேரிட்டால் அசத்யமாகுமே யென அஞ்சிப்பயந்து வீரபாகுவுக்கு கைகால் பிடித்தல் சொல் லும் வேலைகளைத் தவறாமற் செய்வதில் கிஞ்சிற்றும் வழுவின்றி நடந்து வரும்போது ஓர் நாள் புல்லறுக்கையில் கைதவறி அறிவா ளினால் விரலை யறுத்துக்கொண்டு உதிரம்பெருக அழுதுக்கொண் டிருக்கையில் வீரபாகு ஓடிவந்து அடா! அனிச்சா நீ ஏன்னடா! விருதுக்கு வேட்டை யாடுகிறவன்போல வீண் கஷ்டப்படுகின் றனை! இப்போதாகிலும் விஸ்வாமித்திரனுக்கு யான் தானங்கொ டுக்கிறேனென்று சொன்னதில்லையென்று ஒருபொய் சொல்லிவிடு

யானே சாக்ஷியாயிருந்து அயோத்தியாபுரியின் இராஜரீகத்தை உனக்கு வாங்கிதருகிறேனென்று மிகவும் விஸ்வாசமாய்ப் புகன்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அரிச்சந்திரன் தனது கைகளினால் இரண்டு செவியையும் மூடிக்கொண்டு ஐயா! எஜமானே உயிர்போனாலும் பொய்மொழி புகலேனென்றனன். வீரபாகு யோசித்து சரி! சரி! அப்படியானால் மயானத்திற்போய்பிணத்திற்குக் காவலிருவென்றனன். அரிச்சந்திரன் அதற்கும் சம்மதித்து சுவாமி! அடியேன் அத்தொழிலில் எவ்விதமாய் நடந்துக்கொள்வதோ தெரிவித்தல் வேண்டுமென்க அடா! அனிச்சா இது தெரியாதா, பிணங்கொண்டுவருபவர்களிடம் வாய்க்கரசி முழத்துண்டு காற்பணமும் வாங்கி பிணத்தைச்சுடுவது உனக்கென்ன ஒன்றுந் தெரியாதவனாயிருக்கின்றனையே. சரி நல்ல திருக்கட்டும். வாய்க்கரசியை நீ எடுத்துக்கொண்டு காற்பணமும் முழத்துண்டும் எனக்கு அனுப்பிவிடவேண்டியது மோசஞ்செய்தாயாகில் உன்னை இலேசாய்விடமாட்டேனென்று திருடனை மிரட்டுவதுபோல் மாசற்ற குணத்தினனாகிய அரிச்சந்திரனை பயமுறுத்தி விட்டுப்போயினர். அப்பால் அரிச்சந்திரன் ஆண்டையின் உத்திரவின்படியே மயானத்தைச் சுற்றி காவல் புரிந்துக்கொண்டிருந்தனன்.

இங்ஙனம், இவன்கதி இத்தகைய அற்புத ஆச்சரியகாக்ஷியாயிருக்கையில், சந்திரவதியையும், லோகிதாஸனையும் விலைக்குவாங்கிக்கொண்டுபோன காலகண்டையர் அவர்களை வெகுவிததுன்பஞ்செய்துக்கொண்டிருக்கையில் தாயும் பிள்ளையும் சத்தியத்தைக் காப்பாற்றுதல்தகுதியென மனதைரியம்விடாமல் காலகண்டர்வீட்டு வேலைகளையெல்லாம் விமரிசையாய்ச் செய்துக்கொண்டிருந்தனர். இப்படி இருக்க அசலாத்துப் பிள்ளைகளனைவரும் தர்ப்பை சமித்துக்கொண்டுவரும்படியாய்க் காட்டுக்குப்போவதற்காகச்சித்தமாயிருக்கையில் காலகண்டையர் லோகிதாஸனையும் அவர்களுடன் அனுப்பினர். இவர்களனைவரும் கானகமார்க்கமாய் வருவதை விஸ்வாமித்திரர் ஞானதிருஷ்டியா லுணர்ந்து, சிவசுப்ரமணியரை பாம்புருபமாய் ஓர் புற்றினிடமாக வீற்றிருந்து லோகிதாஸன் வந்தவுடனே கடித்துக்கொள்வாயென்று சொல்லிவிட்டுத் தான் ஓர் வழிப்போக்கனைப்போல உருமாறி லோகிதாஸன் முன்வந்து அப்பா! உன்னைப் பார்த்தால் இராஜகுமாரனைப்போ லிருக்கின்றதே நீஏன் இந்த பிச்சைக்காரப் பார்ப்பாரப்பயல்களுடன் வனத்

தில்வந்தனே யென்று கேழ்க்க, அவன் தனது சரித்திர மனைத்தும் விபரமாய்ப் புகன்று எனை அடிமைகொண்ட ஐயருக்காக தர்ப்ப சமித்து கொண்டுபோக வந்திருக்கிறேனென்றனன். விஸ்வாமித்திரர் சிரித்து அப்பா! ஈதென்னகண்சாக்ஷி நீ இப்போதே அயோத்திக்குச்சென்று அந்த விஸ்வாமித்திரனைமிரட்டி, அடா போடா போ எங்க ளப்பன் உனக்கு நாடுநகரம் கொடுக்கவில்லையென்று ஒரு பொய்வார்த்தை சொல்லி துரத்திவிட்டு நீயே அந்நகரினைப் பரிபாலனஞ்செய்துக்கொண்டிருப்பாயென்று சொன்னார். லோகிதாசன் கிஞ்சிற்றும் சம்மதியாமல் ஐயா! அற்பவாழ்விற் கிஞ்சித்தும் பொய்மொழி புகன்றிடோமென்று தடுத்தனன். விஸ்வாமித்திரர் அப்படியாவென்று தலையசைத்து, சரி! உன்னிஷ்டம் யான் பிழைக்கும் மார்க்கத்தைச் சொன்னேன். அப்பால் உனதிஷ்டமென்று பேசிக்கொண்டே பாம்பிருக்கும் புற்றினருகில் அழைத்துச்சென்று இதோ பசுமையான புல் இருக்கின்றது அறுத்துக்கொண்டு போவாயென்று சொல்லிவிட்டுப்போய் மறுபடியும் தவஞ்செய்துக் கொண்டிருந்தனர். அப்பால் லோகிதாஸன் அருகிலிருக்கும் புல் பசுமையாயிருக்கவே அதனைப்பிடுங்குவதற்குப்போய் புற்றில் கையை வைத்தவுடனே அங்கிருந்த சர்ப்பம் இவன் கையைக்கடித்தது, உடனே விஷமேறி அம்மாவென்றலறி பூமியிற் சோர்ந்து வீழ்ந்தனன். அசலாத்துப் பிள்ளைகள் கண்ணீர்விடுத்துக் கதறியழுதுக்கொண்டு சந்திரவதிபின் முன்வந்து சொல்லிவிட்டு அடையாளமும் தெரிவித்துப்போயினர். அவள் புத்திர வாஞ்சையாற் சித்தந்திகைத்து வீட்டு வேலைகளையெல்லாம் தீவிரமாய்ச்செய்து முடித்துவிட்டு காலகண்டையரிடம் செலவு பெற்றுக்கொண்டு காட்டிற்சென்று பிள்ளையைத் தேடும்போது விஸ்வாமித்திரர் வேடனைப்போலுருமாறி வந்து அம்மா நீ யாரென்று விசாரிக்க சந்திரவதி தனது சவிஸ்தாரமனைத்தும் ஆதியோடந்தமாய்ப்புகன்று, அண்ணா! எனது புத்திரனை சர்ப்பங் கடித்துக் கொன்றுவிட்டது இனி அவனை எங்குகண்டு தேடுவேனென் றழுதனள். விஸ்வாமித்திர வேடன் சிரித்து, அம்மா! நீ இப்போது அயோத்தியா புரியிற்சென்று விஸ்வாமித்திரனை மிரட்டி அடா போடாபோ சந்நியாசிபயலே என் புருஷன் உனக்கு இராஜ்யத்தைத் தத்தஞ்செய்யவில்லையென்று ஒரு பொய்மொழி புகன்று அடாவடிதனஞ் செய்வாயாகில் உமது ராஜ்யமும் உங்களுக்குக்

கிடைக்கும் இறந்த பிள்ளையையும் எழுப்பிக்கொடுப்பார். யானும் துணையாய் வருகிறேன் வருவாயம்மாவென்று சொல்ல அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற சந்திரவதி கிஞ்சிற்றும் சம்மதியாமல் அண்ணா! என்பிள்ளை எழுந்துவராமற்போனாலும் யானும்இறந்தாலும் பொய்மொழிபுகன்று கொடுத்ததை இல்லையென்று சொல்லமாட்டோமென்று இறந்தமகனைத்தேடிக்கொண்டு இருள்சூழ்ந்தகானகத்திற்குச்சென்று அசலாத்துப்பிள்ளைகள்குறிப்பித்த அடையாளத்தின்படியே ஆலவிருக்ஷத்தின்கீழிருந்த லோகிதாஸனை எடுத்துக்கொண்டு மயானத்திற்சென்று அங்குசிதறுண்டிருக்குக் கட்டைமுட்டைகளை அடுக்கி பிணத்தைச் சுடுகையில் தான் பதிவிரதையாயிருந்தது மெய்யானால் தனதுமணாளன் இங்குவருகவேணுமென்று நினைந்தனள்.

இங்ஙனம் நிற்க முன்னம் அரிச்சந்திரனை வீரபாகுவுக்கு விற்கிரயஞ்செய்துவிட்டுப்போன சத்தியகீர்த்தி அரிச்சந்திரனைத்தேடிக்கொண்டு மயானத்தில்வந்து கண்ணுற்று இருவரும் மனவிசாரமாயிருக்கையில் அரிச்சந்திரனவன் சத்தியகீர்த்தியைப்பார்த்து அப்பா! மந்திரி சுடலையைச் சுற்றிப்பார்த்துக்கொணடு வருகிறேனென்று புறப்படுந்தருணம் சந்திரவதி லோகிதாஸனைச் சுடுவதைப்பார்த்து யாவரோ திருட்டுப்பிணஞ் சுடுகின்றாரென கோபித்துத் தனது கரத்திலேந்திய * கோலினால்தூக்கி அப்பால் வீசி எறிந்துவிட்டனன். சந்திரவதி திடுக்கிட்டு ஐயா யான் மிகவும் ஏழையாச்சுதே தருமத்திற்குத் தகனஞ்செய்வீரென வேண்டினள். அரிச்சந்திரன் கோபித்து நீமிகவும் மோசக்காரி நவரத்தினக்கசிதமாய் ஓர் உள்ளங்கையளவு தாலி உன்கழுத்தில் அணிந்துக்கொண்டிருக்கின்றனையே அதையாவது விற்று காற்பணமும் முழச்சீலையும் வாங்கிக்கொடுத்துவிட்டு தகனஞ்செய்துக் கொள்வாயென்று சொன்னவுடனே சந்திரவதிக்கு ஆற்றொணா விசனம் அதிகரித்து ஐயோ! எனது மணாளராகிய அரிச்சந்திரர் ஒருவர் தவிற மற்றவர் கண்ணுக்குத் தோற்றாத தாலியை சுடுகாடு கார்க்கும் வெட்டியான் பார்த்துவிட்டானேயென்று விசனப்படுகையில் சத்தியகீர்த்தியும்

* அரிச்சந்திரன் தகனஞ்செய்யும் பிள்ளையை கோலினால் தள்ளினானன்றி காலால் உதைக்கவில்லை. நாடகக்காரர்களால் உதைத்தனனென்பது சாஸ்திர விரோதமாகும்.

அருகில் வந்துவிட்டனன். அரிச்சந்திரன் சற்றுயோசித்து மந்திரி! இந்தப்பெண் யாரென்று கேட்டாயென்றனன். சந்திரவதி தனது சவிஸ்தார மனைத்தும் ஆதியோடந்தமாய்சொல்லி வாய்மூடுமுன்னமே அரிச்சந்திரன் மனம்பதறி ஐயோமகனே லோகிதாஸா பட்டவிரலிற்படும் கெட்டகுடியே கெடுமென்பதுபோல நீயும் சர்ப்பத்தால் கடியுண்டிறந்தனையோவென அவனை வாரியெடுத்து மடிமீதில் வைத்து அழுதுக்கொண்டிருக்கையில் சந்திரவதி தனது புருஷனென்று தெரிந்து ஆ! பிராணபதி உமக்கித்தகைய கோலம் வாய்ந்ததோவெனக் கண்ணீர் விடுத்துக் கதறியழுதனள். சத்தியகீர்த்தி அவ்விருவர் துக்கத்தையும்மாற்றி அம்மணி இது விஸ்வாமித்திரன் சூதாகும் இனி இதைக்குறித்து விசனப்படாதீர். நமது உயிர்போனாலும் பொய்சொல்லாமலிருப்போம். அப்பால் ஆண்டவன்கிருபை எப்படியானாலும் ஆகட்டுமென்றனன். அரிச்சந்திரன் சந்திரவதியைப்பார்த்து பெண்ணே! யான் ஒருவனுக்கடிமையானதால் அவனைத்துரோகஞ்செய்யலாகாது உன்னை அடிமைகொண்ட ஐயரிடத்தில் காற்பணமும் முழத்துண்டும் வாங்கிக்கொண்டு வருவாயாகில் லோகிதாஸனை தகனஞ்செய்து விடுகிறேன். நீவருகிறவரையினும் இங்ஙனமே வைத்திருக்கின்றேன் சீக்கிரமாய் பொழுதுவிடியுமுன் வருவாயென் றனுப்பினன்.

இங்ஙனம் இவர்கள் இவ்வளவு மனசஞ்சலமாயிருக்கையில் விஸ்வாமித்திரர் காலகண்டய்யர் வீட்டுக்கு வந்து, சுவாமி! சந்திரவதி காற்பணமும் முழத்துண்டும் கேட்பதற்காக வருவாள். நீ இல்லையென்று துரத்திவிட்டால் அரிச்சந்திரன் பிள்ளையாச்சுதே யென்று தாக்ஷண்யமாய்த் தகனஞ்செய்துவிடுவான். எஜமானைத் துரோகஞ்செய்தானென்று அசத்தியத்தைக்சுட்டிக்காட்டி வதிஷ்டனைச்செயிப்பேனென்று சொல்லிவிட்டுப் போயினர். அப்பால் சந்திரவதி வந்து சுவாமி இறந்த சிறுவனை தகனஞ்செய்வதற்கு காற்பணமும் முழச்சீலையும் கொடுப்பீரென்று கேட்க, காலகண்டையன் இவர்களின் உண்மை நிலையைக் கவனித்துச் சந்தோஷமுற்றவராயினும் மேலுக்குக் கோபமுற்றவர்போல் கடுகடுத்து ஈதென்ன மோசடியாயிருக்கிறது குதிரை செத்ததுமன்றி, எடுகூலி பிடிகூலி குழிதோண்டுங்கூலியென காசைக்கும் மோசடியாயிருக்கின்றதே இனி இங்கு நிற்காதே சேஷிகண்டால் என்மேற்கோபிப்பாள் நீபோய் அவனை எவ்விதமாயினும் கொளுத்தினாலும் சரி!

ஆற்றில் ஓடுகிற ஜலத்திலெறிந்து தலைமுழுகிவிட்டுவந்தாலும் சரி! யர்னென்னமோ காசின்மீதிருக்கும் தூசியுங்கொடேன் போபோ வென்று அதட்டித்துரத்திவிட்டனன். 'சந்திரவதி ஐயோ விதிவசமே இனி என்னசெய்வதென்று கானகமார்க்கமாய் வருகையில், விஸ்வாமித்திரர் மஹாவிஷ்ணுவை திருடனாகச்சென்று காசிராஜன் பிள்ளையைக்கொன்று சந்திரவதி வருகிற வழியில் போட்டுவிட்டு வருவீரென பிரார்த்திக்க அவரும் அப்படியே செய்துவிட்டார். அம்மார்க்கமாய் வந்த சந்திரவதி தனது பிள்ளைதானோ நாம் சுடலையில்வைத்துவிட்டுவந்தபோது நரிகளெடுத்துக்கொண்டு வந்து போட்டதோவென்று பார்ப்பதற்குள், அரண்மனையிலிருப்பவர் குழந்தையைத் திருடரெடுத்துக்கொண்டு போயினரென்று கூச்சலிடவே அரசனும் இராணியும் துக்கித் தழுதனர். தலையாரிகள் காட்டிற்சென்று குழந்தையைக் கையில் வைத்திருக்கும் சந்திரவதியைக் கொலை புரிந்தக்கள்ளியென தீர்மானித்து கயிற்றாற் பிணைத்திழுத்து அரண்மனையிற் கொண்டுவந்து விடுத்தனர். காசிராஜன்பார்த்து இந்தப்பெண்கொலை புரிந்தவள்போற்காணவில்லையேயென்று சந்தேகித்தவனாய் அம்மணி! இந்தக் குழந்தையை யார் கொன்றார்களென்று வினவினன். ஐயா என் கையிலிருப்பதால் உமது மனம்போற் செய்வீரென அமைச்சர்களின் ஆலோசனையால் காலடி சோதிக்க விஸ்வாமித்திரர் மாயமாய் வந்து அங்கிருக்கும் காலடியெல்லாம் சந்திரவதியின் காலடியாய் எழுதிவைத்துவிட்டுப்போயினர். இந்த மோசத்தை யறியாத அமைச்சர்கள் இந்தப்பெண்ணின்காலடி சரியாயிருக்கின்றதென்று சொல்லவே அரசன் வாளாயுதத்தை வீரபாகுவின் கரத்திற்கொடுத்து பொழுதுவிடியுமுன் இவளை வெட்டிப் போடுவாயென ஆக்ஞாபித்தனுப்பிவிட்டு இறந்த தனது பிள்ளைக்குச் செய்யவேண்டிய சடங்குகளனைத்தும் செய்து மயானத்திற்கு அனுப்பிவிட்டனர்.

இங்ஙனம் சந்திரவதியின்கதி அகியாய ஆபத்தாயிருக்கையில் அரிச்சந்திரன் சுடலையில் அகஸ்மாத்தாய் நித்திரைபுரிந்து கனவு கண்டெழுந்து தான் சிம்மாசனத்திலமர்ந்து அரசுபுரிவதுபோல அடா சேவகா! காவல்பதனமாய்ப்புரிவீர். அமைச்சர்கள்! நமது நாட்டில் நன்மழைபொழிந்து செந்நெல்விளைந்து குடிகளனைவரும் க்ஷேமமாயிருக்கின்றனரேவென்று சொல்லிக்கொண்டே கண்விழித்துப்பார்த்து அடடா! ஈதென்ன ஒன்றுங் காண்கிலனேயென்று

சொல்லுந்தருணம், அருகிலிருந்த அமைச்சனாகிய சத்தியகீர்த்தி அரசனை திடப்படுத்தி மன்னா யாது விசேஷமென்று விசாரிக்க, அரிச்சந்திரன் சற்றுநிதானித்து மந்திரி! யான் நித்திரை செய்யும் போது ஓர் சொர்ப்பனங்கண்டேன். அதென்னவென்றால் ஓர் பெண்பூதம் ஓர் குட்டிபூதத்தைக்கையிலெடுத்துக்கொண்டு வரும் போது சிலகுரூரபூதங்கள் அதனை அடித்திழுத்துக்கொண்டு தமது எஜமான் முன்விடுத்து அந்தப்பெண் பூதத்தை வெட்டும்படியாய் என்னிடம் கொண்டுவந்து விடுத்தனர். யான்வாளேந்தி வெட்டும் போது நெஞ்சடைப் பூதம் கத்தியைப்பிடித்து வெட்டாதேயென் றது. ஓர் கிழப்பூதம் நடுங்கியொடுங்கி நமஸ்காரஞ்செய்தது. இன் னொரு கிழப்பூதம் கூத்தாடி சந்தோஷித்து எனக்கு மணிமகுடஞ் சூட்டினது யான் அரசுபுரிந்திருக்கையில் விழித்துக்கொண்டேன். இதுதான் நிகழ்ந்த சேதியென்று சொல்லவே சத்தியகீர்த்தி சந் தோஷித்து அரசே பெண்பூதமென்பது எனதுதாய் நெஞ்சடைப் பூதமென்பது பரமசிவம், நடுங்கி பயந்த பூதம் விஸ்வாமித்திரர் சந்தோஷித்துக் கூத்தாடியது வசிஷ்டமஹாரிஷி, இது அருணோ தயத்திற்கண்ட கினவாகையால் நாளையதினமே நீர் அரசுபுரிவீ ரென்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே வீரபாகு சந்திரவதி யையும் வாளாயுதத்தையும் அரிச்சந்திரன்கையில்கொடுத்து இவள் இராஜனுடைய புத்திரனைக்கொன்ற திருடியாம் இவளை வெட்டிப் போடுவாயென்று சொல்லிவிட்டு போயினர். அரிச்சந்திரன் அவ் விதமே நன்கெனச்சம்மதித்து சந்திரவதியின்முகத்தைப்பார்த்து ஆ! காதலி ஈதென்ன சூதென்று துடிதுடித்து மண்மேற் புரண்டழுது எழுந்துநின்று சங்கதியனைத்தும்விசாரித்து சத்தியமேதுணை யென்று வெட்டும்போது அருகிலிருந்த விஸ்வாமித்திரர் கத்தி யைப்பிடித்துக்கொண்டு அப்பா! இனியாகிலும் எனக்குகொடுத்த நாட்டை இல்லையென்று சொல்லிவிடு உன் மகனையும் எழுப்பிவிடு கிறேன் உங்களையும் நல்லபதவியி லிருக்கச்செய்கிறேனென்று பரி தாபமாய்புகல, அரிச்சந்திரன் கிஞ்சிற்றும் சம்மதியாமல் எங்கள் உயிர்போனாலும் பொய்சொல்லமாட்டோமென்று சந்திரவதியை வெட்டும்போது வாளாயுதம் மாலையாய் வீழ்ந்தது இது தேவர் களின் மாயமென்று அவர்கள் மீது ஆணைவைத்து சந்திரவதியை வெட்டுகையில் பரமசிவம் ரிஷபவாகனரூடராய் வந்து அரிச்சந் திரன் கையைப் பிடித்துக்கொண்டு நிகழ்ந்தவை யனைத்தும் விசா

ரித்து எமனாகிய வீரவாகுவினால் அரிச்சந்திரன் அடிமையைப் போக்கி சுப்பிரமணியரால் லோகிதாசனை யெழுப்பி மஹாவிஷ்ணுவால் * சுதாகரனை எழுப்பிவிட்டு அக்கினிதேவனாகிய காலகண்டையனால் சந்திரவதி லோகிதாஸனுடைய அடிமையை நீக்கிவிட்டு விஸ்வாமித்திரர் தேவசபையில் சொன்னதுபோல் பாதி தபத்தை அரிச்சந்திரனுக்கு கொடுக்கும்படி செய்து யாவரும் அயோத்தியிற் சென்று வதிஷ்டரால் மகுடாபிஷேகஞ் செய்துவிட்டு யாவரும் அவரவரிருப்பிடமேகினர். அப்பால் அரிச்சந்திரன் சிலநாள்வரையினும் அரசுபுரிந் திருந்து பிறகு தேவலோகத்திலிருந்துவந்த விமானத்தி லமர்ந்து மனைவி மைந்தருடனே சரீரம் அழியாமல் சொர்க்கபதவியிற்சென்று நித்யானந்தமாய் வாழ்ந்திருக்கின்றனர்.

## படிப்பினை.

விஸ்வாமித்திரன் ஆதியில் திருச்சங்குக்கு வாக்குதத்தஞ் செய்ததற்காக அரிச்சந்திரனுக்குப் பாதிதபம் கொடுப்பதற்காக இவ்வளவு கஷ்ட நிஷ்டூரமும் பழிபாபம்பெற்றனர். அரிச்சந்திரனும், சந்திரவதியும், லோகிதாசனும், என்னென்ன இடையூறு வந்திடினும் பொய்மொழி புகலாமலிருந்ததினால் தேவர்மூவர் யாவரும் வாழ்த்த இகத்தில் கீர்த்தி அரசனுக் குற்ற ஆபத்திலும் இணைபிரியாமலிருந்ததினால் தானும் அவர்களுடனே தேவலோகஞ் சென்றனன். ஆகையால், யாவராயிருந்திடினும் சத்தியநெறி வழுவாதிருந்தாற் சதாசுகியாயிருப்பர். பொறாமைவகித்திடில் அனேக வித ஆபத்திலாழ்ந்து அவமானமெய்தி சதாசஞ்சலமாயிருப்பார்.

# கெடுவான் கேடு நினைப்பான்.

ஓர் சிறு கிராமத்தில் ஓர் குடியானவன் நாலோர் மாடும் இரண்டுகாணி நிலமும் வைத்துக்கொண்டு தன்வரைக்கும் தான் பசியில்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருந்தனன். இதனைக் கண்ணுற்று மனஞ்சகியாத அண்டைவீட்டுநயவஞ்சகனென்பவன்வயறெரிந்து அடடா! இவனும் நம்மைப்போல நன்றாயிருக்கின்றானே இவனை எவ்விதமாய்க் கெடுப்பதென்று பலவிதத்திலும்யோசித்தும் பயன் படாமற்போயினது இப்படி இருக்கையில் ஓர்நாள் அவன் ஏர் உழு

* சுதாகரன்—காசிராஜன் மகன்.

வதற்காக மாடுகளை ஓட்டிக்கொண்டு போகையில் அவனை சமாதானமாயமைத்து ஐயா! இன்றைக்கென்ன ஏத்தம் இறைக்கவில்லையோவென்றான். அதற்கு அந்தக்குடியானவன் நயவஞ்சகன் குணத்தைக் கவனியாதவனாகையால் இவர் நம்மீது மிகவும் வாஞ்சையாயிருக்கின்றாரென சந்தோஷித்து ஐயா யான் பிரதி தினமும் பொழுதுவிடிய மூன்றுநாழிகையாகுமுன் விழித்தெழுந்துபோய் ஏத்தம் இறைத்துவிட்டு அப்பால் மாடுகளை ஓட்டிக்கொண்டுபோய் ஏர் உழுகிற வழக்கம். இப்படியே எனது காலமெல்லாம் நடத்துகிறேனென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற நயவஞ்சகன் இவன் கேணியில் விழும்படியாக நாளையதினம் இரத்தக்குறி காட்டினால் நமது மனங் குளிர்ந்து தமாஷாய் வேடிக்கைப் பார்க்கலாமெனும் சந்தோஷத்தினால் சிரித்துக்கொண்டு அப்பால் நீ நாளையதினம் பொழுது விடிந்து ஒருநாழிகையாயினபின் வருவாயாகில் யானும் வருகிறேனென்றான். குடியானவன் உண்மைதானென்றுணர்ந்து அப்படியே நல்லதையாவென்று சொல்லிவிட்டு அன்றையதினத்தில் செய்யவேண்டிய வேலையையெல்லாம் செய்துவிட்டு அந்தப் பொழுதில் வீட்டுக்குவந்து சாப்பிட்டு சயனித்துக்கொண்டு அண்டைவீட்டு நயவஞ்சகன் சொன்னபடியே மறுதினத்தில் பொழுதுவிடிந்த ஒருநாழிகையாயினபின் வீட்டைவிட்டு வெளியே வருகையில் அண்டைவீட்டு நயவஞ்சகன் அவனுக்கு முன்பாய் விழித்தெழுந்து தனது மடியில் ஓர் கத்தியை வைத்துக்கொண்டிருந்து பக்கத்துவீட்டுக் குடியானவன் வருகிற வழியில் திடீரென்றுபோய்த் தனது மூக்கை யறுத்துக்கொண்டனன். அச்சமயம் நயவஞ்சகன் மூக்கறுத்து உதிரம் பெருகி வலியதிகரித்திருப்பதினால் ஐய்யோ முறையோ வென்று கூச்சலிட்டழுது பூமியில் வீழ்ந்தனன். இந்த பரிதாப நிலையைக்கண்ணுற்ற பக்கத்துவீட்டுக் குடியானவன் மனம்பதறி ஐயோ ஈதென்ன உமக்குப் பயித்தியமோ நன்றாயிருந்த மனிதன் மூக்கறுத்துக் கொண்டீரே யென்று விசன மடைந்து அன்றையதினம் தனது சொந்தவேலையைக் கருதாமல் இவனுக்கு வேண்டிய வைத்தியம் செய்துக்கொண்டிருந்தனன்.

அச்சமயம் நயவஞ்சகன் மனைவிமைந்தரனைவரும் மனவிசாரமுற்றவராய் அழுதுக்கொண்டிருந்தனர். ஆனால் அன்றையதினத்தில் பக்கத்துவீட்டுக் குடியானவன் தனது அண்டைவீட்டுக்காரனுடனே யிருந்துவிட்டதால் அவன்வீட்டிற்றானே புசித்துவிட்டு

மறுதினம் தனது தொழிலினை யனுசரித்திருந்தனன். மூக்கறு பட்ட நயவஞ்சகனோ? அண்டைவீட்டுக் காரனுக்கு இரத்தக்குறி காண்பித்து ஆவிக்கபாயமெய்தி கிணற்றில் வீழ்ந்திறக்கச்செய்து விடுவோமென்றெண்ணியதுபோய் தனது மூக்கறுந்து மூளியாயி ருப்பதற்காக விசனப்பட்டுக்கொண்டு இனிமேல் துர் எண்ணங் கொள்ளலாகாதென்றிருந்தனன்.

## படிப்பினை.

இந்தக் கதையில் யாம் கவனித்ததென்ன.

அண்டைவீட்டு நயவஞ்சகன் பக்கத்துவீட்டுக் குடியானவன் கிணற்றில் வீழ்ந்திறப்பானென்று தனது மூக்கறுத்து இரத்தக் குறி காண்பித்ததால் சதாகாலமும் சரீர பங்க மடைந்த மூக்க றையனாகினன். பக்கத்துவீட்டுக்குடியானவன் அண்டைவீட்டுக் காரனுக்குற்ற ஆபத்திற்குப் பரிதாப மடைந்தவனாகையால் அன் றைய தினத்தில் நேரிட்ட துற்சகுனத்திற்குந் தப்பித்துக்கொண் டனன்.

ஆகையால், உலகிற் ஜனித்தவர் யாவராயிருந்திடினும் ஒரு வனைக் கெடுப்பதற்காக மனதிலெண்ணினால் தானே கெட்டுப்போ வான். ஒருவன் தன்விஷயத்தில் தீங்குபுரிய நினைந்திடினும் தான வனுக்கு நன்மைபுரிய நினைப்பவன் சதா சுகானந்தமாயிருப்பான்.

# லௌகீகமார்க்கத் தியல்பு.

உலகிற் ஜனித்த ஜீவர்களில் லௌகீகம், தெய்வீகமென்று இருவகுப்புடையா யிருக்கின்றன. அவைகளிரண்டில் தெய்வீக மென்றால் தன்வரைக்கும் தானே சுகமெய்து தற்கியன்றவிதமாய் இல்வாழ்க்கையை வெறுத்துத் துறவெய்தி காரணகுருவையடை ந்து அவரடிக்கடிமையாய்த்தொண்டுபூண்டு ஆசான்அருள்ஞானம் பெற்று பக்திவைராக்கியமாயிருந்து மெய்ஞ்ஞானியாய் தபவேட மணிந்து யோகானந்தமாய்ப் பகவான்மீது மனதைச்செலுத்தி காண்டல், உரை, அனுபவமெனும் மூன்றையுங்கடந்து முமுக்ஷு வாய்த் தன்னை மறந்து தலைவனிற்கலந்து சாயுஜ்யப்பதவியடைந்து ஜனனமரணமோபாதையற்றிருப்பது.

லௌகீகமெனின் இல்லறமல்லது நல்லறமன்றெனும் நீதி சாஸ்திரத்தை யனுசரித்து சரீரகஷ்ட மடைந்தாயினும் திரவியம் சேகரித்து மனைவிமைந்தர் பந்துஜனமித்திருடன்கலந் துறவாடி

பிதுர்கர்ம முதலாகிய சகலவித கர்ம கைங்கரியம் புரிந்து உறவினருடன் விருந்தோம்பற்புரிந்து, விக்ரக ஆராதனைசெய்து பிரசாதமருந்தி சர்வதேவாலயத்திலும்போய் தீர்த்தங்களில் ஸ்நான பானஞ்செய்து பக்திபூர்வகமாய்ப் பகவானைத் தரிசித்து. ஆதுலர் அந்தணர், யாசகர், ஏழைகள் முதலானவர்கட்கும் தன்னாற் கூடுமான தானதர்ம பரோபகாரம்புரிந்து தெய்வீகமார்க்கத்தை யனுசரித்த துறவிகளாகிய பிர்ம்மச்சாரி, வானப்ரஸதன், சந்நியாசி, தபசி, மஹான்கள் முதலானவர் கானிலிருந்து யாத்திரை வாசியாய் வருங்காலத்தில் அவர்களை எதிர்கொண்டழைத்துவந்து பசிதீர அன்னங்கொடுத்து அவர்கள் ஆசிர்வாதம் பெறுவதுதான் லௌகீகமார்க்த்தியல்பு. அத்தகைய உத்தமரிருக்கும் தேசத்தில் நன்மழைபொழிந்து செந்நெல்விளைந்து நகரிற்கோர்பழுதுமின்றி துர்வியாதி துர்மரணம்,பஞ்சம்,வறுமை முதலிய மூதேவிலக்ஷணமின்றி சதாகாலமும் தனதான்ய சம்பத்துடன் அஷ்டலக்ஷ்மிவாசமாயிருந்து மங்கள சுபகரமாய்,

வெண்பா.

நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப்
புல்லுக்குமங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லாரொருவருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யுமழை.

என்னுந் தன்மையாய்ச்சத்விஷயம்புரியும் உத்தமர்களொருவரிருந்தால் எத்ததியும் விடாமழைபொழியு மென்பதற்கு ஆக்ஷேபனை இல்லையென்றுணர்வீர்.

அஃதன்றி பூமியில் மனிதராய் ஜனித்தபோதே பொல்லாங்கையும் துணையாய்அழைத்துவருவதுபோல பொய்,கொலை,களவு, கட்காமமென்னும் பஞ்சமாபாதகங்களையும் காமம், குரோதம், லோபம், மோகம், மதமாச்சரிமென்னும் அஷ்டவித துர்க்குணங்களையும் சேனைசயின்யங்களைப்போல் வைத்துக்கொண்டு பலபேரைக்கெடுத்து துன்மார்க்கராயிருக்கும் பாபிகளாயிருத்தல்.

வெண்பா.

சந்தனத்தைச்சார்தருவும் தக்கமணங்கமழும்
கந்தனத்தைச்சார்வேய் தழல்பற்ற—அந்தவனம்
தானுமந்தச்சந்தனமும் தன்னினமும்மாள்வதன்றி
தானுங்கெடச்சுடுமே தான்.

என்பதுபோல அவர்கட்கு விளையும் துன்பம் அவனியோரனைவர்கட்கும் வாய்ந்து வானிற்பொழியும் மழை பூமியில்விழுவதற்கும் பயந்து நிற்பதுடன் வறுமையானது சதாகாலமும் நீங்

காமல் வருத்தப்படுத்துமல்லவோ? ஆகையால் ஜீவர்கள்புண்ணிய சீலராயிருந்தால் யாதொருதீங்குமின்றிசுகானந்தமாயிருக்கலாம்.

## வேதியரொழுக்கம்.

சதுர்முகனுல் விதித்த வேதவாக்கியத்தை சதா ஓதுவதால் வேதியரென்றும், பிரமத்தை யறிந்து பிரணவ மந்திரத்தை உச்சரிப்பதால் பிராம்மணரென்றும், உலகில் யாககிர்த்தியங்களைப் புரிந்து ஜீவர்கள்புரியும் பாபத்தைப்போக்கும் உதாரத்வகுணத்தால் பார்ப்பாரென்றும், அந்தணருக்கு குணத்தினாலும் ஒழுக்கத்தினாலும் வாய்ந்த சிறப்புப்பெயர் பலவிதமா யமைந்திருக்கின்றன.

அத்தகைய நற்குணமமைந்தவேதியர்கள் அனுதினமும் அருணோதயத்திலெழுந்து ஸ்நானபானநேமநிஷ்டைஜபதபமனைத்தும் வழுவின்றி புரிந்து வேதோபாக்யான விஷயமாய் பகவான்மீது பக்திசெலுத்தி காயத்திரிஜபஞ்செய்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமெனும் திரிகால நிர்ணயத்தின்படியே மனிதர்கட்குச் சுபயோக சுபகரண திதி நக்ஷத்ராதி பலாபலன்களை வழுவின்றி புகன்று, யாககிர்த்தியங்களிற் சிறந்த சுபவேள்வி தவறுதலின்றி நடாத்தி அசத்தியத்தில் பிரவேசியாமல் சதாசாந்தகுணத்துடன் சத்தியத்தில் அணுவேனும்பிசகின்றி தயாளம் ஈகை உதாரத்வம் முதலாகிய நற்குணசீலராய்ச் சந்ததமும் தெய்வபக்தியிற் சிறந்தவராயிருப்பராயின் வருணன் அருள்சுரந்து சந்ததமும் நன்மழை வருஷித்து நகரினைச்செழித்துய்யும்படியாய் கிருபை புரிவார்.

அன்றியும், பிராமணர்களின் நிலை தவறுதலின்றி தயாநிதியாயிருத்தல்வேண்டும். பிராமணனானவன் வறுமையாளருக்குத் தானம் கொடுக்கவும். யாககிர்த்தியங்கள் செய்யவும் அதிகாரமுடையவனாய் வேதத்தியானம் விடாமற் செய்துக்கொண்டு அனுதினமும் ஸ்நானபான தர்ப்பணாதிகளையும் செய்துவரவேண்டும். தனது ஜீவனமாகிய குடும்ப சம்ரக்ஷணைக்குத் தகுந்தவிதமாய் பிறருக்கு வைதீககருமங்களைச்செய்வித்தலும் வேதசாஸ்திரங்களை ஜீவர்களுக்கு ஓதுவித்தலும் நியாயமார்க்கத்திற்சம்பாதித்த பொருளைக்கொண்டு யோக்கியமான தானங்களை யேற்றுக்கொள்ளுதலுமாகிய காரியங்களைச் செய்யலாம்.

"பிராமண மமதேவதா"

என்னுந் தன்மையாய் பிர்ம்மகுலத்திற் ஜனித்த பிராமணனவன் சகல பிராணிகளுக்கும் இதமே செய்யவேண்டுமல்லது யா

தொரு ஜீவனுக்கும் அஹிதஞ் செய்பலாகாது. அஃதேனெனில். சகல ஜீவர்களுக்கும் * மித்திரனுயிருப்பதே பிராமணனுக்கு மேலான பொருளாகும் இத்தகைய நற்குணமமைந்தவனுக்குதான் "அந்தணன்" என்கிற பெயரமைந்தன. அன்றியும், பிறருடைய சொத்துகளை வஞ்சியாமலு மிருக்கவேண்டும். அத்தகைய உத்தமகட்கே வேதவேதியரென சொல்லப்படும்.

ஆகையால், "பிராமணமமதேவதா" என்பதுபோல பிரம்மதேவன் முகத்தினிடமாக ஜனித்த வேதியர்கள் சந்ததமும் தமது ஆசாரங் குறையாமல் தெய்வபக்தியிற் சிறந்தவராய் யாகாதி கிர்த்திய வேள்விகளனைத்து வழுவின்றிபுரிந்திருந்தால் அரசனுக்குக் குடிகள் கீழ்ப்படிந்தும், குடிகள்மீது அரசன் கருணைகூர்ந்து பெற்றசிசுவைத் தாய் காப்பாற்றுவதுபோல அன்புடன் ஆதரித்து விஸ்வாசமா யிருப்பதுடன், வருணபகவானும் மாத மும்மாரி பொழிந்து பயிர்களை விர்த்திசெய்து நாமனைவரும் பசியின்றி ஜீவித்து அஷ்டலக்ஷ்மீகடாக்ஷம் பெற்று சுகஜீவியாய்ப்பிழைக்கும் படியாயிருக்கும்.

## க்ஷத்திரியரொழுக்கம்.

"மன்னர்க்கழகு செங்கோன் முறமை" யென்பதுபோல, நகரினைப்பரிபாலனஞ்செய்யும் அரசர்கள் நகரவாசிகளிடம் அன்புகூர்ந்து பெற்றதாய் சிசுவின்மீது அன்பு பாராட்டுவதுபோல விஸ்வாசம் வைத்து தன் தேசத்திலிருக்கும் வியர்த்தமான காடுகளைச் சீர்திருத்தஞ்செய்வித்து கழனிகளாகச்செய்து ஆங்காங்கு ஏரி குளம் ஆறுகள் வெட்டி மழைஜலத்தை வீணிற் போகாதபடி மடக்கி ஏரி குளம் ஆறுகளில் பாயச்செய்து சதாகாலமும் ஜலங் குறையாத கழனிகளாகச்செய்து வறுமையாளருக் கெல்லாம் நன்செய் புன்செய் நிலங்களைதானதர்மஞ்செய்து அவற்றில் அவர்கள் உழுது பயிரிடுவதற்காக வேண்டிய ஏர் கலப்பை முதலாகிய துணைக்கருவியுடன் மாடுகளும் வாங்குவதற்கு வேண்டியபொருள் சகாயம்செய்து குடிகள் உழுது பயிரிட்ட தான்யங்களில் ஆறிலோர்கடமையேற்று $. திருடர்பயம் நகரவாசிகளை அணுகாமல்

* மித்திரன்—நேயன், அன்பன், நண்பன்.

$ தனது தேசத்தில் வறுமையாள ரொருவரு மில்லாதிருந்தால் திருடர்பயமே கிடையாதென்பது யான் சொல்லாமலே எல்லோருக்கும் தெள்ளியதாய் விளங்குமென்று இங்ஙனம் இதைக் குறிப்பித்திலேன்.

"பெற்றதாய்ப் பிள்ளைகளைப் பாதுகார்பதுபோல" துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனனுய் குடிகள்மீது கருணைவாய்ந்து சிற்றரசர் திறைசெலுத்த தீரவீர ப்ரகாசமாய் அரசுரிமை புரிந்திடில் அந்நாட்டில் வறுமையை வாவென்றழைத்திடினும், வருமா? ஒருக்காலும் வராது, யாதொரு கஷ்டநிஷ்டூரமுமின்றி அஷ்டலக்ஷ்மீ கடாக்ஷத்துடனே அயோத்தியாபுரியில் அறுபதினுயிரம் வருஷம் அரசுபுரிந்திருந்த தசரதச் சக்கிரவர்த்தியைப்போற் சுகானந்தமாய் இராஜரீகம் புரிவார்.

ஆகையால், க்ஷத்ரியதர்மம் கைவிட்டாமலிருப்பவனே இராஜரீகம்புரிவதற்குத் தகுதியானவன் அவனையே புருஷோத்தமனெனப் புகலப்படும். அன்றியும் உலகில் வசித்திடும் உத்தமர்களை அலக்ஷியம் செய்யாமலிருப்பதுவே இராஜாங்கத்திற்குரிய தர்மநீதியாகும். அன்றியும் வேற்றரசர்மீது படையெடுத்து அவர்கள் தேசத்தை அபகரித்திடலாகாது. அதனுல் அநேக ஜீவர் யுத்தத்தில் மரணமடைவர். ஆகையினுல் தனக்கிருக்கும் ஆஸ்திதி பூஸ்திதி தவிர அன்னியனுடைய இரத்தினத்தைக் கண்ணுற்ருல் இது வீதியிற்சிதருண்டிருக்கும் பருக்கைக்கற்களென மதித்திருப்பதே சிலாக்கியமாகும். இத்தகைய குணநிசயத்துடன் தனது பத்தினியுடனே இல்வாழ்க்கையிற் சுகானந்தமாயிருக்கவேண்டும். எந்த அரசன் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்கின்ருனே அது அவனுக்குரிய குலத்தொழிலாகையால் துஷ்டமிருகங்களை கொல்லாமல் விடுத்தால், அவைகள் நகரிற் புகுந்து பயிர்களை அழிப்பதுபோல, அற்பர்களாகிய துஷ்டர்களை ஆக்கினை செய்யாவிடில் அவர்களால் உத்தமர்கட்கு தீங்குநேரிடுமாகையால் அரசனனவன் துஷ்டர்களை தண்டித்தும் துஷ்டமிருகங்களைக்கொன்றும் உலகைக் காப்பாற்றவேண்டும் இதுதான் அரசாங்கத் தியல்பு.

ஆகையால், நகரினைப் பரிபாலனஞ்செய்யும் வேந்தன் நன்மனதமைந்தவனுய்க் குடிகண்மீது கிருபை கூர்ந்து, தானதர்ம பரோபகாரத்திற் சிறந்தவனுயிருந்திடில் நகரவாசிகட்கும் யாதொரு துன்பமணுகாது தன்மீதும் வேற்றரசர் படையெடுத்து வருவதற்கியலாது திருடர்பயம், வறுமைபயம், வியாதிபயம் முதலாகிய [illegible] விஷய பயங்கர மனைத்தும் நேரிடாமல் கருணகான் கிருபையால்வருணனும் தரணியில்மழைபொழிந்து நாமனைவரும் சுகஜீவியாய் பசிநோயின்றி மனைவி மைந்தருடன் சுகானந்தமாய்ச் சுகித்து வாழ்ந்திருப்போம்.

## வைசிய ரொழுக்கம்.

அவனியிற் ஜனித்த மாந்தருள் வைசியர்களானவர் தமது காத்திற்றுங்கிய தராசுகோல் முனை எவ்விதமாய்ச் சமமாயிருக் கின்றதோ அத்தன்மையாகவே தமது நிலையும், தவறுதலின்றி யிருந்து. யாதாமொருபொருளைத் தான்வாங்கி விற்கிரயஞ் செய் திடினும் அவற்றில் ஒன்றுக்கு வீசம் லாபங் கிடைத்தாற் போது மென வியர்பார விஷயத்திற் சிறந்தவராயிருந்து பொய்மொழி புகலாமல் தானதர்மத்திற் சிறந்தவரா யிருத்தல்வேண்டும் அவ் வித நன்மனத்தினராயிருந்திடில் ஏலேலோ செட்டியைப்போற் சிறப்புற்றவராய்க் குடிகளனைவரும் வாழ்த்தித் தமது வயறு குளிர்ந்திருப்பதுபோல அவர்களையும்வாழ்ந்திருக்கவேண்டுமென ஆண்டவனை வேண்டிக்கொள்வார். அச்சமயம் அந்நற்குண வை சியரின் சுற்றமும் வாழ்வும் ஆலின்விழுதுபோற் செழித்து சுகா னந்தமா யிருப்பதுடன் அத்தகைய உத்தமரிருக்கும் நகரிற்கும் யாதொரு பழுதுமின்றி சதாகாலமும் காலமழை தவராமல் பொ ழிந்து நவதான்யாதிகள் விசேஷமாய் விளைந்து அஷ்டலக்ஷ்மி பொருந்தியிருக்கும்.

அன்றியும், வியாபாரம் செய்பவர்கள் அநுதினமும் ஸ்நான பானஞ்செய்வதில் தவறுதலடையக்கூடாது, சர்ததமும் திரேகத் தைச் சுசிகரமாய் வைத்துக்கொண்டு அவரவர் மதாசார கொள் கையின்படி வெண்ணீறாயினும், திருமண்காப்பாயினும், சந்தன மாயினும், கோபியாயினும், மற்றும் யாதாயினும் அவரவர் வழக் கத்திற்குரியவை திருநெறறிக் கலங்காரமாயணிந்து மதுமாம்ஸ பக்ஷணாதி புசியாமல் சுசிகரமான சுகபோஜனம் நெய், பால், தயி ருடன்புசித்து, வாசனைதிரவியங்கள் அமைந்த தாம்பூலமணிந்து, சற்றேனும் அழுக்கின்றிய பரிசுத்தமான நல்லாடை யுடுத்திக் கொண்டு ஆசனத்திலமர்ந்து பணப்பெட்டியை முன்பாகவைத்து கையில் தராசேந்திமயிரளவேனும் உயர்வுதாழ்வின்றி சரக்குகளை நிறுத்தி நீதியுடன் வியாபாரஞ்செய்யவேண்டும். அச்சமயம் தன் னிடத்தில்வந்து சரக்குகள் வாங்குபவரிடம் கோபம், மோசம், எத்து, சூது முதலாகிய குரூரகுணமின்றியவராய்ச் சத்தியத்தை நிலைநிறுத்தி வியாபாரம் புரிதல்வேண்டும் எவ்விதமாகிய அபாய காலத்திலும் பொய்மொழி புகலலாகாது, அன்றியும்,

வெண்பா.

* "காதல் $ கவராடல் கள்ளுண்டன் பொய்மொழிதல்
ஈதெல்லாம் மாந்தர்க் கியலாது—நீதியுடன்
மெய்யை யனுசரித்து மேதினியி லேயிருந்தால்
ஐய்ய னருள்புரிகுவார்."

என்னுந் தன்மையாய் துர்க்குணத்தையகற்றி நற்குணத்திற் சிறந்தவராயிருந்திடில் எவ்வித வியாபாரத்திலும் நஷ்டமின்றி "அஷ்டலக்ஷ்மிகரமாய்" தனது ஜீவனத்திற் கிசைந்த லாபத்துடன் வர்த்தகத்திற்குப் பழுதணுகாமலிருப்பார். அன்றியும்,

கவி.

"முதலுளபண்டங்கொண்டுவாணிபஞ்செய்
ததன்பயனுண்ணுவணிகரும்பதரே."

என்பதற்கேற்ப யாதாமொரு வர்த்தகரும் தான் முதலிட்டுக் கொணர்ந்தவைகளில் நூற்றுக்கு ஒருபாகமாயினும் லாபம்வைத்துக்கொண்டு வியாபாரஞ்செய்யவேண்டும். அஃதன்றி பக்கத்துக் கடைக்காரனிடம் ஜனங்களைப்போகவொட்டாமற்றடுக்கவேண்டுமென்னும் பொறாமையால் சரக்குகளை ஒன்றுபாதியாய் விலையைக் குறைத்துவிட்டால் யாவரும் தன்னிடம்வந்து வாங்கிக்கொண்டால் அவன் கெட்டுப்போவானென மதித்திடில் தனக்கே நஷ்டமாய்வந்து விளையும், இத்தகைய அற்பர்களைத்தான் வணிகரிற்பதரெனப்படும் ஆகையால்வைசியராய்ப்பிறந்தோர் துர்க்குணமின்றி நற்குணத்தினரா யிருக்கவேண்டும். கணக்குவழக்குகளில் அந்நியர்பொருளை எட்டிக் கனியைப்போல் நினைக்கவேண்டும். இத்தகையதா யிருந்திடில் ஏலேலோ செட்டியைப்போல் அழியாதசெல்வம் குறையாத சம்பத்துடன் பூதலத்திற் சிறந்தவராய்வாழ்ந்திருப்பார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாகவே மேற்படி செட்டியாரின் சரிதையைச் சற்று விவரித்துக் கூறுவாம் கவனிப்பீராக.

## ஏலேலோசெட்டியார் கதை.

வைசியகுலத்திற் பிறந்து மிகவும் கீர்த்திப்ரகாசமாய் ஜீவித்திருந்த ஏலேலோசெட்டியா ரென்பவர் ஒரு தடவை பதினாயிரம்

---

* காதல்-பேராசை, நயவஞ்சக மோசமாய் ஒருவர்பொருளை இச்சித்தல்.

$ கவராடல்-சூதாடுதல்.

மூட்டை அரிசிகளை விராகனுக்குப் பத்துமரக்காலாகவாங்கி வைத்திருந்தனர். அவற்றில் செலவானதுபோக மீதி அரிசிகளிருப்பதினால் அடுத்தவருஷத்தில் மழைபொழியாமல் நகரமெங்கனும் பஞ்சமாய் விட்டது. அச்சமயம் வர்த்தகர் விராகனுக்கு மூன்று மரக்காலாய் விற்பனைசெய்வதாயிற்று. ஆனால், ஏலேலோசெட்டியார் மாத்திரம் இவ்வளவு குறைவாய் விற்பனை செய்வதற்கு மனமொவ்வாமல் தனது ஆசிரியனிடத்திற்சென்று அவரடிபணிந்தனன். அம்மஹான் ஆசீர்வதித்து அப்பா! யாதுகாரணமாய் வந்தனையென்றுவினவ, குருநாதா போனவருஷம் யான்விராகனுக்குப் பத்துமரக்காலாய் வாங்கியஅரிசி தற்சமயம் விராகனுக்கு மூன்று மரக்காலாய் விலைகுறைந்திருக்கிறதே யான் எவ்விதமாய் விற்பதென்றனன். அம்மஹான் ஆலோசித்து அப்பா! கொண்டதை கொண்டவிலையாய் விற்றால் கோணிலாபமென்றனர். ஷை செட்டியார் ஆசான்திருவருட்குறிப்புணர்ந்து அப்படியேயாகுகவென, ஆசிரியன் திருவடியைப்பணிந்து, தன்னிடமிருக்கும் ஆயிரம் அரிசிமூட்டைகளையுங்கொணர்ந்து, கோணியையெல்லாம் அறுத்துக் கொட்டிவிட்டு அச்சமயமே கோணி ஒன்றுக்கு 2 அணா விதமாக 1000 கோணியையும், 125 ரூபாய்க்கு விற்கிரயஞ்செய்து தனது வர்த்தகத்திற்குரிய இலாபமாகச் செய்துகொண்டு, அரிசிகளையெல்லாம் தான் ஆதியில்வாங்கின விலைப்படியே விராகனுக்கு 10 மரக்காலாக விற்கும்படியாய் அளவுகாரருக்கு உத்திரவுசெய்து மரக்கால்களையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டு தான் எதிரில் உட்கார்ந்துக்கொண்டு வருகிறநகரவாசிகளுக்கு அளந்துபோடுஞ் சமயம் அவர்களில் பத்திலொரு உத்தமனும், நூற்றிலொரு பதிவிரதையும் ஆயிரத்திலொரு மஹாயோகியுமாக வந்து அவர்கள் அளந்துபோடும் அரிசியை வாங்கிக்கொண்டு போகும்போதே தமது வாயாறவாழ்த்தி இந்த தர்மகுணத்தினனுக்கு குறையாத செல்வம்பெருகவேண்டுமென ஆசீர்வதித்துக்கொண்டுபோவதால் அளக்கும் அரிசி "முன்னிருந்தபடியே" எடுக்க எடுக்கக் குறையாமல் நிறைந்திருப்பதையும் ஆயிரமூட்டை அரிசியின் தொகைக்குமேல் ஒன்றுக் கிரண்டாய் லாபம் வந்திருப்பதையும் கவனித்த செட்டியார் ஆச்சரியமடைந்தவனாய் தனது ஆசிரியனிடத்திற் சென்று நிகழ்ந்தவையுரைக்க அவர்சொல்லுகிறார். அப்பா! ஏழைகள் வயறு குளிர்ந்து நிறைந்திருப்பதினால் உனது அரிசி நிறைகுறையாமல் வளர்ந்திருக்கின்றது. இனி ஊர் விலையின்படி விற்கி

யஞ் செய்தாயானல் சமமாயிருக்குமென்று சொல்லியனுப்பினர். அவனும் அவ்விதமே நன்கென்றுச் சம்மதித்து வந்து ஆசிரியன் புகன்றவிதமே விராகனுக்கு மூன்றுமரக்காலாய் விற்கும்படி அளவுகாரருக்கு ஆக்ஞாபித்தனன். அவர்கள் எஜமான் உத்திரவின்படியே ஊர் விலைபோல் விராகனுக்கு மூன்று மரக்காலாய் விற்கிரயம் செய்துக்கொண்டிருக்கையில் அளவு சமமாய்க்குறைந்து வருவதைக் கவனித்த ஷெ செட்டியார் மறுபடியும் தனது ஆசானிடம் தெரிவித்து சுவாமி யான்கொண்டமுதலில் இலக்ஷம்விராகன் லாபம் கிடைத்திருக்கின்றதே இதுஎனக்கு வேண்டியதில்லையென்றார். சரி! அவ்விதமானல் அந்த இலக்ஷம் விராகனுக்கும் தங்கத்தை வாங்கி ஒரேமட்டமாய்க் கற்போல்செய்து கடலிற் போட்டுவிடு அது உன்னுடையதென்று வந்தால் நீ எடுத்துக்கொள் வராவிட்டால் போகட்டுமென்றனர். ஷெ செட்டியார் மனமகிழ்ந்து குருகடாக்ஷமென்று தனதுவீட்டுக்குவந்து ஆசிரியன் புகன்றவிதமே லக்ஷவிராகனுக்கும் தங்கத்தைவாங்கி கற்பாறைபோற்செய்து அதன்மீது தனது பெயரை ஆழ்ந்த பள்ளமா யெழுதி கப்பலிலேற்றிக்கொண்டுபோய் நடுக்கடலில் தள்ளிவிட்டு வந்தனன்.

இப்படிச் சிலநாட்கழித்தபின் அந்தத் தங்கப்பாறை தண்ணீரிலிருந்து அலையின் வேகத்தினல் உருண்டுருண்டு அதன்மீது பாசிபடர்ந்து மேலுக்கு கருங்கல் நிறமாயிருந்தன. ஓர் நாள் சில செம்படவர்கள் மீன் பிடிப்பதற்குப்போய் கடலில் வலை வீசினர். அந்த வலையில் தங்கப்பாறை சிக்கிக்கொண்டதினல் எடுத்து வெளியே போட்டுபார்க்க இது ஓர் இருப்புப்பாறையென மதித்திடினும் அதன்மீது ஏலேலோசெட்டியாரென் றெழுதி யிருந்ததால் அவ்வலைஞர் அதனை எடுத்துக்கொண்டுவந்துகொடுத்தனர். அவர் அதை வாங்கி கஷ்டத்திற்கு நஷ்டமில்லாதபடி கூலிகொடுத்து அனுப்பிவிட்டு அதன்மீதிருக்கும் பாசையைச் சுரண்டிவிட்டுப் பார்க்கத் தனது பெயரும் தங்கப்பாறையுமா யிருப்பதைக்கண்டு வியப்புற்றவனய் தனது ஆசிரியன்பாற்சென்று உண்மையைப் புகன்றனன். அவர் ஆலோசித்து அப்பா! நீ அநியாயவழியில் சம்பாதித்த திரவியமானல் அது அப்போதே போய்விடும் நீ நல்ல வழியில் பிறர் பொருளை இச்சியாமல் சம்பாதித்த பொருளாகையால் அது உன் வீடு தேடிவந்தது இதனை உனது மனப்பூர்வகமாய்த் தானதர்மஞ் செய்துவிட்டாயாகில் இதனல் உனக்கு மறுஜனனத்திற்கு நல்லபதவி கிடைக்கும். அஃதெப்படி யெனில்,

விருத்தம்.

தன்னுடல்தனக்கொன்றீந்தால் தக்கதோர்பலமதாகும்
மின்னியல்வேசிக்கீந்தால் மெய்யிலேவியாதியாகும்
மன்னியஉறவுக்கீந்தால் வருவதுபெருமையாகும்
அன்னியபரத்துக்கீந்தால் ஆருயிர்க்குதவியாமே.

என்னுந் தன்மையாய் ஆதுலர் அந்தணர் யாசகர் சங்கமரெனும் ஏழைகட்குத் தானதர்மஞ்செய்தால் மறுஜனனத்திற்கு ஆத்மலாப முண்டாகுமென தெரிவித்தனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற ஏலேலோசெட்டியாரும் குருசொற்படியே லக்ஷவிராகனையும் தானதர்மஞ்செய்துவிட்டுக்கீர்த்திவந்தனுயிருந்தார். இப்படியே வைசியர்கள் சத்தியநெறி தவறிடாமலிருந்தால் அத்தகைய புண்ணியசீல ரிருக்குமிடத்தில் நன்மழைபொழிந்து யாதொரு குறைவுமின்றி அஷ்டலக்ஷ்மிகடாக்ஷத்துடன் யாமனைவரும் சுகமாய் ஜீவித்திருப்போம்.

# வேளாள ரொழுக்கம்.

உலகின்மிசை ஜனித்த வேளாள வம்ஸத்தினர் அனுதினமும் அதிகாலையிலெழுந்து ஸ்நானபானநேமநிஷ்டை முடித்துக்கொண்டு பகவத்பக்திவிஷயமாய்க் கங்காதேவியைப்பணிந்து, ஏத்தக்கோல் பிடித்து ஏத்தமிறைத்து கழனிக்குப்பாய்ச்சி உழுது பயிரிட்டு விளைந்த தானியங்களை ஆறுபாகம்செய்து, ஒருபாகம் அரசனுக்கும் இன்னொருபாகம் ஏழைஎளியவர்கட்கும், மற்றோர்பாகத்தை பகவத்விஷயமாய் ஆலயத்திருப்பணிக்கும், வேறோர்பாகத்தை அடிமையாட்களுக்கும் கொடுத்துவிட்டு மீதியாகிய இரண்டுபாகத்தைத் தமது இல்வாழ்க்கைக்கு எடுத்துக்கொண்டாலும், சமயோசிதமாய் யாவராயினும் பசியென்று வந்தால் அவர்கள் பசிதணிய அன்னமிட்டபிறகு தாம்புசித்து சந்தோஷமடையவேண்டும். விபசாரத்வம் புரியாமல் ஏகபத்தினி விரதனாய் நல்லொழுக்கத்துடன் வித்வான்களுக்கு மனமகிழ்வெய்தும்படிதானங்கொடுத்து பகவத்பக்திவிஷயமா யிருக்கவேண்டும். இத்தகைய நற்குணாளரிருக்கும் தேசத்தில் வறுமையென்பது எம்மாதிரியா யிருக்குமென்பதைக்

கவனித்திடவுமாகாது. இதற்குத் திருஷ்டாந்தம் யாதெனில் *கம்பர் ஒருகாலத்தில் தமதுபிராரத்வகர்மானுசாரத்திற் கியன்றனவாய் கிரகசாரபலனுஞ்சரியாய் வந்தொத்துக்கொண்டமையால் அரசனை பகைத்துக்கொண்டு தேசாந்திரியாய் வருகையில் தனக்குப் பசி யதிகரித்ததினால் வழியிலெதிருற்ற ஓர் கிராமத்திற்சென்று அக்ராரத்திலிருக்கும் பிராமண வீட்டிற்போய் சுவாமி கொஞ்சம் தண்ணீர் கொடுப்பீரென? அவர்கள் கிஞ்சிற்றும் மனமிரங்காமல் குளத்திற்போய்க் குடிப்பாயென்றதட்டி துரத்தினர். அவர் மனமெலிந்து வருகையில் ஓர்செட்டியார் கடையிற்சென்று ஐயா! எனக்கு மெத்தப் பசியாயிருக்கின்றது. ஒருகாசு கொடுப்பீராகில் பலகாரபக்ஷணம் வாங்கி புசிப்பேனென்று கேட்க, அந்த லோபி அடாபோடாபோ வண்டி எருதைப்போ லிருக்கின்றாயே எங்கனமேனுஞ் சென்று கூலிவேலை செய்தாவது ஜீவிக்கிறதுதானே இங்கு காசேது பணமேது போடாபோ வென்றனன். அப்பால் அருகில் ஓர் வாணியன் செக்காடிக்கொண்டிருக்கையில் அவனருகிற்சென்று ஐயா மெத்தப்பசியா யிருக்கின்றது. கொஞ்சம் புண்ணாக்குத் தருவீராகில் தின்றுபசியாறுவேனென்றனர். அந்த வாணியன் கிஞ்சிற்றும் மனமிரங்காமல் இப்போது புண்ணாக்கு விலையென்ன அற்பமாயிருக்கிறதோ? ஈதென்ன மண்ணாங்கட்டியென நினைந்தனையோ? சீச்சீ போடாபோ வென்று துரத்தினன். கம்பர் மனவருத்தமடைந்து அடடா விதிவசமே.

விருத்தம்.

சங்குவெண்டாமரைக்குத் தந்தைதாய்ரவியுந்தண்ணீர்
அங்கதைக்கொய்துவிட்டால் அழுகச்செய்தந்நீர்கொல்லும்
துங்கவண்கரையிற்போட்டாற் சூரியன்காய்ந்துகொல்வான்
தங்களின்நிலமைகெட்டா லிப்படித்தயங்குவாரே.

என்பதுபோல நாம் இராஜசமஸ்தானத்திலிருந்தால் கம்பர் கவிக்கு ஆயிரம்பொன்னென்றும் கம்பரைக்காண தக்ஷிணைவேண்டுமென்றும் ஜனங்கள் திரளாய்வருவார்களே அவர்கள் நமக்கு வேண்டிவேண்டி கொடுத்தாலும் பிரியமற்றவனா யிருந்தோம். இச்சமயமோ இந்த அற்ப ரிடத்தில் பசியின் கொடுமையினால் யாசித்தும் மனமிரங்கவில்லையே இனி இறந்தாலும் இறப்பேனன்றி

* இதனை விநோதரசமஞ்சரியில் விரிவாய்த் தொகுத்திருக்கின்றன.

இரப்பதில்லையென்னும் மனவைராக்கியத்துடன் எத்தேசத்திலாவது சென்று கைத்தொழிற்புரிந்து ஜீவிப்போமென வருகையில் அந்திப்பொழுதாய் விட்டதினால் அங்ஙனம் ஓர் தெருத்திண்ணையின்மீது படுத்து சயனித்து விடியற்காலையி லெழுந்து ஆற்றிலிறங்கி பல்விளக்கிக்கொண்டு பசியின் கொடுமையால் தள்ளாடித் தள்ளாடி வருகையில் ஓர் வேளாளன் உழுதுக்கொண் டிருக்கையில் தனதுபத்தினி சாதங்கொண்டுவருவதினால் திரேகசுத்திசெய்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனன். அம்மார்க்கமாய் வருகிற கம்பரைப் பார்த்து, இந்த ஆத்மா மெத்தப் பசியா யிருக்கிறதென்றெண்ணி அவரை அழைத்துப் பக்கத்தில் உட்காரும்படி சொன்னன். அதற்குள் வேளாளன் மனைவியும் வந்து விட்டாள். பெண்ணே இந்த ஆத்மா மிக பசிநோயுடையதாகக் காண்கிறது இவருக்கு அன்னம் படைப்பாயென அந்த உத்தமி கொணடுவந்த சாதத்தை யெல்லாம் கம்பருக்குப் போட்டுவிட்டனள். அவர் பசி தணிந்து, சந்தோஷமாய் ஆ! ஹா! உலகினைக் கார்ப்பவர் வேளாளர்தானென மதித்துச் சொல்வதாயினர்.

விநோதரசமஞ்சரியில் கம்பர்வாக்கியம்

வெண்பா.

மேழிபிடிக்குங்கை வேல்வேந்தர்நோக்குங்கை
ஆழிதரித்தே அருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கையென்றும் நிலைக்குங்கைநீடூழி
காக்குங்கை காராளர்கை.

ஆ! ஹா! இனி இளைத்து சலித்துப் பிராணன் போகிறதாயிருந்திடினும்,

விநோதரசமஞ்சரியில் கம்பர்வாக்கியம்

வெண்பா.

செட்டிமக்கள்வாசல்வழி செல்லோமேசெக்காடும்
பொட்டிமக்கள்வாசல்வழி போகோமே—முட்டிபுகும்
பாப்பாரகத்தை எட்டிப்பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் கண்.

என்று புகழ்ந்து பாடி சற்றுநேரம் இளைப்பாறிக்கொண்டிருந்தனர். அந்த வேளாளன் மனமகிழ்ந்து மீதியாயிருந்த நீராகாரத்

ளைதக் குடித்துவிட்டு ஏரைப்பற்றி உழுந்தருணம் பூமியிலோர் பொற்குவையகப்பட்டன. அதனை கம்பர் அவனுக்கே கொடுத்து சுசஜீவியாய் வாழ்ந்திருப்பாயெனப் புகன்று ஆசீர்வதித்துவிட்டு தமது வழக்கப்படியே தேசசஞ்சாரியாய்ப் போயினர். அப்பால் அந்த வேளாளன் புதையற்கிடைத்த திரவியத்தை தானதர்மஞ் செய்து இல்வாழ்க்கையிற் சிறந்தவனாய் சந்தோஷமாயிருந்தனன். அவ்வித நன்மனதமைந்த உத்தம வேளாளரிருக்கும் நகரில் ஒரு போதும் பஞ்சமனுகாமல் சதாகாலமும் தனதான்ய சம்பத்து நிறைந்தும் ஜலவளம் பொருந்திய நீரோடைகளுடன் வயல்செழித்திருக்கும் நந்நகரென நாவலர் பாவலரனைவரும் வாழ்த்தும்படியாய் நன்மழை பொழிந்து நவதான்யம் விளைந்து உலகமெங்கணும் வறுமையாளரின்றி யாவரும் சுசஜீவியா யிருப்பார்.

## சூத்திர ரொழுக்கம்.

நான்காவது வருணத்தாராகிய சூத்திர ஜாதியார். அடக்கம், பொறுமை, தயாளம், சாந்தம், கோபமின்மை முதலாகிய நற்குணமமைந்து மேற்குறிப்பித்த மூன்றுவகுப்பினரிடத்திலும் ஏவற்றொழிற் புரிந்திடினும் ஆண்டானுக் கிசைந்த அடிமையாய் பதிவிரதை மணாளனிடத்தில் மரியாதையாகவும் பக்தியாகவு மிருப்பதுபோல எஜமானர்கட்குக் கீழ்ப்படிந்து அவர்களாலிடும் டணிவிடையைப் பக்தியாய்ப்புரிந்து தனது தொழிற்குரித்தாகிய கூலிகளைப் பெற்று அதனை சத்விஷயத்திற் செலவுசெய்து கள்ளுண்டல், சூதாடல், வட்டிக் காசைப்பட்டு வஞ்சகரிடத்திற்கொடுத்து மோசம்போவது முதலாகிய துர்விஷயத்திற் காசை செலவழிக்காமல் தினந்தோறும் நாலுபணம் சம்பாதித்தாலும் மூணுபணம் செலவுசெய்து சாப்பிட்டு ஒருபணத்தைச் சேர்த்துவைத்து விக்ரக ஆராதனை, தேவாலயபூஜை, பிதுர்க்கடன் இஷ்டதேவதாபூஜை குலதேவதாபூஜை முதலாகிய சுபசைங்கரியத்திற் செலவுசெய்து, விருந்தோம்பல், யாசகர், தருமம், ஆதுலர்க்குணவு முதலாகியவை லோபத்வமின்றி புரிந்து பகவத்பக்தி விஷயமா யிருக்கவேண்டும் அஃதன்றி திரேக சோம்பலாய் எஜமானை எதிரிட்டு வேலைக்குச் சோம்பேரி சோற்றுக்கு ராஜாளியாய் கடனுடன் கடனுகட்டும் நெய்யிற்செய்வோம் பலகார மென்பதாய் நாலாபக்கமும் கடன்

வாங்கி கொடுக்கச் சக்தியற்று வயற்றுப் பசியின் கொடுமையால் கூலிவேலைசெய்து நாலுபணம் சம்பாதித்து ஐந்துபணம் செலவு செய்தால் அவர்கள் கதி அம்பலத்தில் ஆபத்துதானே,

அஃதெவ்விதமெனின் :—

வெண்பா.

ஆனமுதலில் அதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனவழி
எல்லார்க்கும் பொல்லனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாய் நாடும்.

என்பதற்கேற்ப அவன் ஆயுள்வரையுனும் அல்லலிற்சிக்கி ஆற்றொணு ஆபத்தடைவான். ஆகையால் எத்தகையோராயினும் சுருதி, யுக்தி, அனுபவ, திருஷ்டாந்தரமெனும் நான்கினாலும் அறிவை சீர்திருத்தஞ்செய்து அவனிமிசை வாழ்வராயின் யாதொரு கெடுதியுமின்றி மனைவிமைந்தர் சுற்றத்தினருடன் யாதொரு கஷ்டநிஷ்டூரமுமின்றி உலகினர் மெச்சுந்தன்மையாய் வாழ்ந்து சுகஜீவியா யிருப்பார்.

பாபத்திற் கேதுவாகிய

## அதர்ம்மத்தின் அநீதி.

அவனியிற் ஜனித்த ஜீவர்களில் அநேகர் பாபபுண்ணியத்தியல்பினை இன்னதென்றுங் கவனியாமல் தன்குற்றங்கருதாமல் பிறர்குற்றத்தைமாத்திரம் ஆராய்ச்சிசெய்து பன்முறையும் இகழ்ந்துரைத்து தாங்க ளென்னமோ புண்யாத்மாவாக தங்களைத்தாமே புகழ்ந்து யான்தான் சைவனென்று மதுமாம்ஸபக்ஷணாதிகள் புசிப்பதில்லை. ஆடு, மாடு, கோழி, குதிரை, கழுதை, நாய், பூனை, முதலாகியவைகளை யெல்லாம் அடித்துக் கொல்லுவதில்லையே எனக்குப் பாபமணுகாது புண்ணியத்தையேதேடுகிறேனென்பது நீதிக்குப் பொருந்துமா? யாவராயினும் வேண்டுமென்றே ஓர் பாபத்தை செய்ய முயல்வாரா? துஷ்ட குதிரை தனதுபாகனுக்கு பகையாவதுபோல் அற்ப மனதே ஆத்மாவுக்குப் பகையாய் விளங்கி பாபகிர்த்தியங்களைப் புரிந்து பரதவிக்கச் செய்கின்றன. அஃதெவ்விதமெனின் துர்க்குணசேஷ்டையே தொல்லைப்படுவதற்குக் காரணமாகின்றன. அவைகள் எட்டுவகைப்படும். அவை யாதெனின் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்,

இடும்பை, வேட்கையென்பதில் மனதைச் செலுத்திவிட்டு பல வித பாபகிர்த்தியம் புரிந்து ஜீவர்கட்குப் பலதுன்பத்தை விளைப்பதுதான் அதர்மத்திற்கு காரணம்.

உதாரணம்.

காமத்தினால் பிறர்பொருளை இச்சித்துக்கைப்பற்றுதற்குரிய தந்திரோபாயமனைத்தும் புரிந்து பொய்முதலானவை பேசி ஜீவர்களை வருத்துவதும் பாபந்தானே?

குரோதத்தினால் அந்நியர்மீது பொறாமை வகித்து அடடா நாம் இவ்வளவு ஏழ்மைதிசையிலிருக்கின்றோமே அவனென்ன நம்மிலும் சிறந்த தனவந்தனானால் யாமென்னமாய் சகிப்பதென்று வயிற்றெரிச்சலுடன் அவனைஎவ்விதமாயினும் கெடுப்போமென்று முயற்சிபுரிவது பாபமல்லவோ?

லோபத்தினால் தான் அஷ்ட ஐஸ்வரியனாயிருந்திடினும் தன்னைச்சேர்ந்த பந்துஜன மித்திரரும் தன்னைப்பெற்றதாய் தந்தையரும் தன்னுடன் பிறந்த அண்ணன்தம்பி முதலானவர்களெல்லாம் வறுமையாளராய்ப் பசியால் மெலிந்து வருத்தப்பட்டழுதிடினும் தன் கையிலிருக்கிற காசை கொடுத்தால் குறையுமேயென்று பொன் காத்த பூதம்போல் யாரையும் சேரவொட்டாமல் அடித்துத் துரத்துவது பாபந்தானே.

மோகத்தினால் தான் அகஸ்மாத்தாய் அஷ்ட ஐஸ்வரிய தனவந்த மகாராஜனாக வேண்டுமென்னும் பேராசையுடன் மனமுயற்சியைத்துணைவகித்து ஜீவர்களை இம்சிப்பது பாபமல்லவோ.

மதத்தினால் மனோகர்வங்கொண்டு தனக்கு யாதொருவரும் நிகரில்லையென வீரவார்த்தைகளைப் பேசிக்கொண்டும் வாசித்த புராணங்களே சிறந்ததென்றும் சிலர் விஷ்ணுவே தெய்வமென்றும் சிலர் சிவமே தெய்வமென்றும் தீர்மானித்துக்கொண்டு "தெய்வமிகழேல்" எனும் ஔவையார் வாக்கியத்தையும் அணுவேனும் நினையாமல், சதா காலமும் தேவதூஷணை புரிவதும் சில அற்பர்கட்குக் கையில் காசு அதிகரித்து விட்டாலும், ஜனத்திரளதிகரித்திருந்தாலும், சரீரத்தில் கொஞ்சம் வல்லமையிருந்தாலும் தனக்கெவரும் நிகரிலையென மமதையுற்று ஜீவர்களைப் பலவிதமாய்ப்பழித்து பரிகாசித்து வீண்கலகமூட்டி நல்லவர்கள்மனதை நடுங்கச் செய்வதும் பாபமல்லவோ?

மாச்சரியத்தினால்—அண்டைவீட்டுசண்டை கண்குளிரப்பார்க்கவேண்டுமென்னும் துர்க்குணத்தினால் கலகக்காரரிடம் நேசித்து, ஆசையுள்ளவர்போற் பாஷித்து, வாய்பேச்சை பிடுங்கி வயற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் வம்பர்களிற் சிறந்தவர்களாய், அவர்கள் வார்த்தையை ஒன்றுக்குப் பத்தாய் விரோதிகளிடம் புகன்று அவர்கட்கும் கோபத்தைமூட்டி அவர்களாற் புகல்வதை மற்றவரிடமும் ஒன்றுக்கொன்பதாய் முடிந்து கட்டுக்கதையாய் தனது சமர்த்தாலிணைத்து அவர்களின் பகைவரிடம் புகன்று கலகத்தைமூட்டி அவர்களொருவர்க்கொருவர் பலவிதமாய்த் தூஷித்து வீராவேசத்துடன் வாய்ச்சண்டை கைச்சண்டை முதலாகிய குரூரபயங்கர சண்டை செய்துக்கொண்டிருத்தல். அண்டையில் நின்று மிகவும் உத்தமர்போல கையைத்தட்டிக் கலகலவென சிரித்துத் தமாஷாய் வேடிக்கைப் பார்ப்பது பாபமல்லவோ?

இடும்பையினால்—தான் புரிவது அநியாயசேஷ்டை யென்பதைக் கிஞ்சிற்றும் கவனியாமல், தான்மாத்திரம் மிகவும் உத்தமனைப்போலவும், மற்றவரெல்லாம் துஷ்டர்களென்றும், சீச்சி! அவன் கெட்டான் இவன் கெட்டான் அவன் அப்படி செய்தான். இவன் இப்படி செய்தான் அவன் அப்படி செய்தானென்றும், இவன் பொய்சொன்னான் அவன் மோசஞ்செய்தானென்றும் அந்நியர்மீது பழிசுமத்தி ஜீவர்களைப் பலவிதமாய் இகழ்ந்து பேசுவது பாபமல்லவோ?

வேட்கையினால்—அந்நியர்பொருளை அபகரிக்கவேண்டுமென்னும் பேராசையினால் பலவித மாயப்பேச்சு மந்திரப்பேச்சு தந்திரப்பேச்சுகளால் ஊராருடமைக்குப் பேயாய்ப் பறந்து, காசுபறிப்பதே காரணமென யாவரையும் ஏமாற்றி ஜீவர்களை இம்ஸித்து அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த திரவியங்களை யெல்லாம் அபகரித்துக்கொள்வது பாபமல்லவோ?

இவ்விதமாய் நரர்களாய் ஜனித்தவர்களில் அநேகர் தனக்குத் தெரியாமற் பலவித பாபகிர்த்தியம் புரிவதனால் ஜனனமரணோபாதையிற் சிக்கித் தயரடைகின்றனர். இதுவே ஆகாமியத்திற்குரிய பாபசொரூபத்திற்கு ஆஸ்தியாகும், உலகிலுதித்த ஜீவர்களில் பொய்சொல்லாமலிருப்பதே புண்ணியமாகும். சிலர் இதனை கவனியாமல் ஈதென்ன பொய்யா? விளையாட்டுக்குத்தானே சொல்லுகிறேனென்று நினைப்பார்கள். அவ்விதமாய் மதிப்பதே அறிவீன

மாகும், பொய்பேசாதவனுக்கு இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்தியும் கிடைக்கும். பொய்பேசுகிறவனுக்குப் பலவித சஞ்சலம் நேர்ந்து மனதிற் கிசைந்தவிதமாய் பாபகிர்த்தியம் புரியச்செய்யும் மனதிற்கு பொய் சிநேகம், பொய்பகை, அறிவிற்கு பொய்பகை, மெய்சிநேகம், ஒருவன் பொய்பேசத் துணிந்தால் மனதும் சகாயமாயிருந்து அநேக விதமான பொய்வார்த்தை அளவிடக்கூடாமலும் வாய்கூசாமலும் வீண்டம்பத்திற்காயினும் விளையாட்டுக்காயினும் விமரிசையாய் பாஷித்து அநேகவிதமான மாயப்பேச்சுகளால் யாவரும் தன்னை நல்லவனென்றும், உத்தமனென்றும் சமர்த்தனென்றும் சொல்லி மெச்சிக்கொள்வார்களென்று உண்மையைப் புறப்படுத்தி சதாகாலமும் தமாஷாக பொய் பேசிக்கொண்டு பலவித பாபகிர்த்தியம் புரிந்து அவதிப்படுவார் அன்றியும் பொய்பேசுகிறவனுக்கு சன்மார்க்கம் சித்திப்பது மகா கடினம். மெய்பேசுகிறவனுக்கு தனது பகையாயிருந்திடினும் அறிவும்சகாயமாயிருந்து காப்பாற்றும் ஆனல்,

விருத்தம்.

பொற்கொடி மணற்றும்போதும் மொதுமக ளிணங்கும்போதும்
நற்குல மழியும்போதும் நல்லவர் தம்மைக்கொல்ல
அற்பர்கள் நினைக்கும்போதும் அருஞ்சமர் விளையும்போதும்
சொற்பெருந் துணைசெய்தற்குச்சொல்லலாம்பொய்யைத்தானே.

இவ்விதமாய் ஜீவர்கட்குச் சமயத்திற்சேற்ற துன்பத்தை நீக்கி சுகத்தை விளைத்தற்பொருட்டு பொய்சொன்னல் தோஷமணுகாது அதனல்மறு ஜனனத்திற்கு ஆத்மலாபமாய் புண்ணியமே கிடைக்கும். ஆனல் ஒருவரைக் கெடுப்பதற்குமாத்திரம் பொய் சொல்லலாகாது. சிலர்யோசிப்பார்கள் பொய்பேசாமலிருந்தால் உலகில் நிர்வகிக்கமுடியுமா? நாமனைவரும் உண்பதும் உறங்குவதுமன்றி யாதொரு ஞானவிஷயகாரியை கண்டுணராத அறிவீனராச்சுதே எவ்விதமாய்ப் பொய்பேசாமலிருப்பது பொய்பேசாமலிருந்தால் பிழைக்கமுடியுமாவென் றெண்ணலாகாது. ஓர் திருடனவன் பொய்யை யகற்றி ஆவிக்கபாயமெய்தும் காலத்திலும், மெய்பேசியதால் இகத்தில் தனதான்ய சம்பத்திலும் ஞானமார்க்கத்தில் சிறந்த அமைச்சனுகிய கீர்த்தியும், பரத்திலும் தேவர்களாற் புகழும் கதியும் அடைந்தனன். ஈதுண்மையோவென யோசிப்பவர் அடியிற் குறிப்பித்திருக்கும் கதாசாரத்தைக் கவனித்துக் கொண்டால் அவரவர் மனதிற்கே சாக்ஷியாய் விளங்கும்,

மெய்பேசிய

## திருடன் மந்திரியான கதை.

ஓர் ஞானியானவர் உலகநன்மையைக் கருதி ஜீவர்களின் அஞ்ஞானமார்க்கத்தையகற்றினால் உத்தமமென்றெண்ணி பற்பல தேசத்திலும் சென்று பிரசங்கஞ்செய்து உலகில் வசித்துலாவும் ஜீவர்கட்கு ஞானோபதேசஞ் செய்துக்கொண்டிருந்தனர். அநேகர் அவரிடம் குரு உபதேசம் பெற்றுக்கொண்டு நல்லொழுக்கத்திற் சிறந்தவராயினர். சிலர் அவ்வரைநம்பாமல், தமது அஞ்ஞானமார்க்கத்திற் கிசைந்தவராய் அவரை இகழ்ந்து பரிகாசித்து இவனென்ன சாமியோ? நம்மைப்போன்ற மனிதர்தானே கஷ்டப்பட்டு ஜீவிக்க கையிலாகாமல் வாய்பந்தலிடும் வம்பர்களைப்போல சமத்காரமாய் வாயாற்பேசி முழுமூடரிடம் பணம் பறிக்கின்றனனென்று தூஷித்துக்கொண் டிருப்பார்கள்,

இவ்விதமாய் உலகிற் பலவிதமனதமைந்த ஜீவர்களுண்டென்றுரைப்பதுபோல அவரவர் மனதிற் கெட்டியவிதமாய்ப் பாஷித்துக்கொண்டிருக்கையில் அந்நகரில் வசித்திருக்கும் படியான ஓர் திருடனானவன் ஓர் நாள் பிரசங்கம் புரியும் ஸ்தானத்திற்போய் நின்றுக்கொண்டிருக்கையில் அன்றையதினம் அம்மஹான் தத்வார்த்தபோதனையை தன்னைச் சுற்றிலுமிருக்கும் ஜீவர்கட்கு உபதேசித்துக்கொண்டிருந்தனர். அச்சமயம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த திருடனுக்குக் கொஞ்சம் ஞானோதயம் விளங்கி, ஆ! ஹா! நாம் பூமியிற்பிறந்து யாதொரு ஆத்மலாபத்தையும் அடையாமல் வீணாக காலங்கழித்திடலானோமேயென மனவிசாரமுற்றவனாய் வீட்டிற்கு வந்து மறுதினம் காலையில் பத்துவிராகனை குருதக்ஷணையா யெடுத்துக்கொண்டு ஞானியாயிருக்கும் ஏகாந்த ஸ்தானத்திற்சென்று அவருக்குக்காணிக்கையாகவைத்து நமஸ்காரஞ்செய்தனன். அம்மஹான் கருணைகூர்ந்து அஞ்ஞானவிருளிலிருந்து ஞானக் கரையேறி ஆண்டவன் திருவடியில் ஐக்யமாவாயென்று ஆசீர்வதித்து வினவுதலாயினர்.

ஞானி—அப்பா! யாதுவிசேஷம் தெரிவிப்பாய்.

திருடன்—சுவாமி! யான் தங்களிடம் ஞானோபதேசம் பெற்றுக்கொள்ள வந்தேன்.

ஞானி—மஹா சந்தோஷம், நீ என்னதொழிற் புரிகின்றனை?

திருடன்—யான் உலகிற்பிறந்த பத்துவயதிலிருந்து இந்த நாள் வரையினும் திருடிப்பிழைக்கின்றேன்.

ஞானி—ஈதென்ன ஆச்சரியமானதா சரியாயிருக்கின்றனவே பஞ்சமாபாதகங்களில் நடுநிலையாகிய களவுபுரிபவனுஞானோதயம் சித்திக்குமா? ஈதென்ன தர்மசங்கடமாயிருக்கின்றதே, அப்பா! நீ வேறு தொழி லேதாயினும் புரிந்து ஜீவிக்கலாகாதா?

திருடன்—சுவாமி! இன்னாருக் கின்னவிதமென ஈசன் அவரவர் தலையிலெழுதியபடிபோற் ஜீவிக்கவேண்டுமென்று நூதனதொழிலெவ்விதமாய்க் கிடைக்கும். அன்றியும், ஓர் வஸ்திரத்திற்குச் சாயம்போடவேணுமென்றால் அது அழுக்கா யிருக்கிறதென்று போட்டுவிடலாமா? அதனை வெள்ளாயில் வைத்து வேகவைத்து ஜலத்தில் துவைத்து சுத்தப்படுத்தினால் வெண்மையாய் வெளுத்துப்போகும் அப்போது அதற்குச் சாயங் கொடுத்தால் நன்றாய் பிடிப்பதுபோல யான் கள புரியும் திருடனாயிருந்திடினும் உமது ஆசிர்வாதத்தினால் எனக்கு ஞானோபதேசத்தைப் புகட்டுவீராகில் யான் புனிதனாவேன் ஆதலின் நீர் யாதொரு சந்தேகமுமெய்திடாமல் அருள்புரிவீர்.

ஞானி—சரி நீ பாஷிப்பதை வினவிடில் உனக்கு ஞானோதயம் சித்திக்கு மென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. அஃதேனெனின் பிராரத்வத்தில் ஞானியாயிருப்பவன் கிஞ்சிற்று நிலைதவறிடில் விட்டகுறையைத் தொட்டமுறைபோற் சஞ்சிதத்திற் சரீரமெடுத்தபிறகு எவ்விதத்திலேனும் ஞானநிலையடைவதற்கிசைந்திடும். ஆகையால் நீ உனது குலத்தொழிலாகிய களவுபுரிந்து ஜீவித்திடினும், பொய்மாத்திரம் பேசாதே இதுதான் யானுனக்குபோதித்த முதலாவது குரு உபதேசம்.

என, அம்மஹான் அனுக்கிரகம் புரிந்து அனுப்பிவிட்டனர். திருடன் குருவைப்பணிந்து நமஸ்காரஞ்செய்துக்கொண்டு பொய் சொல்லாமலிருப்பது ஒரு பெரிய காரியமா? கைதானே திருடுகிறதென்று சந்தோஷசித்தனாய்த் தனது வீட்டுக்குவந்து தனது மனையாளுக்குப் புகன்றனன். அந்த உத்தமி மனமிரண்டு பிராணபதி! நேசவுகாரன் "குரங்குவளர்த்து அவதிப்படுவதுபோல" திருடிப்பிழைப்பவர் ஞானோதயம் பெறுவதெனின் ஆச்சரியந்தானே குரு உபதேசம்பெற்றால் குருவார்த்தையை தடுக்கலாகாதே,

திருடன்—காதலி! நீ சொல்வது ஆச்சரியமாயிருக்கின்றதே நெசவுகாரன் குரங்குவளர்த்திடில் என்ன துன்பம் நேரிடும்? ...

திருடன்தேவி—நாயகா! நெசவுகாரன் பருத்திப் பஞ்சியால் நூலிழைத்துத் தறியிற்தொடுத்து நாடாவை இணைத்து நெய்துக் கொண்டிருந்தால் அவன் வளர்த்திடும் குரங்கானது சும்மாயிராமல் தறியிலிணைந்தாடும் நாடாவின்மீது எகிரிவிழுந்து அதனைப் பிடுங்கி இழைகளை யெல்லாம் அறுத்துவிடும் நெசவுகாரன் அடித்தால் பல்லைக் காண்பிக்குமன்றி நஷ்டத்தைக் கொடுக்குமா அது போல திருட்டுத்தொழிற்புரிபவர்கள் தப்பித்துக்கொள்வதற்காக அநேகவித பொய்வார்த்தைகளை விமரிசையாய்ப்பேசி தப்பித்துக் கொள்வதற்கு முயற்சி புரிந்து வழக்கமாயிருக்கின்றதே ஒரு பொய்பேசினும் அசத்தியனெனும் பெயராற்றிடுமே யென்று அரிச்சந்திரன் எவ்வளவோ கஷ்டநிஷ்டூரமடைந்தனரே உம்மைப்போன்றவர்கள் அபாயகாலத்தில் ஓர் பொய்சொன்னாலென்னவென்று பொய்சொல்லிவிட்டீராகில் குருமொழிதவர்ந்த பாவியாவதற்கு நேரிடுமே.

திருடன்—நாயகி! யான் அவ்விதமாய் மோசம்போகேன் திருடு அகப்பட்டால் தானே தப்பித்துக்கொள்வதற்குப் பொய் பேசுவது, அகப்படாவிட்டால் பொய்பேசமுடியுமா?

என, மனதைரியமாய்ப் புகன்று அன்றையதினம் தமது வழக்கப்படியே வீட்டு சங்கதியைப் பேசிக்கொண்டிருந்து பசிவேளையானபின் ஸ்நானஞ்செய்துக்கொண்டு தனது இஷ்ட தேவதா பூஜை புரிந்து ஆசனத்திலமர்ந்து தனது மனைவியால் வட்டித்த மதுமாம்ஸபக்ஷணாதிகளுடன் அன்னபதார்த்தம் புசித்தானபின் சற்றுநேரம் வரையினும் சயனித்து நித்திரைசெய்து விழித்தெழுந்து முகங்கழுவி வாய் கொப்பளித்து ஆடையாபரண சிங்காரலங்கிர்தனாய் பெரிய மனுஷாள் சகவாசங்கொண்ட உத்தமன் போல ஒவ்வொரு வீட்டையும் கவனித்துக்கொண்டு வருகையில் இராஜசமஸ்தானத்திலின்றையதினம் திருடவேண்டுமெனும் பேராசையைத் துணைவகித்து தனது வீட்டிற்குவந்து இரவில் ஏழு நாழிகையில் அன்னபதார்த்தம் புசித்து திருடர்க்குரிய ஒட்டுஜல்லடத்தை அணிந்துகொண்டு களவுபுரியும் தொழிற்கருவியாகிய கன்னக்கோல், கத்தி, ஈட்டி முதலாகியவையும் எடுத்துக்கொண்டு மனைவியினிடம் தாம்பூலம்பெற்று தனக்கு உபதேசஞ்செய்த குரு

நாதனாகிய மஹானைத் தியானஞ்செய்துக்கொண்டு இரவு பதினைந் துநாழிகைக்குமேல் யாவரும் கண்ணுறங்கி நித்திரைபுரியும் தருணத்தில் அரண்மனையின் பின்புரத்திலிருக்கும் மதிற்சுவற்றில் பக்குவமாய்க் கன்னக்கோல் வைத்து உள் நுழைந்து மெல்லன நடந்து வருகலாயினன். அன்றையதினம் அந்நகரத்தரசன் காற்றுவாடைக்காக உலாவிவருவோமென்று அரையிலணிந்த ஓர் வெள்ளைவஸ்திரத்துடனெழுந்து அரணின் பின்புரத்திலிருக்கும் சோலையில் உலாவிக்கொண்டிருக்கையில் திருடனைப்பார்த்துவிட்டு சந்தடிசெய்யாமல் வினவுதலாயினன்.

அரசன்—நீர் யாரையா? இந்த இருட்டுகாலத்தில் மிகவும் மெதுவாய்ப் போகின்றீரே.

திருடன்—ஈதென்ன தர்மசங்கடம் பொய்சொன்னால் குருவாக்கியம் தவிர்ந்ததுபோலாகுமே சரி குருகடாக்ஷம் உண்மையைப் புகன்றால் ஆவது ஆகட்டும். ஐயா யான் திருடன்.

அரசன்—எங்கு செல்கின்றீர்?

திருடன்—இன்று அரண்மனையில் திருடவந்தேன் நீர் யாரையா?

அரசன்—யான் வழிப்போக்கன் கட்டுசாதம் புசிப்பதற்காக இந்த தோட்டத்தில் வந்தேன். சரி நல்லதிருக்கட்டும் யானும் திருடுகிறேன் பாகம்தருன்கிறீரா?

திருடன்—ஆ! அதற்கென்ன ஆக்ஷேபனையா? இருவரும் திருடினால் அகப்பட்டதைச் சரிபாகமாய்ப் பங்கிட்டுக்கொள்வோம்.

என பகர்ந்தவை வினவிய அரசன் யோசித்து இவன் திருடனாயிருந்தும் பொய்சொல்லா வாசகனாயிருக்கின்றான். சரி! இன்னமும் இவன் குணநிசயத்தைப் பார்ப்போமென்று அவனுடனே சந்தடி செய்யாமல் பொக்கிஷ மிருக்கு மிடத்திற் சென்று, ஐயா இந்தப் பெட்டியில் பார்த்தீரா மாணிக்க மிருக்கிறதென்று அதிலிருந்த மூன்று மாணிக்கத்தையும் எடுத்து திருடன்கையிற் கொடுத்தனன். அவன் இம்மூன்றையும் பார்த்தவுடனே ஆனந்த சாகரத்தில் மூழ்கியவனாய்ச் சந்தோஷித்து ஒன்றை பெட்டியில் வைத்துவிட்டு மற்றிரண்டில் ஒன்றை தானெடுத்துக்கொண்டு மற்றதை அரசனுக்கு கொடுத்தனன். வேந்தன் அதிசயித்து ஐயா! அதை

என் வைத்துவிட்டீரென வினவினன். திருடனானவன் ஐயா! அதனை நீயெடுத்துக்கொண்டாலும், யானெடுத்துக்கொண்டாலு முன்னமே யான் உமக்குச் சொன்ன சரிபாகமெனும் வாக்கியம் பொய்யாய்விடும். அன்றியும் வைத்தவர் பொருளை வயறெரியச் செய்வது மஹா பாதகம் ஆகையால், அது சொந்தக்காரனுக்கு இருக்கட்டுமென்றுசொல்லி தனது வீட்டுக்குப்போயினன். அரசனும் அவனுடனேபோய் வீட்டின் அடையாளத்தைப் பார்த்துக் கொண்டு, ஐயா! யான் எனது தேசத்திற்குப் போய்விடுகிறேனென்று மாறுபாடாய்ச் சொல்லிவிட்டுப் பழையபடியே அரண்மனையின் பின்புறத்தின் மதிற்சுவற்றில் கன்னக்கோல் வைத்திருக்குமிடத்தில் வந்து பக்குவமாய் நுழைந்து தனதுமலரணை மஞ்சத்தில் வந்து சயனித்துக்கொண்டனன். பொழுதுவிடிந்தவுடனே மந்திரியை அழைத்து நமது அரண்மனையில் இரவு கள்வர் புகுந்தது போற்காண்கிறது காஜான்ஜியை வரவழைப்பீரென்றனன். அதற்குள் பொக்கிஷதாரும்வந்துவிட்டான். அரமணை பொக்கிஷத்தில் வைத்திருக்கும்மாணிக்கம் களவுபோனது என்னமோ போய்சோதித்துப்பாருமென்னவே கஜான்ஜீ ஓடிவந்து பெட்டியைத்திறந்து பார்க்க ஒன்றுமாத்திரமிருப்பது இரண்டில்லாமையாலும் வந்த திருடன் அவசர நிமித்யமாய் இதை எடுக்காமல் பயந்தோடினானென்று மதித்து அந்த மாணிக்கத்தை பொக்கிஷதரர் எடுத்து யாதொருவருங்காணாவிதமாய் இடுப்பிற் சொருகிக்கொண்டு இராஜசமுகத்தில் ஓடிவந்து நயவஞ்சகமாய்ப் புகலாயினன்.

பொக்கிஷதார்—அரசே இரவில்வந்த திருடன் கஜானாவிலிருந்த மாணிக்கங்களைமாத்திரம் திருடிக்கொண்டு போய்விட்டனன். மற்றவைகளை எடுக்கவில்லை.

அரசன்—மற்றவை போனால் அவசியமில்லை மூன்று மாணிக்கத்தையும் எப்படி எடுத்துக்கொண்டு போயிருப்பான் ஒன்றாயினும் வைக்கவில்லையா.

பொக்கிஷதார்—இல்லை, இல்லை, மூன்றையும் எடுத்துக்கொண்டுபோய்விட்டனன். திருடவந்தவன் கிடைத்தவையெல்லாம் எடுத்துக்கொண்டு போவானன்றி ஒன்றைமாத்திரம் மீதியாய்வைத்துவிட்டுப் போவானோ?

என, ஒரேபிடிவாதமாய்ப் புகன்றனன். அரசனுக்குக் கோபம்பிறந்து ஆ! ஹா! என்ன ஆச்சரியம்? திருடனாகிலும் பொய்

சொன்னால் பாபமென்றும் வைத்தவர்பொருள் முழுதும்எடுத்துக் கொண்டால் மஹா பாதகமென்றும் உண்மையான நியாயமார்க்க மாயிருந்தனன். இவன் இவ்வளவு நம்பிக்கையான உயர்ந்த உத்தி யோகத்திலிருந்தும் கிஞ்சிற்றும் பழிபாப மெண்ணாமல் பொய் பேசுகின்றனனேயென்று மனதிலெண்ணி இன்னமும் இவனை மிரட்டி பயங்கரப்படுத்தி பார்ப்போமென்று அடடா! வந்தவன் இரண்டுதான் எடுத்துக்கொண் டிருப்பான். மற்றொன்றை நீதான் வைத்திருக்கின்றனை கொடுப்பாயென்று தொடர்வழக்காடுகையில் பொக்கிஷதார்சிரித்து அரசே திருடவந்தவன் திருடனென்றே வைத்துவிட்டுப் போவானோ? யானென்ன மரியாதையின்றி பாஷி க்கின்றீரே யென்றனன். அருகி லிருந்த மந்திரி பிரதானியரும் அவ்விதமே புகன்று அரசனை வெறுத்துக்கொண்டனர். வேந்தன் கடுஞ்சினமடைந்து, பொக்கிஷதாரைச் சுற்றிலும் காவலாளிகளை நிற்கச்செய்து தலையாரியை அழைத்து இரவில்வந்த திருடன் வீட் டின் அடையாளத்தை விபரமாய்ப்புகன்று அவனை யாதொரு துன் பமும் செய்யாமல் அழைத்துக்கொண்டு வருவீரென்றனர் அவர்க ளும் அரசன் உத்திரவின்படியே திருடன்வீட்டில்வந்து அவனை யும் அழைத்துக்கொண்டு வந்து விட்டனர். அரசன் அவனைப் பார்த்து நீ இராத்திரி இங்குவந்து திருடியது உண்மையோவென் றனன். திருடன் மனமிரண்டு ஐயா யான் பொய்பேசுகிற வழக்க மில்லை எனது வயற்றை வளர்ப்பதற்காக திருடியது உண்மைதா னென்றான். என்னென்ன திருடினாயென்று கேழ்க்க யானும் இன் னொருவனும் வந்து பொக்கிஷத்தி லிருக்கும் மூன்று மாணிக்கத் தை யெடுத்து யாங்கள் ஒவ்வொன்று எடுத்துக்கொண்டு வைத்த வர்பொருளை முழுதும் எடுத்துக்கொண்டால் மஹாபாதகமென்று ஒன்றைவைத்துவிட்டு இரண்டை யெடுத்துக்கொண்டோம் அதில் ஒன்று என்னிட மிருக்கிறது இதோவைத்துவிட்டேன். மற்றதை என்னோடு வந்தவன் எடுத்துக்கொண்டு போய்விட்டானென்றான். அரசன் சந்தோஷித்து அப்பா! யான்தான் உன்னுடன்திருட வந்தவன் இதோ யானும் வைத்துவிட்டேன். அடா காவலாளி களே மற்றொன்று பொக்கிஷதாரிட மிருக்கிறது. சோதனைபோடு வீரெனவே அவன்பயந்துகொடுத்துவிட்டான். மந்திரி பிரதானிய ரனைவரும் ஈதென்ன ஆச்சரியமென்று வியப்புற்றார்கள். அரசன் பொக்கிஷதாரை சிறைச்சாலையிலிட்டு திருடனுக்கு பொக்கிஷதார் உத்தியோகம் கொடுத்து மாதம் ஐம்பதுவிராகன் சம்பள மேற்

படுத்தினன். குருடன் மனமகிழ்ந்து தனக்கு உபதேசஞ்செய்த குருவிடம் வந்து சுவாமி யான் பொய்பேசாதிருந்தமையால் பொக்கிஷதார் உத்தியோகம் கிடைத்ததென்று பத்துவிராகன் காணிக்கையாய்க் கொடுத்து சேவித்துக் கொண்டனன்.

இவனுடைய நற்குணாதிசயத்தையும் குருவாக்கிய பரிபாலனார்த்தம் புரிந்து உறுதியையும் கவனித்து அப்பா! யாது விசேஷமென வினவினர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற பழையதிருடன் அம்மஹானைப் பணிந்து சுவாமி யான் உமது ஆக்கினைபின்படியே பொய் சொல்லாதிருந்தமையால் யான் பொக்கிஷதாராயினேனென்று நிகழ்ந்தவை யனைத்தும் ஆதியோடந்தமாய் ஒன்றேனும்விடாமல் விபரம் விபரமாய்ப் புகன்று சுவாமி இனி எதைவிடச்சொல்லுகின்றீரோ அதனையும் விட்டுவிடுகிறேனென்றனன். சந்நியாசி புந்நகைபுரிந்தவன் புனிதனுவானென்றிடினும் அதன் பக்கத்திலிருக்கும் கொலையைத் தவிர்ப்பாயாகில் உத்தமமென்றனர். அவன் அவ்விதமே மஹாபாக்கியமென குருவாக்கியத்தை சிரமேல் வகித்தவனாய் பிறர்மனதிற்கு வருத்தங்கொடுப்பதே கொலைபுரிதற்குக் காரணமென்று ஆசானிடம் செலவுபெற்றுக் கொண்டு அரண்மனையிற்சென்று வேந்தே நமது தேசத்தின் குடிகளுக்கு விதைமுதலின்றிய ஏழ்மை வருத்துகின்றன. ஆகையால் அவர்களுக்கு கொஞ்சம் திரவியசகாயஞ் செய்தும் வீணாய்ப் போகும் நீரோடைகளை வயலிற்பாயும்படி யாதொருதொழிலுமின்றிய ஏழைகளுக்குக் கூலிகொடுத்துத் திருப்பவேண்டும் இவ்விதமாய்ச் செய்தால் நாடெங்கும் வாழ்க கேடொன்றுமில்லையென்னுந் தன்மையாய் குடிகள் க்ஷேமமாயிருந்திடில் பகுதி பணமும் அதிகமாய்ச்செலுத்துவார்களென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வேந்தன் சந்தோஷமடைந்து ஐயா! கஜான்ஜீ உமது இஷ்டப்படியே செய்வீரென்றனன். அவனும் அவ்விதமே நன்கெனச் சம்மதித்து ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் குடிகளனைவரையும் வரிசைக் கிரமமாய் ஒவ்வொருவரா யழைத்து யாவருக்கும் ஒரே அளவாய் பத்து பத்து விராகன் இனமாய்க் கொடுத்து இதனை நீங்கள் விதைமுதலாய் வைத்துக்கொள்வீரென் றுக்ஞாபித்தனுப்பிவிட்டு மற்றுமுள்ள ஏழைகளில் யாதொரு தொழிலுமின்றியவரையெல்லாம் வரவழைத்து அவர்களுக்கு சிலரை மேஸ்திரிகளாய் நியமித்து காடுகளை யெல்லாம் சீர்திருத்தி கழனிகளாகச்செய்து

நீர்க்கால் வாய்க்கிணறு ஏரி குளம் ஆறுகளெல்லாம் வெட்டி பூமியிற் பொழியும் மழையை வீணுய்ப்போகாமல் கழனிகளுக்காதாரமாகும்படியாகச் செய்யும்படி திட்டஞ் செய்தனன்.

இங்ஙனம் இவனுடைய தர்மகுணத்தினல் உலகத்தில் யாதொரு வருமையாளருமின்றி ஐஸ்வரியவந்தராகவும் நகரிற்கோர் பழுதுமின்றி குடிகளெல்லாம் பஞ்சமின்றியவராய்பகுதிபணமும் வருஷாவருஷம் ஒட்டிக்கிரட்டிப்பாய்ச் செலுத்தி வந்தனர். அரசன் மனமகிழ்ந்து அவனுக்கு மந்திரி உத்தியோகந் தந்தனர். இப்படி இருக்கையில் அந்தத் திருடனுனவ்ன் தனது பழைய வழக்கத்தைமறந்து மிகவும் உத்தமகுணத்திற் சிறந்த ஞானியாயினன். ஆகையால்,

வெண்பா.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தை பட்டாலும்
முத்தர்மன திருக்கும் மோனத்தே வித்தகமாய்
காதிவிளையாடி இருகைவீசிவந்தாலும்
தாதி மனம் நீர்குடத்தே தான்.

என்னுந்தன்மையாய் தனது வயற்றைவளர்ப்பதற்கு என்ன தொழிற் புரிந்திடினும் மனதை மாத்திரம் அறிவானந்தனுக்கு அடங்கி இருக்கும்படியாக திடசித்தம் வாழ்ந்து தூர்க்குணத்தை விடுத்து, நற்குணத்தினராய் அஞ்ஞானிகளின் சகவாசம்விடுத்து ஞானிகளின் துணைவகித்து சிற்றின்பத்தை விடுத்துப் பேரின்ப வாழ்வானந்தத்திற் திறந்து, இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும்பெற்று சிதாகாசமாய் ஜனனமரணேபாதையின்றி ஜோதியிற் கலந்துய்வதே சிரேஷ்டமாகும்.

## தர்மநீதி.

சிலர் தருமஞ்செய்வதென்றுல் கையிற் காசிருந்தால் தானே தருமஞ்செய்யலாம் இல்லாதவனே பொல்லாதவனென்று சொல்வது அறிவீனமாகுமன்றி, அறிஞர்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ளார், தருமமாவது என்ன, வாயாடிகளாயிருப்பவர் சமர்த்தினல் ஏழை எளியவர் வயற்று சோற்றுக்கில்லாதவரை யெல்லாம் வம்பு செய்து அடித்து மிரட்டி பயங்கரப்படுத்தி அடடா மூடர்களே "ஐயமிட்டுண்" என்று ஔவையார் சொன்ன வாக்கியத்தின்படி

யே உங்கள் வயற்றுக் கில்லாவிட்டாலும் பெரிதல்ல ஓர் மனிதன் வெளிதேசத்திலிருந்து வந்திருக்கிறுன். அவனுக்குச் சாப்பாடு வேண்டும் வழிச்செலவுவேண்டும் கோவில் கட்டவேண்டும் குளம் வெட்டவேண்டும் நீங்கள் இரண்டுமூன்றுநாள் வரையினும் ஆத்ம துரோகஞ்செய்து பட்டினியாயிருந்திடினும்பெரிதல்ல நாலுபணம் கொடு, ஐந்து பணம் கொடுவென்று ஊரார் பணத்தை வாங்கி தாறுமாருய்ச் செலவுசெய்து வீண்டம்பம் வெளிமயக்கமென்பது போல அன்னதானமென்று ஆண்டிப்பரதேசியை யெல்லாம் வர வழைத்து வெகு வீராப்புடனே அவர்களிற் சிலருக்கு மாத்திரம் அரைவயிருே கால்வயிருே போட்டுவிட்டு மற்றவர்களை யெல்லாம் தடியாலடித் துரத்துவது தர்மமாகுமா? ஒருக்காலுமாகாது பாப லோபகர்மமாகும், இத்தகைய துன்மார்க்கர்தான் மறுஜனனத்தில் வறுமையாளராய்ப் பிறந்துக் கஞ்சிக்கே காற்றுய்ப் பறந்து பகைஞராய்விளங்கி தீராத்துயரிலாழ்ந்து திக்கற்றபரதேசியாயலைவார். ஆகையால் இது தர்மநீதியல்லவென்று யான் சொல்லாமலே எல் லோருக்கும் தெள்ளிதாய் விளங்கும்.

85691

சிலர் பெருமைக்காகவாகிலும் தாங்கள் சாப்பிட்டு உட்காரும் போது, ஆண்டிப் பரதேசியை அழைத்து வருவோமென்றிடில் நேரமாகிறது இடாத லோபிகள்வீட்டுக்கு எந்நேரமும் போகிறுர் யான் தர்மகுணத்தினனுயிருந்தும் யாருமவருகிறதில்லையே என்று பலபேர் மெச்சிக்கொள்ளும்படி வெளியிற் சொல்லிவிட்டு வீட்டுக்குள் ஓடிப்போய் ஆசனத்தில்உட்கார்ந்து அதிதீவிரமாய் அன்ன பதார்த்தம் புசித்துவிட்டு மாடுகத்துவது போலவும் ஏப்பமிட்டுக் கொண்டு வெளியேவந்தால் யாவரேனும் வறுமையாளர் பசியென்றுவந்து சோறென்று கேட்டால் மிகவும் பரிதாபப்படுகிறவர் போல, அடாபோடாபோ சோம்பேறிப்பயலே கொஞ்சம் முன்பாக வரக்கூடாதாவென்று ஏமாற்றுகிற கயவஞ்சகம் தர்மமாகுமா? ஈதனைத்தும் ஆகாமியத்திற்குரிய கர்மந்தானே.

## உதாரணம்.

ஓர் ஊரிலிருக்கும் வைசியனொருவன் தனது வர்த்தகக்கடையை மூடிவிட்டு வீட்டுக்குவந்து ஸ்நானபானஞ்செய்துவிட்டு சாப்பிடப்போகும் சமயத்தில் வெளியே வந்து ஐயோ யாதொரு பிச்சைக்காரனும் காணகிலனேயென்று வருத்தப்படுவன்போற் பா

சாங்கு செய்துவிட்டு திடீரென்றபோய்த்தெருக்கதவைத்தாளிட்டுக் கொண்டுபோய் சாப்பிடுவான். யாராகிலும் அன்னக்காவடிகளாய்த்திரியும் ஆண்டிப் பரதேசிகள் வந்து அன்னமோ ராமசந்திராவெனக் கூச்சலிட்டால் மர்மமுணராத அண்டைவீட்டுத் திண்ணையிலிருப்பவர் மனம் வெறுத்து, அடடா உங்களுக்கு அதிர்ஷ்டமில்லை செட்டியார் இந்நேரம் வரையிலும் காத்திருந்து இப்போது தானே சாப்பிடப் போனாரென்று சொல்லி விசனப் படுவார். இப்படியிருக்கையில்; ஓர் நாள் ஓர் கிழட்டு சந்நியாசி பக்கத்துவீட்டிற்றுனே வெகு நேரம் உட்கார்ந்திருந்தனன். செட்டியார் தனது வழக்கம்போல கடையை மூடிவிட்டு வீட்டுக்குவந்து தான் சாப்பிடப்போகுந்தருணம் வெளியில் வந்து நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து யாதொரு பிச்சைக்காரரும் காணப்படாததால் ஆரையா ஆண்டிப் பரதேசிகளே அன்னம் புசிக்க வாருமென கூச்சலிட்டான். அண்டைவீட்டுத் திண்ணையில் சண்டிபோல் உட்கார்ந்திருந்த கிழட்டு சந்நியாசி இதோவந்தேனையா? புண்ணியாத்மாவே வென ஓடிவந்தான். லோபியாகிய வைசியன் மனமெலிந்து திகிலுற்று ஐயோ! நாம் யாருமில்லையென்றுகூச்சலிட்டால் இவன் எப்படியோ வந்து விட்டானே இல்லையென்றாலும் இத்தனை நாளாய் நம்மை மெத்த தர்மவானென்று புகழ்ந்துக்கொண்டிருந்தவரெல்லாம் பரிகாசிப்பாரேயென பயந்து வீரப்பேச்சுக்கு பஞ்சமில்லாதவன்போல வாருமைவா சுவாமி யென்று சந்நியாசி வாசலில் வருவதற்குள் தன் பெண்சாதியை மெதுவாக நாலைந்து அடி அடித்தனன். அந்த வஞ்சகி சந்நியாசி சோற்றுக்கு வருவதை யுணர்ந்து நமது கணவன் உஷார் படுத்துகிறாரென்று வழிபறி திருடரிடஞ்சிக்கியவர்கள் வருத்தப்படுவதுபோல குய்யோமுறையோவென கூச்சலிட்டழத்தொடங்கினள். வந்தவிருந்தாளியாகிய சந்நியாசி மனமிரண்டு ஈதென்ன கர்மம் இவ்வளவு நேரம் காத்திருந்தும் வயற்றுக்குக் கஞ்சி யகப்படாமல் கலகாரம்பமாய் விட்டதேயென்று ஓடிப்போய் நடையிலிருக்கும் * தொம்பகூண்டின் பின்னாற்போய் ஒளித்துக்கொண்டான். ஈதுணரா வைசியன்பீடை ஒழிந்ததென்று போய் தெருக்கதவை மூடி தாளிட்டுக் கொண்டு மிகவும் சந்தோஷமாய் பெண்சாதியிடம் வந்து பெண்ணே யான் நோகாமல் தானே அடித்தேனென்றான். அவள் தான் ஓயாமல் தானே அழுதேனென்றாள் ஒளிந்திருந்த சந்நியாசி திடீரென ஓடி

* தொம்பகூண்டு—நெற்கொட்டும் பாத்திரம்.

வந்து யானும் போகாமல் தானே இருந்தேனென்றூர். "இதற்குப் போகும்வழி எப்படி" செட்டியார் மரியாதைக் கஞ்சி அன்றைய தினம் அவனுக்கு சாதம்போட்டு இனிமேல் வரவேண்டாமென்று வயறெரிச்சலாய் அனுப்பிவிட்டான். இது தானு தர்மம், ஈதனைத்தும் பாபிகட்குரிய கர்மகைங்கரிய சேஷ்டையாகும் ஆனல் தர்மமாவது எவ்விதமெனின், யாவராயினும் பசியென்று வந்தால் தான் குடிக்கும் கூழையாகிலும் தண்ணீர்போற் கரைத்து வார்த்துப் பசிதணியச் செய்வாராகில் அதுதான் தர்மம். தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த திரவியத்தைச் செலவுசெய்து கோயில் குளம்கட்டினுல் அதுதான்தர்மம், தனதுகையில் அரைக்காசேனுமில்லாவிட்டால் நம்பி வந்த வறுமையாளரை ஜீவிக்கச்செய்யும் முயற்சியைநாடி சரீரகஷ்டமடைந்தாயினும் காப்பாற்றுவதுதர்மமாகும், வழியிற் போகும்போது எந்த பசுவா யிருந்தாலும் சரியே பசியால்மெலிந்து புல் அகப்படாமலும் வேலியைத் தாண்டுவதற்குச்சக்தியற்றுத் தவிப்பதைக்கண்ணுற்றுல் திடீரென வேலியின்மீது பாய்ந்தாகிலும் புல்லறுத்துக்கொண்டு போட்டு பசுவின் பசியைத் தணிப்பது தர்மமாகும். வலிமை யற்றவரை யாகிலும் நோயாளிகளையாகிலும் ஏழைகளையாகிலும் யாவரேனும் அடித்தாலும், தொந்தரை செய்தாலும் பார்த்தவுடனே திடீரென்றுபோய் கொடுமைசெய்பவர்களின் காலில் வீழ்ந்து பணிந்தாயினும் தமது சரீரத்தை தத்தஞ்செய்தாயினும் ஆபத்துற்ற அவர்களைக் காப்பாற்றுதல் தர்மமாகும், இதற்கு சிபிச்சக்ரவர்த்தியே சாக்ஷியாகும். இவ்விதமாய் கிஞ்சிற்றேனும், வீண்டம்பம், கயவஞ்சகம், மோசம், பொய், பித்தலாட்டம் அடுத்துக்கெடுத்தல் முதலாகிய துர்க்குணமின்றி சுத்தமனத்தினராய் மனோவாக்குக் காயமிம்மூன்றினுலும் ஜீவகாருண்ய பரோபகாரத்துடன் தர்மஞ்செய்யப்பட்டவர்கட்கு ஆண்டவன் துணையிருந்து அத்தகைய தர்மசொரூபிகளின் பிராரத்வகர்மானுசாரத்தியல்பாலுற்ற பாபங்களனைத்தும் நசிக்கும்படி யருள்செய்து, ஜனனமரணோபாதையற்று சதா சுகியாய் பகவான் திருவடிக்கன்பராய் விளங்கும்படி யருள் புரிவார்.

### இதற்கு திருஷ்டாந்தம்.

ஓர் சிற்றூரில் சதாகாலமும் தருமசொரூபியாகவே ஓர்குடியானவன் தனது வயற்றை வளர்ப்பதற்காக எத்தொழிலைச் செய்தால் உத்தமமென்று யோசிக்கையில் இனிப்பு வஸ்துவாகிய மிட்

டாய்க்கடை வைத்திருப்பதே சிரேஷ்டமென் றெண்ணி தன்னிட மிருபது விராகனுக்கு நெய், சர்க்கரை, கோதுமைநொய், முந்திரி பருப்பு முதலாகியவையும் தட்டுமுட்டு சாமான்களும் சேகரித்து, ஓர் சுபதினத்தில் மிட்டாய்கடை வைத்து அதில் வரப்பட்ட லாபத்தைத் தனதுகுடும்பத்தின் சவரக்ஷணைக்கு வைத்துக்கொண்டு மனைவிமைந்தருடன் ஜீவித்திருந்தனன்.

இவன் நிலை இவ்விதமாயிருக்கையில் ஓர் மஹான் அம்மார்க்கமாய்ச்சென்றுந்தருணம் பசியதிகரித்ததாலும் வெய்யலின் தீட்சண்யத்தினால் வழியிலெதிருற்ற மிட்டாய்க்கடையிற்போய் உட்கார்ந்தனர். அந்த மிட்டாய்க்கடைக்காரனாகிய குடியானவன் ஓர் வாழையிலையில் மிட்டாய்களும் ஓர்பாத்திரத்தில் பசுவின்பாலும் கொணர்ந்து சந்நியாசியின் முன்வைத்து புசித்துக் களைதெளிவீரென்றனன். வெய்யலின் தீக்ஷண்யத்தினால் விடாய்ப்பட்டு வந்திருந்த சந்நியாசியானவர் இவனுடைய உதாரத்வ குணத்திற்கு மெச்சி ஆ! ஹா! இத்தகைய உத்தமனே சத்தியலோகத்திற்குரிய பாத்திரனென சித்தத்திலெண்ணி வாழையிலையில் வட்டித் திருக்கும் மதுரமாகிய மிட்டாய்களை யெல்லாம் புசித்துப் பசுவின் பாலைக்குடித்துக் களையாறிய பிறகு மிட்டாய்க்கடைக்காரனாகிய குடியானவன் விசாரிப்பதாயினர்.

சந்நியாசி:—அப்பா! உனது தர்மத்தினால் எனது வயற்றுப் பசி தவிர்ந்தன. ஆகையால் நீ எனக்குசெய்த இந்த பேருதவிக்கு யானுனக்கு பிரதி உபகாரமாக ஜனனமரணோபாதையின்றி நன்மார்க்கத்தை போதித்தலே சிரேஷ்ட மாகும். அஃதெவ்விதமெனின்,

வெண்பா.

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

உத்தமர்க்கு உதவிபுரிந்தால் எத்ததியேனும் இலாபங்கிடைக்கு மென்பதுபோற் சத்விஷய பகவத்பக்தியானந்தமாய் நீ எனக்குச்செய்த பேருதவிக்காக யானுன்னை ஞானியாகச்செய்து ஆத்ம

லாபமடையும் மார்க்கத்தைக் காண்பிக்கிறேன் வருவீரென்றழை க்க, பிராரத்வகர்மானுசாரத்திற் கிசைந்த விதமாய் சஞ்சிதத்திற் சரீரமெடுத் துழல்பவனாகிய குடியானவனுக்கு மனைவிமைந்தர் மீதுற்ற பாசபந்தம் விட்டுப்போகுமா? ஒருக்காலு முடியாதகை யாலும் மஹான் வார்த்தையைத் தடுக்கக்கூடா தாகையாலும் ஓர் விதமாய் புகலலாயினன்.

மிட்டாய்க்காரன் :—சுவாமி! மனைவியைத்தனியாய் விடுத்து வருவதெனின் பாபஹேதுவாகும் ஆகையால் அவளுக்குத் தகன கிரியை உற்றுரிமையாவும் நடாத்திய பிறகு வருகிறேன்.

சந்நியாசி :—சரி! உனது இஷ்டம் இன்னும் பாசபந்தம் உன்னைச் சூழ்ந்திருக்கிறது என நவின்று தனது மனதிற்கிசைந்த படியே சென்றுவிட்டனர். மறுபடியும் இவருக்கு மிட்டாய்க் கடைக்காரன் மீதிருக்கும் விஸ்வாசத்தினால் சிலசமயம் அவன் வீட்டுக்குச்சென்று அவனுக்குச் சில ஞானோபதேசம் புகன்று விருந்தமுதருந்தி விட்டுப்போய் விடுவார். இப்படி சிலநாட் கழி த்தபின் வந்தனர். மிட்டாய்க்கடைக்காரன் அவ ரடிபணிந்து சுவாமி! அடியேன் மனையாளி இறந்துவிட்டனளென்றனன். சந்நி யாசி அவனுக்குத் தேறுதலுரைத்து அப்பா! இனியாகிலும் என் னுடன் வருகின்றனையாவென்றனர். அவன்கிஞ்சிற்றும் சம்மதியா மல் சுவாமி! அடியேனுடைய சிறியபிள்ளைக்கு இன்னும்மணமாக வில்லை ஆகையால் அவனுக்குக் கலியாணஞ்செய்துவிட்டு அவனை யும் ஓர் குடும்பஸ்தனாகச் செய்துவிட்டால் அப்பால் எனக்கு யா தொரு சஞ்சலமுமில்லை அப்போது வருகின்றேனென்றனன். அம் மஹான் நல்லதென்று போய்விட்டார். அப்பால் சிறிதுநாட்பொ றுத்து வந்தபிறகு மிட்டாய்க்காரன் தனது இளையபிள்ளைக்கு விவாகஞ்செய்துவிட்டதினால் மகனையும் மருமகளையும் மஹான் திருவடியில் வீழ்ந்து பணியும்படி ஆக்ஞாபித்தனன். அம்மஹான் அவர்களை ஆசீர்வதித்து விட்டு அப்பா! இனியாகிலும் வருகின்ற னையாவென்றனர் அவன் மனதிசையாமல் சுவாமி! இவனுக்குக் கலியாணஞ்செய்த கடன் கொஞ்ச மிருக்கின்றது ஆகையால் இன் னும் சிறிதுநாள் கஷ்டப்பட்டு கடனைத் தீர்த்துவிட்டபிறகு வருகி றேனென்றான் மஹான் அப்படியாவென்று சொல்லி சிறித்துக் கொண்டேபோய்விட்டனர் மறுபடியும் சிலநாட்கழித்துவந்தனர்.

மிட்டாய்க்கடைக்காரன் பிள்ளைகளிருவரும் சந்நியாசியின் பாதத்தில் வீழ்ந்தழுது சுவாமி! கருணாநிதியாகிய எமது தந்தை இறந்து போயினரென்றனர். அம்மஹான் வியப்புற்று தமது ஞானதிருஷ்டியால்நோக்கி ஆராய்ச்சிசெய்யும்போது மிட்டாய்க்காரன்தனது சிறிய பிள்ளையின் கழனியில் மாடாய்ப் பிறந்திருப்பதைக் கவனித்து அப்பா! இந்த மாட்டை என்னவிலையில் வாங்கினீரென ஒன்றுந் தெரியாதவர்போல விசாரித்தனர். அதற்கு இளையவன் சுவாமி! இதனை யாங்கள் கிரயங் கொடுத்து வாங்கவில்லை எமது பசு ஈன்றகன்றுதான் இது புல்லைக்கோல் புசியாமல் ஜலத்தைக் குடித்துக்கொண்டே கஷ்டப்படுகிறதென்றனன். மஹான்புந்நகை புரிந்து அவர்களிடம் செலவுபெற்றுக்கொண்டுபோய் சிறிது நாட் கழித்துவந்து யாதொருவருங் காணாமற்சென்று அந்த மாட்டுக்கு ஞானோபதேசஞ்செய்து பூர்வக்யானம் தெரியும்படியாக ஞானப் பார்வை தோற்றச் செய்தனர். அந்த மாடு மஹானை பணிந்தன. சந்நியாசி ஆசீர்வதித்து அப்பா! எனது பசிவேளைக்கு பக்ஷணங் கொடுத்து ஆதரித்த மிட்டாய்க்கடைக்காரா இனியாகிலும் என்னுடன் வருகின்றாயாவென்றனர். அதற்கும் மாடாய்ப்பிறந்திருக்கும் அந்த மிட்டாய்க்காரன் சம்மதியாமல் சுவாமி எனது இளைய பிள்ளைக்குக் கொஞ்சம் கடனிருக்கிறது. அவை தீர்ந்த பின் வருகிறேனென்றனன். அம்மஹானும் உனதிஷ்டமென்று போய்விட்டனர். அப்பால் சிறிதுநாட்சென்று வந்தபிறகு மாடாயிருந்தவனிறந்து நாயாய்ப் பிறந்து தனது இளையபிள்ளை வீட்டிற் காவலாயிருந்து வேறு மனிதர் யாதொருவரையும் வீட்டிற் சேர்க்காமலிருந்தனன். அச்சமயம் சந்நியாசி வழக்கம்போல் மிட்டாய்க்காரன் வீட்டிற்குப் போயினர். நாயானது எகிறி விழுந்து கடித்துத் துரத்த வந்தது. அண்ணன் தம்பி இருவரும் நாயைப் பிடித்து சங்கிலியிற்பிணைத்துத் தூணிற்கட்டிவிட்டு அம்மஹானை அழைத்து தமது வருத்தத்தை யெல்லாம் புகன்று மாடு மரணமுற்றதையும் தெரிவித்தனர். மஹான் ஆச்சரிய மடைந்து தனது ஞானதிருஷ்டியால் நோக்க மாடாயிருந்தவன் நாயாய்ப் பிறந்திருக்கிறானென் றுணர்ந்து இனியாகிலும் இவனை நல்வழிக்கனுப்பவேணுமென நினைத்து யாதொருவருமில்லாத சமயம் நாயைத் தனிமையாய் வைத்துக்கொண்டு ஞானோபதேசஞ்செய்து ஞானப்பார்வை விளங்கும்படி பூர்வக்யானந் தெரிவித்து அப்பா இனியாகிலும் என்னுடன் வருகின்றனையா வென்று விசாரிக்க

நாயா யிருக்கும் மிட்டாய்க்காரனுக்குக் கிஞ்சிற்றும் மனதிசையா மல் சுவாமி! எனது பிள்ளைகள் சம்ஸாரநேர்மை கவனியாத மதி யீனராகையால் எந்நேரமும் வீட்டைவிட்டுப்போய் விடுகின்றார். அச்சமயம் திருடர்கள் யாதொருவரும் வராதபடியாக யான் காவ லிருக்கின்றேனே இச்சமயம் யானெவ்விதமாய் வருவேனென்ற னன். அவர் சிரித்துக்கொண்டே உனதிஷ்டமென்று போய்விட் டார். அப்பால் சிறிதுநாட் பொறுத்து மஹான் மறுபடியும் வந் தனர். மிட்டாய்க்காரன் பிள்ளைகளிருவரும் நாய் இறந்துபோன நாள் கொண்டு மனவருத்தமாயிருக்கையில் மறுபடியும் சந்நியாசி வந்தானே இவன் வந்தநாள் முதற்கொண்டு தாயிறந்தாள், தந் தை யிறந்தார், மாடிறந்தது, நாயிறந்தது இப்போது யார் தலை க்கு உலைவைத்துக்கொண்டிருக்கிறானோவென்று கோபவார்த்தை களைப் பாஷித்துக்கொண்டு கரத்தில் தடியேந்தி சந்நியாசியை அடிக்க வந்தார்கள். அவர்கள் சொல்லிக்கொண்டு வந்த சங்கதி யையும் அடிக்க வந்த குரூரத்தையும் கவனித்த அம்மஹான் சிரி த்து அப்பா! என்னை அடிக்காதீரென்று ஞானதிருஷ்டியால் நோ க்கினர். நாயா யிருந்தவன் பாம்பாய் பிறந்து மிட்டாய்க்கடை யில் தான் புதைத்து வைத்திருக்கும் பணத்திற்குக் காவலாயிரு ப்பதை யுணர்ந்து அப்பா! நீங்கள் என்னுடன்வாரும் உங்களுக்கு பணப்புதைய லிருக்குமிடம் காண்பிக்கிறேனென்று, தன்னுட னழைத்துக்கொண்டு மிட்டாய்க் கடைக்குச் சென்று முன்னம் பணப்பெட்டி வைத்துக்கொண் டிருந்த இடத்தை காண்பித்து இங்ஙனம் பணப்புதையல் இருக்கிறது எடுத்துக் கொள்வீரென்ற னர். அவ்விருவரும் சந்தோஷித்து இந்த சந்நியாசி நமது தகப் பனுக்குப் பிரிய சிநேகிதனாயிருந்ததினால் அவருடையகையிருப்பு இவனுக்குத் தெரியுமென்பதாய் நினைந்து ஓர் கடப்பாறை மண் வெட்டிக்கொண்டு வந்து சந்நியாசி குறிப்பித்த இடத்தில் தோண் டிப் பார்க்கையில் மிட்டாய்க்கடைக்காரன் புண்யாத்மாவா யிருந் திடினும் ஆசாபாசத்திற்சிக்கியவனாயிருந்ததினால் பாம்புரூபமாய் தான் புதைத்து வைத்திருந்த நூறு விராகனுக்குக் காவலாய் அதன் மீது தனது வாலை எல்லாம் சுருணையாய் மடக்கிப்படுத்தி ருந்தபடியினாலே பள்ளந்தோண்டுகிறவர்கள் மீது புஸ்ஸெனச்சீறி விழுந்து கடிப்பதற்கு எகிறி தனது மைந்தரென்றறிந்து, மறுபடி யும் பணத்தின்மீது படுத்துக்கொண்டனன். இந்த விபரீத காக்ஷி

யைக் கண்ணுற்ற அவ்விருவரும் மனமிரண்டு அடடா! கிழட்டு சந்நியாசி எங்களைக் கொல்லவா அழைத்துக்கொண்டு வந்தாய். துன்மார்க்காவென நிந்தித்து அவரை அடிக்கதற்கு இருவரும் மனந்துணிந்து கடப்பாரையையும் மண்வெட்டியையும் யெடுத்து ஓங்கினர்.

இவர்களில் குரூரசேஷ்டையைக் கவனித்த சந்நியாசி சிரித்துக்கொண்டு அப்பா! பணப்புதையல் மீது படுத்திருக்கும் பாம்பைக் கொன்றாலும் திரவியம் கிடைக்கும். அஃதன்றி என்னை அடிப்பது நீதியாகுமோ? அதி தீவிரமாய்ப் பாம்பைக் கொள்வீரென்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே வேடிக்கைப் பார்க்கும் வழிப்போக்கரும் அப்படியே அடியடியென்று சொல்லவும் அவ்விருவரும் அப்படியே நன்கெனச் சம்மதித்துப் பாம்பைக் கொன்றனர். மிட்டாய்க்கடைக்காரன் ஆவியானது அந்தரமார்க்கமாய்ப் பறந்து தனது பிள்ளைகளுககுச் சகாயமாயிருப்பதற்கு என்ன ரூபமெடுப்போமென்று சுற்றிக்கொண்டிருக்கையில் பிர்மக்ஞானியாகிய சந்நியாசி மிட்டாய்க்கடைக்காரன் ஆவியைத் தாவிப் பிடித்துக்கொண்டு தனது மகிமையினால் திடீரென மறைந்து போயினர். அண்ணன் தம்பியாகிய அவ்விருவரும் ஆச்சரியமடைந்து அடடா! ஈதென்ன ஆச்சரியம் வந்தவர் பரமேஸ்வரன் போற் காண்கிறது. நாம் இதனைக் கவனியாமல் அடித்துத் துரத்துதற்காயினோமே யென்று மனவருத்த மடைந்தவராயினும் பணப்புதையல் கிடைத்த சந்தோஷத்தினால் மனக்களிப்புற்றுத் தமது வீட்டிற்குப் போய்விட்டனர்.

அப்பால், சந்நியாசி யானவர் மிட்டாய்க்கடைக்காரன் ஆவியைத்தனது தபோபலத்தினால் சொர்க்கபதவி யடையும்படியாய்ச் செய்து விட்டனர். ஆகையால் யாதாமொருவருக்கும் இட்டார்க்கு இட்டபலனையமையுமன்றி நூதனமாயமைந்திடுமோ? தர்மியாவதும், கர்மியாவதும் ஊழ்வினைப் பயனாகுமல்லாமல் வேறாகாது. ஆதலால் உலகில் வாழும் மாந்தர்கள் நற்குணத்தினராயிருந்திடிற் சகல சுகானுபாவங்களையும் அனுபவித்திடுவார்கள்.

## துறவறம்.

பகவானால் சிருஷ்டிக்கப்பட்ட பல்லுயிரனைத்தும் பாபபுண்ணிய நிவாரண காலத்தில் ஆயுட்பிரமாணம்குன்றி யாக்கையழிந்து மரணமடைவதென சகலருக்கும் தெரிந்த விஷயமெனினும் அவைகளை அஞ்ஞான மனதுடைய கர்மிகள் கிஞ்சிற்றும் கவனியார். அஃதேனெனின் ஜாக்ரதாவஸ்தையி லிருக்கும்போது தோற்ற மனைத்தும் நிலையாகவே காணப்படும். சொற்பனாவஸ்தையிலிருக்கும்போது மறைவதும் தெரிவதுமா யிருக்கும். சுழுப்தியாவஸ்தையிலிருக்கும்போது யாதொன்றுங் காணு வெட்ட வெளியாயிருக்கும் ஆகையால் அஞ்ஞானத்தி லீடுபட்டவர்கள் மாத்திரம் யாக்கை நிலைத்திருக்குமெனுங் கொள்கையைப்பற்றி கர்மேந்திரியங்களில் மனதைச் செலுத்தி மனைவி மைந்தருடன் குடும்பத்தினராய் வாழ்வதே சிலாக்யமென்று கர்மாதி கைங்கரிய மனைத்தும் வழுவின்றி நடாத்தி அஷ்டவித துர்க்குணத்திலும் ஈடுபட்டவராய் உலகிலுய்வர்.

ஆனால், இல்லறவாசிகளின் நிலை அத்தகையதானதல்ல அவற்றின் விபரம் அடியிற் சுருக்கமாய் வரைகுதும் கவனிப்பீர்.

## இல்லறம்.

உலகிற் ஜனித்த மாந்தர்களில் அநேகர் இல்லறவாசியாயிருக்கின்றனர். இவர்களில் அஞ்ஞானிகளும், மெய்ஞ்ஞானிகளும், அற்பர்களும் துஷ்டர்களும் பொதுவாய்க் கலந்திருக்கின்றனர். "இல்லற மல்லது நல்லற மன்று" என கவிச்சக்கிரவர்த்தினியாகிய ஔவையார்புகன்றவை மெய்ஞ்ஞானிகளுக்கன்றி அஞ்ஞானிகளுக்கல்ல. இல்லற தர்மநீதி செலுத்துவதெவ்வாறெனின் வர்ணாஸ்ரம கிரமந் தவறுதலின்றி சரியை கிரியையிற் சிறந்தவராய் பிர்மச்சாரி விரதானுஷ்டா விதிமுறை வழுவுறாது லௌகிகத்திற்சிறந்து உத்தம ஸ்திரீயை மணந்து பொய் கொலைகளவுகட் காமமென்னும் பஞ்சமாபாதகங்களிற் சித்தத்தைச் செலுத்தாமற் பகவத் பக்தியானந்தமாய் குடும்பத்திற்குரிய சவரக்ஷணைக்குத் தகுந்த விதமாய் நற்றொழிற புரிந்து காசு சம்பாதித்து நான்கு பாகமாய்ச் செய்து ஒரு பாகத்தை தேவாலய அபிஷேகாதி பூஜா கைங்கரி

யத்திற்கும் மற்றொரு பாகத்தை தானதர்ம பரோபகாரத்திற்கும் செலவுசெய்து நற்கீர்த்தி யமைந்தவனாய் மீதியாகிய இரண்டு பாகத்தையும் தமது இல்வாழ்க்கைக் குரித்தாகியவை யனைத்தும் பார்த்துக்கொண்டு பிதுர்க்கரும முதலாகிய சத்விஷய சத்கர்மானுஷ்டானங்களை நடாத்திக்கொண்டு ஐயமென யாசிப்போர்க் கமுதளித்துப் பசிதணியச்செய்து பிர்மச்சாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி முதலாகிய மஹான்கட்கு உணவாதிகளளித்து உலகிற்கு நலத்தைக் கொடுத்து இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும்பெற்று பரனருள் பெற்றுய்பவனே இல்லறவாசியாகும்.

அஃதன்றி, சோற்றுக்குக்கேடும் பூமிக்குப்பாரமுமாய்ப் பிறந்து பாலசொரூபியாய் யாதொருவருக்கும் உபயோக மின்றிய நடை பிணம்போ லுலாவித் திரிந்து தன் வயறுவளர்க்க பலஜீவர்களை இம்ஸித்துப் பழிபாபந்தேடி யாதொரு தர்மமுஞ்செய்யாதவனை இல்லறவாசியென்று சொல்வதற்கியலாது மனிதராய் ஜனித்திடில் மனதை நல்வழியிற் செலுத்தி அறிவானந்தனாய் விளங்கினால் அப்போதுதான் நரஜனனமெடுத்ததின் பிரயோசனமென்றுணர்வீர்.

## சம்சார துன்பம்.

உலகிற்ஜனித்த மாந்தரில் பலவிதமாகிய சேஷ்டைகளுண்டு. அஃதெவ்விதமெனின், அவரவர் முன்ஜனனத்திற்புரிந்த பாபத்தினாலுற்ற பிராரத்வகர்மானுசார விதிப்படியே சஞ்சிதத்திற் சரீரமெடுத்திடில் யாதொரு ஆஸ்தி பூஸ்திதியுமின்றி வறுமையாளராய் அப்போதைக் கப்போது கூலிவேலைசெய்து இரண்டணா சம்பாதித்து மூன்றணா செலவுசெய்து நாலாபக்கமும் கடன்பட்டு மாதத்தில் ஐந்தாறுநாள் பட்டினியாயிருந்து வயற்றைக் காயப் போடும் வம்பர்கட்குப் பிள்ளையாய் ஜனித்து அனுதினமும் தொல்லையிற்சிக்கி அடி உதையே கண்கண்டசாக்ஷியாய் அவதிப்பட்டு இள்வயதிலிருந்தே வயற்றுக்குக் கஞ்சி யில்லாமலும் கைத்தொழிற்புரிந்து கஷ்டஜீவனமாய்க் காலங்கழித்திடினும்,

விருத்தம்.

சங்குவெண்டா மரைக்குந் தந்தைதாய் ரவியுந் தண்ணீர்
அங்கதைக் கொய்துவிட்டால் அழுகச்செய்தந்நீர் கொல்லும்
துங்கவண் கரையிற் போட்டாற் சூரியன் காய்ந்துக்கொள்வான்
தங்களின் நிலைமைகெட்டா லிப்படித் தயங்குவாரே.

ஈதுணரா மாந்தர், பகவான் சகலரையும் சிருஷ்டித்து நம்மை இவ்விதமாய்த் தத்தளிக்கும்படி செய்துவிட்டனரேயென விசனமடைவதினுற் பிரயோசனமாகுமோ? தாம் தாமே செய்த வினை தாமே யனுபவிப்பாரென்பதற்கையன்ற விதமாம். ஒவ்வொருவரும் தமது ஊழ்வினைப்படியே கஷ்டநிஷ்டூர மடைகுவாரன்றி அவனுல் கெட்டேன் இவனுல் கெட்டேனென்றுரைப்பது மதியீனமாகும் தாம் தாமே செய்தவினை தாமே யனுபவிப்பா ரன்றி பிறரால் நேர்ந்ததென்றும் அவனுல் பிழைப்பேன் இவனுல் பிழைப்பேன் அவனென் கஷ்டத்தைத் தீர்ப்பான். இவனென் கஷ்டத்தைத் தீர்ப்பானென்று வீணுசைப்படுவது வெறும் வாயைமெல்லும் விழலாண்டியாகுமல்லவோ?

அன்றியும், சிலருக்கு ஊழ்வினைப்படியே கஷ்டநிஷ்டூரம் வந்தெய்துவதற்குத் தகுதியான துஷ்டப்பிள்ளைகள் ஜனித்திடில் ஐயோ ஈதென்ன இவனுக்குக் கிஞ்சிற்றும் புத்தியில்லையே நம்மைப்போற் பிள்ளைகளைப் பெற்றவரெல்லாம் சுகானந்தமாயிருக்க நமது வயறு செய்த பாபமோ? நமக்கித்தகைய சஞ்சலம் விளைக்கின்ற மைந்தன் ஜனித்து துன்புறச் செய்கின்றனனேயென்று வருத்தப்பட்டழுதிடினும் பிராரத்வகர்மானுசாரம் விட்டுப்போகுமா? ஒருக்காலும் விடாது ஐங்காதம் போனுலும் தன் நிழல் தன்னுடன் வருகுமல்லாமல் விலகி நிற்குமா? சிலர் மைந்தனைப் பெற்ருல் மகிழ்ச்சி யடையலாமென்று மனஉறுதி கொள்ளுவதும் பெண்ணைப்பெற்ருல் சுகமடையலாமென்று சந்தோஷப்படுவதும் நிலையாகுமா? சிற்சில மாந்தர்கள் பிள்ளைகளைப் பெற்று பத்து, பதினைந்து வயது வரையினும் பாம்புக்கு பால் வார்த்து வளர்ப்பதுபோல தமது வயற்றுக்கும் நாவுக்கும் துரோகஞ்செய்துபிள்ளை வளர்த்து பெரியவனானபின் கஞ்சிவார்ப்பானேயென்றிருந்தால் அந்தத் துஷ்டப்பிள்ளைகள் தின்று கொழுத்துத் தீட்டினமரத்திற்றுனே கூர்பார்க்கும் வெட்டுக் கத்தியைப்போல் தகப்பனுக்கே

பகைஞரா விளங்கி அடடா கிழவா உன்னால் சமர்த்திருந்தால் ...சண்டைக்கு வாடா இடுப்பையொடித்து வைத்தியசாலைக்குவழி காட்டுகிறேனென்று பந்தயம் போட்டுக்கொண்டு வேலைக்குச் சோம்பேரி சோற்றுக்கு ராஜாளியாய் வேளைவேளைக்கு பசியில்லாமற் சாப்பிட்டுக்கொண்டு தமது இஷ்டபந்தத்வம்போன்ற துஷ்ட நேயர்களுடன் கூடிக்கொண்டு வீட்டிலிருக்கும் ஆஸ்தி பூஸ்திகளை காட்டிற் பறக்கும் தூசிபோற செலவுசெய்து கள்ளு, சாராயம், கஞ்சா, அபின் முதலாகிய லாகிரி உணவாதிக ளருந்தி சதா மனமயக்கத்துடன் தாய்தந்தையரையெல்லாம் அடித்துஉதைத்து பயங்கரப்படுத்திக்கொண் டிருந்தால் பிள்ளையைப் பெற்ற சுகம் பேயோடாடிய கூத்தாய்முடியுமல்லவா? அச்சமயம் அவர்களுக்கு துன்பமும் துயரமும் வம்பு விளைத்துக்கொண் டிருக்கு மல்லவா? ஆகையால் யாதாமொருவருக்கும் ஊழ்வினைகர்மானுசாரத்தினால் ஜனன மெடுத்துச் சுகதுன்ப மிரண்டும் சமமா யனுபவிப்பது சகஜமா யிருந்திடினும் பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியுமென்பது போல தமது அதிர்ஷ்டானுகூலம் நன்று யிருந்திடில் நல்ல பிள்ளைகளாய்ப் பிறந்து கல்விகற்று நல்ல உத்தியோகஞ்செய்துபணம் சம்பாதித்து "அன்னையும் பிதாவும்முன்னறிதெய்வ" மென்பதாய் தந்தையை தமது நேத்திரங்களைப்போற் காப்பாற்றுவார்கள். துஷ்டப்பிள்ளைகளாயிருந்திடில் "விளையும் பயிர்முளையிற் றெரியு" மென்பது போலவே குழந்தையா யிருக்கும்போதே அசமந்தமா யிருந்து கல்வியைக் கருதாமல் விளையாட்டைத் துணையாய் வகித்துக்கொண்டு வித்யாசாலைக்குப்போக மனமின்றியவராய்த் திருட்டுவேஷம்போட்டு முரட்டுத்தனமா யிருக்கும்போதே மனதில் ஆசையும் முகத்திற் கோபமாய் மிரட்டி பயங்கரப்படுத்திக் கைத் தொழிலேனும் கற்கச்செய்திடின் கடைசி நாளிற் கொஞ்சம் ஆதரவாயிருக்கும். ஈதுணராமற் பலவிதமா யோசித்து வருத்தப்பட்டு பிள்ளைகளிடம் படும் தொந்தரை சகிக்க வியலாமற் சம்ஸாரம் சாகரந் துக்க மென்று பரதேசியாய் விடுவது மதியீன மல்லவா?

## நற்பெண்டீர் சிறப்பு.

சிலர் வினை சம்பந்தத்தால் சரீரமெடுத்துக் கிரகசாரவிதி முறை வழுவின்றி வாலவயதிற் கஷ்டமோ சுகமோ அனுபவித்துக்

காளை பருவத்தில் ஓர் கன்னியை மணந்தால் அவள் உத்தம ஸ்திரீ யாயிருந்திடில் "கல்லானாலும் கணவனே தெய்வம்" "புல்லானாலும் புருஷனே தெய்வமென" மதித்து தனது கற்புநிலைமைக்குப் பங்கமெய்திடாமல் இல்வாழ்க்கைக்குரித்தாகியமுயற்சிபுரிந்துகணவன் சயனித்தபின் கண்ணுறங்கி அவன்விழிக்குமுன் தானெழுந்து ஸ்நானபானஞ்செய்துக்கொண்டு பரிசுத்தமான வஸ்திர மணிந்து நெற்றியில் குங்கும மணிந்துக்கொண்டு கணவன் திருவடியருகில் வந்துஅவனைத்தொடாமலே பிராணேயாவெனதோத்திரஞ்செய்து குயிலினம் பாஷிப்பதுபோற் இனியவசனத்துடன் எழுப்புவாள். அச்சமயம் சயனித்திருப்பவன் விழித்தெழுந்து எதிரில் பொற்பொதுமைபோற் சிங்காரசொரூபமாயிற்கும் தனது மனைவியின் முகத்தை தரிசித்துக்கொண்டு அன்றையதினம் வெளியிற்போனால் யாவரும் சிநேகிதராயிருந்து யாதொருபகையுமின்றி எல்லா சுபசகுணத்துடன் சுகானந்தமாய் திரவியஞ்சேகரித்துக்கொண்டு வருவானாகில் அவை ஒன்றிற் கிரண்டாய் விர்த்தியாவது போற் காணப்படுவதுடன் வறுமையைக் கனவிலும் நினைந்திடான் தனது ஊரார் உறவினரனைவருக்கும் மெத்தநல்லவனாயிருந்து இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமெய்துதற்குப் பாத்திரரா யிருப்பார்கள்.

## துற்குண மனைவியின் தொந்திரவு.

சிலர் முன் ஜனனத்திற்செய்த ஊழ்வினைப்பயனால் பலவித துயரனுபவித்து கஷ்டப்பட்டுக் காசுசம்பாதித்திடினும் பொங்கிப்போட பெண்சாதியில்லையேயென்று அண்டை அயலாரிடம் சொல்லிக்கொண்டு திரிந்துச் கடைசியில் எவளாயினும் பஞ்சத்திற் சிக்கிப் பரதவித்து வயற்று சோற்றுக்கு வனவாசியா யலையும் பெண்களைக் கலியாணம் செய்துக்கொண்டால் இனி நமக்கென்ன குறையென்று அற்பசந்தோஷத்தினால் குதித்துக் கும்மாளமிட்டுக்கொண்டு பெண்டாட்டிக்கொண்டபோதே கொண்டாட்டமும் துணையாய்யமைந்தன போற் கண்ணாட்டி அடி! யென் மின்னாட்டி யென ஆசையாய் பாஷித்துக்கொண்டு பின்னால் வரும் திண்டாட்டத்தை நினையாம லிருந்து நாலாபக்கமும் கடன் வாங்கி மனைவியிடம் கொடுத்து குட்டிச்சுவருக்குச் சித்திர மெழுதுவதுபோற்

சிங்காரமாய் ஆடை ஆபரணங்களை வாங்கிக் கொடுத்து அணிந்துக்கொள்ளச் சொன்னால் காலமெல்லாம் கட்டக்கந்தையற்றுப்படுக்கப் பாயற்று உண்ணக்கிண்ணியற்று * ஊதாரியாய் வந்திருந்தவளுக்குப் பட்டுப் புடவைகளும் தங்க நகைகளும் பஞ்சணைகட்டிலும் கிடைத்தால் "அற்பர்க்கு வாழ்வுசற்றதிகமானால் விழிக்கெவருருவமும் தோன்றிடா" தென்பதுபோல யாரையும் மதியாமல் அண்டை அயலாரை யெல்லாம் ஒருசுத்து சண்டைக்கிழுத்துகண்டவிடத்திற் கலகம் புரிந்து மணாளனுக்குப் பலவித கோள் வார்த்தைப் புகன்று தான் மெத்த உத்தமா பத்தினி ஊரா ரெல்லாம் துஷ்டர்களெனப் புகன்று அவர்களிடத்திற் சண்டைக் கனுப்பிக்கச் செலவு செய்துக்கொண்டு கோர்ட்டு செலவுக்கும் குடிச் செலவுக்கும் பணத்தை யெல்லாம் வாரி வாரி இறைத்தால் அந்த குடும்பம் விர்த்தியாகுமா? அன்றியும், மங்கிலியமணிந்தமணாளன் ஒவ்வொருசமயத்தில் ஆசாபாசமாய் "பெண்ணேயென்றான் பிரியத்தில் ஏண்டா யென்பாள் காலத்தில்" யென்பதாயிருந்தால் பிடாரியைப் பெண்டா யமைத்துக்கொண்ட காரணமாகு மல்லவோ? இப்படியே துஷ்டப் பெண்டிரால் வெகுவித துன்பமுற்று, அநேகர் சமுசாரத்தை வெறுத்துச் சந்நியாசியாய் போய்விடுகிற வழக்கமே பெரிதாய் விட்டது. ஆனால் இவர்களெல்லாம் ஞானியாகமாட்டார்கள். இவற்றின் காரணாதிகளை கலியுகவர்த்தமானி பத்திரிகையில் விசேஷமாக எழுதியிருப்பதினால் இவற்றில் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தோம். ஆகையால் உலகின் மாந்தர் உபாயமாய்ப் பிழைக்கவேண்டும்.

# இருதாரக் கொடுமை.

சிலர் முதல்தாரம் மூர்க்கமா யிருந்தால் இரண்டாந்தாரம் சாந்தமாயிருக்குமென்று மறுபடியும் ஓர் பெண்ணைக் கலியாணம் செய்துக்கொண்டால் அவன் கதி அம்பலத்தில் ஆபத்துதான். அஃதெவ்விதமெனின், ஆசை அறுபதுநாள் மோகம்முப்பதுநாள் அதற்குமேல் அநியாய தொடர் வழக் கென்பதுபோல பலவித கலகம் நேரிடுவது சகஜமான தென்று உலகோ றறிந்த விஷயந்தானென்றிடினும் அவற்றிலும் சிற்சில சந்தர்ப்பங்களை விவரித்து

* ஊதாரி—திக்கற்றவள்.

றைக்கின்றேன் கவனித்துக் கேட்பீர். அஃதெவ்விதமெனின், மனையாள் வாய்ப்பதும் மைந்தர் ஜனிப்பதும் * பிராரத்வகர்மானுசார விதிப்படியே முடியுமன்றி அவரவர்களால் நேறிடுவதல்ல விதிக்கிசைந்த மதியமையு மெனினும் விதியையும் மதியால் வெல்லற்கியலும். ஆனல் அவ்வளவு தேர்ச்சியுடையதா யிருக்காதெனினும் கிஞ்சிற்று தெளிவமைந்ததாகவே யிருக்கும். அஃதெவ்விதமெனின் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையா" ரென்பதுபோல யாதாமொருவரும் பிரயாசையுடன் ஓர் காரியத்தை செய்வதற்கு ஆரம்பஞ்செய்து தகுந்த முயற்சி யெடுத்துக்கொண்டால் யாவும் சித்தியாகும். அதுபோல புருஷர்கள் தாம் மணந்த கன்னியரை தமது சொற்படியே நடப்பதற்கு கைவசப்படுத்திக் கொள்ளும் முறைமையைத் தேடினல் அவர்களே புருஷசிகாமணிகளாகும் அவர்களுக்குத்தான் சம்ஸாரம் சதாநந்தமா யிருக்கும். சிலர் தமது ஊழ்வினையின் கர்மானுசாரத்திற் கிசைந்த விதமே துஷ்ட மனைவியர் வாய்ந்து துன்பப்படுத்திக்கொண்டு தொந்திரவு செய்கின்றுளே யென்று மதித்து, அவளை யெவ்விதமாயாவது நயபயத்துடன் கைவசப்படுத்திக்கொண்டு சம்ஸாரத்தை நடத்திக்கொண்டு போவோமென்பதுணராமல் "அறிவீனத்திற்கு அநேக வழியென்பதுபோல்" சித்தப்ரம்மை யுற்றவராய்த் திகைத்து நின்றிடில் அவன் படுந்துயரத்தைக் கண்ணுற்றவர்களின் பலபேர் பலவிதமாய் அப்பா! உன்னைப் பார்த்தால் மிகவும் யோக்கியனு யிருக்கின்றனையே இவளிடம் சம்ஸாரம் புரிந்து சங்கப்படுவதெனின் புது எருமையுடன் ஏருழுபவன் படுந்தொல்லையைப் போலிருக்கின்றது. ஆகையால் உத்தமகுணமமைந்த மற்ருேர் பெண்ணைக் கலியாணஞ்செய்துக்கொண்டால் அவளுடைய நற்குணம் இவளுக்கு நேர்ந்து பூவுடன் சேர்ந்த நாறும் மணம் வீசுவதுபோல துர்க்குணம்விடுத்து சம்சாரத்திற்சிறந்தவளாய் குடித்தனத்திற் சிறந்த அடக்கம் ஒடுக்கத்துடன் உத்திமியா யிருப்பாளென்று சொன்னல். அவனும் அப்படியே நன்கெனச் சம்மதித்து மற்ருேர் மனைவியைக் கலியாணஞ் செய்துக்கொண்டால், முன்னிருந்த சஞ்சலத்திலும் மூன்றுபங்கு அதிகமென்பதுபோல துன்பமும் துயரமும் நேர்ந்து அவதிப்படுத்துவதுபோல புது பெண்சாதிக்குப் பழைய பெண்சாதிக்கும் சண்டை நேர்ந்து அடிதல் தடீல் வேடிக்கை அபிரிமிதமாய் நேர்ந்துவிட்டால் அவர்

* பிராரத்வம்—முன்ஜனனத்திற் புரிந்த பாபபுண்ணியத்தியல்பு.

களைச் சமாதானஞ் செய்வதற்கும் இவனால் முடியாமல் இருவரையும் விலக்கினாலும் விபரீதகலகத்திற்கு வீண் விசாரணை யென்னவென்று இவனுக்கும் கொஞ்சம் அடி உதை அபிஷேககாதி நடந்துவிடும். அதற்கும் மனம்பொறுத்து அவர்களைச் சமாதானஞ் செய்து பெரியவளிடம் பேசினால் சின்னவளுக்கு கோபம், சின்னவளிடத்திற் பேசினால் பெரியவளுக்குக் கோபமுமாயிருக்கும். இவ்விருவரின் சச்சரவினால் ஒவ்வொரு சமயம் குடும்பத்திற் சனியிருந்து வம்புசெய்வதுபோல அரிசி பருப்பும் தயாராயிருந்தும் அடுப்பிலேற்றுதற்கு வழக்காடிக்கொண்டு என்னைப்போல் நீ வந்தாய் உன்னைப்போல் நான் வந்தேன் எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம், யானுனக்கு தோர்த்தவளாயிருக்கின்றேனென்றெண்ணாதேயான் கோட்டையிலே பெண்பிறந்து போட்டவிதிதப்பாமல் இந்த ஓடிவானுக்கு வாழ்க்கைப்பட்டாலும் உனக்குயான் இளைத்தவளா? போடிபோ யானுனக்கு வேலைக்காரியல்லவென்று தலைநிறைய முக்காடிட்டுக்கொண்டு படுத்துக்கொண்டால், மற்றவளும் அப்படியே அதிக வீராப்புடன் சண்டையிட்டுக்கொண்டு மூலைவீட்டில் படுத்துக்கொண்டால் என்ன செய்வான் பாபம், இருதாரம் மணந்தும் பரதேசியானதுபோல பலவித சஞ்சலத்துடன் பட்டினியாயிருந்து பரதவித்திடுவான். ஒவ்வொரு சமயம் "கஷ்டப்பட்டும் பட்டினி, கலியாணம் செய்தும் சந்நியாசி" யென்பதுபோல அன்னத்திற்கே பஞ்சமாய்விடுவதுடன் அண்டை அயலார் பழித்துப் பரிகாசிக்கும்படியாய் துயரடைகுவான். ஆகையால் மனிதராய்ப் பிறந்தோர் எத்தனை கலியாணஞ் செய்துக்கொண்டு எத்தனை மனைவியரிருந்திடினும் இடம் பொருள் ஏவலுடன் அறிவையும் ஆதாரமாய் வைத்துக்கொண்டு உலகிற்ஜீவித்தல் அவனே ஆண்பிள்ளையாகும், அன்றி, பெண்ணே யென்றுற் பிரியத்தில் ஏண்டாயென்றுள் கருவத்திலென்று நேரிடும்போதே வெகு ஜாக்கிரதையாய் தப்பித்துக்கொண்டு இவ்வளவு தூரம் வந்துவிட்டதே இனி மனையாளென்ற பாசம் மனதி லிருக்கவேண்டும் மேலுக்கு கோடமுற்றவன்போல மரியாதையா யிருந்தால் அவர்களுக்கு தமது நணவன்மீது வாஞ்சையுடையவராய் சந்தோஷமுற் றிருப்பார்கள்.

## சகோதர துன்பம்.

ஓர் தாய் வயற்றிற் பிறந்த சகோதரர் யாவரும் ஒற்றுமையா யிருப்பதே உசிதம். அவ்விதமா யமைவதுதான் உடன் பிறந்தா ரென்பதாகும், அது எவ்விதமெனின் நமது சரீரத்துடனிருக்கும் கை, கால், கண், நாசி, செவி யென்னும் சரீர உறுப்புகளில் எதற்காயினும் காயம்பட்டால் எவ்விதமாய் திரேகத்தில் வலி யதிகரிக்கின்றதோ? அவ்விதமே ஒருவரையொருவர் மிக பிரீதியாய்க் கவனிக்கவேண்டியது. அதன்றி, ஒருதாய் வயற்றிற்ஜனித்தவர்களே ஒருவர்க் கொருவர் பகையா யிருந்தால் எவ்விதமாய் ஜீவிப்பது அவர்களைப் பெற்ற தாய்தந்தையர்க்குப் பலவித மனவிசாரம் நேர்ந்து மரணத்தை எதிர்பார்ப்பதற்காகுமல்லவோ? அன்றியும், அண்ணன் தம்பிய ரனைவரும் ஒரே மனதுடைய வராயிருந்திடின் அவர்களை வெல்வதற்கு யாதொருவராலும் முடியாது, அது எவ்விதமெனின் இருபதுமூங்கில்களை ஒன்றுயிணைத்திருக்கும் கட்டுகளை யாவரேனும் ஒடிக்க வியலுமா தனித்தனியே இருந்திடினும் இலேசாக ஒடித்துவிடலாமல்லவோ? அதைப்போலவே சகோதரனைவரும் ஒரே குடும்பமாயிருந்திடில் அவர்களை நம்பி யாவரும் பெரிய குடும்பத்தினறென்று ஆயிரம் விராகனும் கடன் கொடுப்பார்கள். அவர்களில் ஒருவன் உத்தியோக மின்றியவனாகவும் வியாதியஸ்தனாகவு மிருந்திடினும் பத்திலொருவனாக பசியின்றி ஜீவிப்பான். தனித்தனியே யிருந்திடில் அவனுக்கு நேரிடும் கஷ்ட நிஷ்டூரமனைத்தும் சகோதரர் சகாயத்தினால் சூரியனைக்கண்ட பனி போற் பறந்துபோகும். அவனே சதாசுகீ! சஞ்சலமின்றி யசுத் தாத்மாவாகும்.

அதற்குத் திருஷ்டாந்தம் யாதெனின் நமது கையிலிருக்கும் ஐந்து விரல்களில் நடுவிரல் யாதொரு தொழிலுமின்றி மற்ற நான்குவிரல்களுடனே யிருந்தும், அந்நான்கு விரல்களும் பலவித தொழிற் புரிந்திடினும் நடுவிரல் யாதொரு தொழிலுமின்றிய தா யிருந்தனவென்றிடினும் யாவருக்கும் பெரியதனமா யிருப்பதைப் பார்த்து அதன் சகோதரர் போன்ற மற்ற நான்கு விரல்களும் பொறாமைவகித்துத் தமதுதொழிலினை நடத்துந்திறமின்றி மவுன முற்றிருந்தன இவ்விதமா யிருக்கையில், அன்னமெடுத்து வாயி விட்டு அருந்துவதற்கின்றியதால், இரண்டு மூன்று நாள் வரையி லும் சோற்றுக்குந் தன்மையாயின, அவ்வித மிருந்திடிற் சரீரத்

திற்கு சத்துவங் குறைந்தன, நரம்புகள் தளர்ந்தன, கைகாலசத்தி யுற்றன, கண்பஞ்சடைந்தன, பேசுவதற்கும் சக்தியின்றி நாவுகுளறின, நெஞ்சுகாய்ந்தன, இத்தகைய துன்பமனைத்தும் நேர்ந்துவிடவே, மனமென்னும்மந்திரி திப்ரமையடைந்து தனது அதிகாரியாகிய அறிவானந்தராஜனுக்கு அறிக்கையிட்டு பார்ப்போம். அப்பால், அவருடைய இஷ்டம் கஷ்டநஷ்டத்திற்சிக்கவிடுத்துத் துன்புறச்செய்கின்றனவோ? விரல்களின் பஞ்சாயத்தைக்கேள்வியுற்று, அவற்றிற் கிசைந்த ஏற்பாடு யாதேனும் புரிந்து சஞ்சலத்தையகற்றுகின்றனவோ கவனிக்கவேணு மெனும் யோசனையினால் ஆதாரத்தில் அந்தரமாய் நிற்கும் அறிவானந்தனை நோக்கிறது.

அச்சமயம், அறிவு நிதானித்து ஈதென்ன தர்மசங்கடம் "அன்னதெய்வம் மட்டானால் எல்லாதெய்வம் மட்டடா" என்பது போல, கைவிரல்கள் தொடுவழக்கிட்டு உள்ளுக்கு சாதம் செல்லாத தொந்திரவு நேரிட்டு அவயவாதிகளனைத்தும் அயர்ந்து போகிறது, மனதோ சோர்ந்து போகிறது, நமக்கும் மயக்கம் மேலிட்டிருக்கிறது, இனிதாமதித்திடில் ஆபத்துநேர்ந்துவிடுவதுடன் ஆவிக்கும் அபாயமெய்துமென்றெண்ணி அறிவானந்தன்கைவிரல்களை சரியாய் நிறுத்தி விசாரணை செய்வதாயின.

அறிவு:—விரல்களே! உங்களுக்குள் நேர்ந்தசச்சரவுயென்ன?

விரல்கள்:—அரசே! யாவும் உமது மந்திரியாகிய மனதிற்கு தெரியும்,

மனம்:—யான் புகல்வதென்ன சித்தத்தைக் கேட்பீர்.

சித்தம்:—யாவும் அகங்கார சேஷ்டையே யாகும் அவரை விசாரிப்பீர்.

அகங்காரம்:—கைவிரல்கள் ஒற்றுமையாயிருந்து சரீர சம்பந்தமான அவயவாதிகள் கொழுத்திருந்தால் அப்போது தான் எனது அதிகாரம் செல்லும் இச்சமயம் எனது அதிகாரம் யாதொன்றுமில்லை தற்சமயம் கலகத்திற்குக் காரணகர்த்தர் கைவிரல்கள் தான்.

அறிவு:—சரி! நல்லதிருக்கட்டும் கைவிரல்களே! நீங்களனைவரும் சகோதரரொருமையின்றி சச்சரவுசெய்யவேண்டிய காரணமென்ன.

விரல்கள்:—எங்களில் சிறியவர் பெரியவர் இன்னாரெனத் தெரியவில்லை. இதனை எங்களுக்குத் தெரியப்படுத்தி பெரியவனுக்குச் சிறியவரை அடங்கியிருக்கச் செய்யவேண்டும்.

அறிவு:—சரி! அப்படியே விசாரிக்கிறேன்.

என அறிவானந்தன் ஐந்து விரல்களையும் விசாரணைசெய்யும் போது பெருவிரலைப்பார்த்து நீஎன்னகாரியத்திற்சிறந்தனென்று வினவ பெருவிரல் தான் அவயவாதிகளை போஷிப்பதற்குத் தகுந்தவிதமாய் எழுதி பிழைக்கவும் தையல்வேலைசெய்யவும் இன்னும் மற்றுமுண்டான கைத்தொழில்செய்யவும் பிதுர்க்களுக்கு பிண்டபிரசாதங் கொடுக்கவும் உதவுகிறேனே இதனால் யான் பெரியவனல்லவோ வென்றது. அச்சமயம் அருகிலிருந்த ஆள் காட்டி விரலுக்குக்கோபமதிகரித்து ஐயா! இந்தபெருவிரலுக்குப் பெரியவனென்று பெயரேயொழிய யான் சமயோசிதமாய்ச்சகாயஞ்செய்யாவிடில் இதனால் என்ன பிரயோசன முண்டாகும் காரியத்திற் பசையில்லாவிடினும் வீண்டம்பம்செய்வது வெளிமயக்கல்லவோ? ஆகையால் யானேபெரியவன் அன்றியும், உங்களுக்கு தெரியாத வஸ்துவையும் யானே குறிப்பிட்டு அதோ! இதோ!! வென்று காட்டுகிறேன் தேவாலயத்தையும் யானே குறிப்பிட்டு காண்பிக்கிறேனே இவ்வளவு சாமர்த்தியம் எந்த விரல்களேனும் புரிகின்றதா? இதனாலே யான்தான் பெரியவனென்றது. அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சுண்டுவிரலுக்கு கோபமதிகரித்து ஐயா! அறிவானந்தராஜனே இந்த ஆள்காட்டி விரலென்னமோ தன்னைத் தானே புகழ்ந்துக்கொண்டனவே தேவாலயத்திற் சென்று பகவத்யானமாய்க் கும்பிடும்போது முதலில் யார்கிற்பது! அன்றியும், இல்லறவாசியாகி பிள்ளைகளைப்பெற்றுகுடும்பஸ்தனாவதற்கு மனைவியின் விரலைக்கோர்த்துக்கொண்டு சபையோர் மணவறையைச் சுற்றிவருவது யார் இவ்வளவு சாமார்த்திய மனைத்தும் எந்த விரல்களுக்காயினு மிருக்கிறதா? இதனாலே யான்தான் பெரியவனென்றது அதற்கடுத்த மோதிர விரலைக் கேழ்க்க அது தன்னாலே மற்றவிரல்கட்குப்பிரகாசமும் பெருமையும் கிடைப்பதற்கு மோதிரமணிந்துக்கொண்டிருப்பது திவசநாட்களில் பிதுர் தர்ப்பணாதிசெய்யும்போது தான் அருகம்புல் மோதிரமணிந்துக் கொள்ளுவதிலேயும் தானே பெரியவனென்றது. நடுவிரல் யாதொன்றும் பேசாமல் ஐயா! அறிவானந்தராஜனே! இவர்கள் நால்வர்கட்கும் எனது சகாயமில்லாவிடில் யாதொரு ச்ாமார்த்தியமும் செல்லாதென்பது யான் சொல்லாமலே எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே யான் அவர்களைப்போல் வீண்டம்பமாய்ப்பேசவில்லை பெரியவன் சிறியவனென்பது தானே நீர்கவனிக்கவேண்டி

யது அப்படியானல் எங்கள் ஐந்து பேரையும் வரிசையாய் நிற்க வைத்துப்பாரும் யார் பெரியவனேவென்று நீங்களே சொல்லி விடுவீர். இதற்குப் பஞ்சாயத்தென்னவென்று உயரத்திற்சிறந்த தடியாசாமியாகிய நடுவிரல் சொன்னவுடனே ஐவரையும் நிமிர்ந்திருக்கும்படிசெய்தும் நடுவிரல்தான் பெரிதாயிருந்தன. மற்ற விரல்களெல்லாம் முக்காலே மூணுவீசம் முக்காலே அரை வீசம், முக்கால், அரையாயிருக்கவே, அறிவானந்தன் சிரித்து, அடக்கம் ஆயிரம்பொன் பெறுமென்பதுபோல நடுவிரல் வீண் டம்பம் செய்யாமலிருந்திடினும் உயரத்தில் உங்களுக்கெல்லாம் உயரமாயிருப்பதினுல் அதுதான் பெரிது! ஆனாலும் நீங்கள் ஐவரும் தனித்தனியே ஒவ்வொரு தொழிலிலும் பிரவேசிக்க முடியாது ஐந்து பேரும் ஒற்றுமையாயிருந்தால்தான் காரியமனைத்தும் சித்திபாகுமென்றது.

அதைப்போலவே ஓர்குடும்பத்திலிருக்கும் அண்ணன் தம்பிகள் யாதொரு சண்டைசச்சரவுமின்றி அவரவர் சம்பாதிக்கும் திரவியமனைத்தும் கொண்டுவந்து தாய்தந்தையரிடங்கொடுத்து சந்தோஷமாய்ச் சம்சாரத்தை நடத்திக்கொண்டு போனுல், அவர்களைப்போன்ற கனவான்கள் உலகில் யாருமே கிடையாது. அதன்றி, அண்ணன் தம்பியென்ற மதிப்பின்றி சண்டையிட்டு, அண்டை அயலார்பழித்துப் பரிகாசிக்கும்படியாய்ச் சச்சரவு செய்துக்கொண்டு ஒருவரையொருவர் அடித்துத் தலையுடைந்து காயப்படுத்திக்கொண்டும் காண்போரிகழுந்தன்மையாய்க் கோர்ட்டும் குடிக்கும் வீண் செலவுசெய்தும் அண்ணன் தம்பிகளை அலங்கோலஞ்செய்தும் தாய்தந்தையர் பிள்ளைகளுக்கு ஆதரவாயிருக்குமென்று ஆத்மதுரோகி மஹாபாபியென்பதையு மெண்ணுமல் வயற்றை வாயைக்கட்டி சேர்த்துவைத்திருக்கும் ஆஸ்தி பூஸ்திகளையெல்லாம் ஆற்றின் வெள்ளம் அடித்துக்கொண்டு போவது போல போக்கிரித்தனமாய்ச் செலவுசெய்து பலவித கலகம் விளைத்து கையிலிருக்கும் காசெல்லாம் நொய்யும் தவிடுமாய்ச் செலவுசெய்து கோர்ட்டுக்கும், வக்கீலுக்கும், லாயருக்கும், தபாசிக்கும் கைகொண்டவரையினும் பணத்தையெல்லாம் வாரி செலவுசெய்துவிட்டு "குந்தினுயோ குரங்கே உன்சந்தடியடங்க" என்பதுபோல, இஞ்சிதின்றமந்தி ஏமாந்து நிற்பதுபோற் கையிற் காசின்றியும் அன்றைக்குச் சமைக்க ஆழாக்கரிசியுமின்றியதாய் வயிற்றுப் பசியால் களைத்திருந்தால் உற்றார் உறவின் முறையா

ரனைவரும் பழித்துப்பரிகாசிப்பாரன்றி ஒருகஞ்சிவார்ப்பார்களா? சகோதரர் சுகமாயிருந்தால் "தானுடாவிட்டாலும் தன் சதை யாடு" மென்னுந் தன்மையாய் தான்குடிக்கும் கூழாயிருந்திடினும் கொஞ்சம் வார்த்துப் பசிதணியச் செய்குவர்.

ஆகையால், உலகிற் ஜனித்த உத்தமர்களே! எத்ததியும் சகோதரர் ஒற்றுமை தவரலாகாது தாய்தந்தைகள் பிள்ளைகளுக் காக சேர்த்துவைத்திருக்கும் ஆஸ்தி பூஸ்திகளை அநியாயமாய்ச் செலவுசெய்யாமல், தாங்களும் ஒன்றாய்ச் சேர்ந்திருந்து வஞ்சனை யில்லாமற் சரீரகஷ்டப்பட்டு சதாசஞ்சல மற்றவராய் ஒருவரை யொருவர் பிரியாமல் கூடி வாழ்ந்து ஐஸ்வரியவந்தரா யிருப்பதே சிரேஷ்டமாகும்.

## பதிவிரதா லக்ஷணம்.

உலகில் பதிவிரதா தர்மமே சிரேஷ்டமென மஹான்களனை வரும் புகன்றிருக்கின்றனர். அது எவ்விதமெனின், (பதி-புருஷன் மீது பக்திசெலுத்தி அவனுக்கு அடங்கிநடப்பதே, விரதம்-நோன் பாகும்) ஆகவே உத்தம ஸ்திரீகளானவர் தமது மணாளனுக்குப் பணிவிடைசெய்யும் தொழிலே தனக்குரிய கடனாகும் அவ்விதமா யிருப்பவர்க்கு இகத்திற் கீர்த்தியும் பரத்தில் முக்தியும் கிடைப்ப தற்குச் சந்தேகமில்லை. அத்தகைய உத்தம ஸ்திரீயை மணந்த புருஷனுக்குத்தான் புருஷோத்தமனென்றுரைப்பது. ஆண்பிள்ளை களின் பூர்வபுண்ணிய பலனைக் கவனிக்கவேண்டுமாயின் மணம் புரிந்த மனவியரால் தெரிந்துக்கொள்ளலாகும் பண்ணிய பயரிற் புண்ணியந் தெரியும் என்பதுபோல புருஷன் பாபியாகில் பதி த்ரோகியும், புண்யவானாகில் பதிவிரதையும் வாய்த்திடுவாள். அஃ தன்றி, வீணெண்ணங்கொள்வது விருதாவாகும் பதித்ரோகிகளோ கழுத்தறுக்கும் பகைஞரைப்போன்றமனத்தினராகும் பதிவிரதை களோவெனின் கணவனைக் கண்ணுக்குச் சமானமாய் மதித்திடு வார்கள். அஃதெவ்விதமெனின், மாண்டவ்ய மஹாரிஷியானவர் உலகில் சகல ஸ்திரீகளுக்கும் ரூபம் ஒன்றாயிருந்திடினும் குணத் தைக் கவனிப்பதே சிரேஷ்டமெனமதித்து இதை எவ்விதமாய்ச் சோதிப்பதென்று ஓர் நாள் தமது தபசிலைவிடுத்து நகரிற் பிரவே சித்துப் பார்த்துக்கொண்டு வருகையில் நளாங்கினி யென்னும் ஓர் இராஜசன்னிகை தனது தாதியருடனே உப்பரிகையின்மீது

உலாவிக்கொண்டிருக்கையில் மாண்டவியர் கண்ணுற்று இந்தப் பெண்ணுக்கு இன்னமும் விவாகமாகவில்லைபோற் காண்கிறதென மதித்து அவளுடைய தந்தையின் மனதை முன்னதாய்ச்சோதிக்க வேண்டுமென்றெண்ணி அரண்மனையிற் சென்றனர்.

அரசன் திடீரென்றெழுந்து அம்மஹான் திருவடியில்வீழ்ந்து பணிந்தனன். அம்மஹான் சுகீபவாவென்றாசீர்வதித்து அரசனுவிட்ட ஆசனத்திலமர்ந்து மகாராஜேஸ்வரா யான் உம்மை கேட்பதைத் தவறாமற் கொடுக்கின்றீராவென்னலும் மன்னனும் மர்மமுணராதவனாகையால் தபசி யாதேனும் யாகத்திற்குத் திரவியங் கேட்பார்போலிருக்கிறதென மதித்து, சுவாமி தேவரீர் விரும்பியது யாதென்றாலும் யான் தருகுவேனென்றனன். மாண்டவியர் மனமகிழ்ந்து அரசே! உனது புத்திரியாகிய நளாங்கினியை எனக்கு மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கவே அரசன் திடுக்கிட்டு ஈதென்ன தர்மசங்கடமா யிருக்கின்றது. நாம் முன்பின் யோசியாமல் வாக்குதத்தஞ் செய்துவிட்டோமே இனி எவ்விதமாய் முடியுமோவென யோசித்து சரி நல்லதிருக்கட்டும் ஆண்டவன் செயலெப்படியோவென்று யோசித்து சுவாமி! நீர் கேட்டவரம் உமக்குச் சுதந்தரமா யிருக்க, என்னை கேட்பது நியாயமோவென்றுரைத்து நீர் அந்தக் கன்னிகையே விசாரித்துக் கொள்வீர். யான் கலியாணத்திற்குரிய செலவனைத்தும் தருகிறேனென்றும் சொன்னான் அவரும் அப்படியே நல்லதென்று சம்மதித்து வெளியே வந்து மன்மதனை நினைந்தனர். அவன் வந்து சுவாமி யாதுகாரணமாய் எனை யழைத்தீரென்னலும், அப்பா! மூன்றேமுக்கால்நாழிகை வரையிலும் உமதுசரீரத்தை எனக்குக் கொடுப்பா யென்றனர். அவனும் அப்படியே கொடுத்துவிட்டுப் போயினன்.

மாண்டவ்ய மஹாரிஷி மன்மதசொரூபத்துடனே இராஜகன்னிகை யிருக்கும் கன்னியாமடத்தினருகிற்சென்றனர். நளாங்கினி கண்டவுடனே காதல்மீறி ஆ! ஹா! இதென்ன இத்தகைய ரூபசுந்தர தேஜஸமைந்த புருஷன் நம்மிடம் வந்தனரேயென்று நாணத்துடன் தலை இறங்கிக்கொண்டு பூமியைப் பார்த்தவிதமாய் கடைக் கண்பார்வையா யிருந்தனள். அம்மஹான் புன்னகையுடன் பெண்ணே யானுன்மீது காதலுற்றதனால் உன்னையே மணம்புரிய விருப்புற்றேன். ஆகையால்! உனது கருத்தென்னவென்று வினவினன். அவளும் தான் சம்மதித்ததற்கு யாதொரு சந்தேகமு

மில்லை யான் உம்மையன்றி மற்றவரை மணம் புரியேனென்று உறுதிமொழி புகன்றனள். சரி! அப்படியானால் உனது விரலி லணிந்திருக்கும் கணையாழி மோதிரத்தைக் கழட்டிக் கொடுக்க வேண்டுமென்றனர். அவளும் அப்படியே சம்மதித்து தனது விரலி லிருந்த மோதிரத்தைக் கழட்டிக்கொடுத்தனுப்பினள் மாண்டவி யர் வெளியில் வந்தவுடனே மன்மத சொரூபத்தை மாற்றி பழைய ரூபத்துடன் அரண்மனையுட்சென்று அரசே உமது புத்திரி எனது வடிவலங்காரத்தைக் கண்ணுற்றுக் காதலுற்றவளாய் என்னையே கலியாணஞ் செய்துக்கொள்வதாய்த் தனது விரலிலிருந்த கணை யாழி மோதிரத்தையும் கழட்டிக் கொடுத்தனள் என்றார். அதைக் கேட்டு அரசன் வியப்புற்றவனாய்,

ஆ! ஹா!! ஈதென்ன ஆச்சரியம்? இவரைக்காணில் விர்த்தாப் பியரான விகார சொரூபியாயிருக்கின்றனரே. வாலவயதமைந்த நமது புத்திரி எவ்விதமாய் இவர்மீது காதலுற்று மணம் புரிவதற் கிச்சித்துத் தனது கணையாழி மோதிரத்தைத் தந்தனளோவென தன்மனதிற்றானே யோசித்து, அருகிலிருந்த மந்திரியை யழைத்து கலியாண காரியத்திற்குரியவை யாவும் சித்தப்படுத்தச் செய்து தோழிப் பெண்களால் தனது புத்திரியை வரவழைத்து மங்கள ஸ்நானஞ் செய்வித்து ஆடை ஆபரண சிங்காரலங்கிர்தமாய் மணவ ரையி லுட்காரச்செய்து மாண்டவ்ய மஹாரிஷியை அருகிலுட்காரச் செய்தனர். நளாங்கினி மாலை சூட்டும்போது மாண்டவ்யரைப் பார்த்து ஈதென்ன தர்மசங்கடம் யாம் பார்க்கும்போது அழகா னந்த முகவஜீகர தேஜஸமைந்த வாலிபபுருஷனாயிருந்தனரே. இச் சமயம் பார்த்தால் இத்தகைய கிழரூபமாயிருக்கின்றனரே. இதோ யாம் கொடுத்த கணையாழி மோதிரமும் விரலிலணிந்திருக்கின்றனர். நாம் வாக்குதத்தஞ் செய்ததுபோலாக மாலை சூட்டவேண்டுமன்றி தவறலாகாது இன்னாருக்கின்னபடியென்று ஈசன் எழுதியவிதமே முடிந்தது. அந்நாளில் நமது பார்வைக்கு வாலிபராயிருந்து இந் நாளில் விருத்தராய் காணப்பட்டால் விதியின் கொடுமையே யாகு மன்றி வேறெண்ணங்கொள்ளலாகாதென்று மாண்டவ்யருக்கு மண மாலை சூட்டினள். அவரும், இவள் கற்புநிலை வழுவுறாத உத்தமிதா னென்றுணர்ந்து நளாங்கினி கழுத்தில் மங்கிலியஞ்சூடி மணமகிழ்ந் தனர்.

அப்பால் வந்த விருந்தினரனைவரும் விருந்தமுதுண்டு அவரவ ரிருப்பிடமேகினர். சிலநாள்வரையினும் மாண்டவ்யர் அரண்மனையி

விருந்து ஓர் நாள் பெண்ணே யானே தபசி உன்னை மணம் புரிந்த நாளாய் அஞ்ஞானிகளிருக்கும் நகரில் பிரவேசித்திருந்தேன். இனி யானிங்கிருந்தால் விஷயாதிகளில் மனஞ்சென்று விருதாவாய் தபநிலைக்கு பங்கமெய்தும், ஆகையால், யான் ஆரண்யத்திற்கு போகிறேன். நீயும் வருகிறுயா வென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற நளாங்கினியும் "கல்லானாலும் கணவனேதெய்வம் புல்லானாலும் புருஷனே தெய்வமென" மதித்திருப்பவளாகையால மாண்டவ்யர் சொற்படியே சம்மதித்து, சுவாமி! தேவரீர் ஆக்ஞையின்படியே அடியாளும் வருகிறேனென்று, தனது தந்தையின்பாற் செலவு பெற்றுக்கொண்டு தாயார் கொடுத்த திரவியங்களை வழிச் செலவுக்கு எடுத்துக்கொண்டு தனது மணாளனாகிய மாண்டவ்ய மஹாரிஷியுடனே வனவாசியாய்ச் சென்று அவர் குறிப்பித்த நந்தவனத்தில் தங்கி அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனத்துடன் சமையல் செய்து வாழையிலையில் வட்டித்தனள். அவர் இவளுடைய மனதைச் சோதிக்கவேண்டுமென்றெண்ணி குஷ்டரோகியாய் சீழும் இரத்தமும் வழியும்படியாய்ச் செய்துக்கொண்டதுமன்றி தான்புசிக்கும் இலையில் தனது வலதுகால் பெருவிரல் அற்றுவிழும்படிசெய்து மீதியாகிய அன்னத்தை இலையில்விடுத்துப்போதுமென்றனர். நளாங்கினி அவர் கைவாயைக் கழுவிவிட்டு இலையில் மீதியாயிருக்கும் அன்னத்தில் புழுக்களுடன் விழுந்து கிடைக்கும் பெருவிரலை தனது வலது கையினால் யாதொரு அசங்கிதமுங்கொள்ளாமலெடுத்து அப்பாலெறிந்துவிட்டு அன்னத்தைப் புசித்துப் பசியாறினள். மஹாரிஷி மனதில் ஆச்சரியமான சந்தோஷ மடைந்திடினும் இன்னமும் இவள் கற்புநிலையைச்சோதிக்கவேண்டுமென்று பெண்ணே நீவந்த நாளாய் யான் தேசசஞ்சாரம் செய்வதற்கின்றி நோயாளியாய் மெலிவுறுதற்காயினவேயென பரிதாபமாய்க் கண்ணீர் விடுத்தனர்.

அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற நளாங்கினி அவர் திருவடியில் வீழ்ந்து பணிந்து பிராணபதி! நீர் எந்ததேசத்திற்கு போகவேண்டுமோ தெரிவித்தால் அங்ஙனமெல்லாம் எடுத்துக்கொண்டு செல்கிறேனென்று ஓர் கூடையில் அவரை உட்காரவைத்துச் சிரசின்மீது தூக்கிக்கொண்டு சென்று அவருக் கிஷ்டமான தேசத்திலிறக்கினள். அந்நகரில் அந்தர மகளீரெனுங் கந்தர்வ ஸ்திரீகளினுஞ் சிறந்த அழகமைந்த ஓர் தாசி யிருந்தமையால் இத்தினம் நளாங்கினி மனதைச் சோதிக்கவேண்டுமென்றெண்ணி பெண்ணே! இந்தவீதியின் கடைசி

வீட்டிலிருக்கும் தாசியை என்க்கு ஓர் நாளைக்குச் சேர்த்து வைக்க வேணுமென்றனர். நளாங்கினி அப்படியே மஹாபாக்கியமென்று, அனுதினமும் இரவு இருபது நாழிகைக்கெல்லாம் அந்த தாசியின் திண்ணைக்குறடு தெருவுகளில்மெழுகி கோலமிட்டுவைத்துவிட்டு வருவது வழக்கமாயிருந்தனள் தாசி விடிந்தவுடன் வந்து பார்த்து, இப்படி யார் செய்கின்றுரோ கவனிப்போமென் றிருக்கையில் ஓர் நாள் அகப்பட்டாள். அம்மா நீ ஏன் இவ்விதமாய் கஷ்டமெடுத்துக்கொண்டனை உனக்கு என்ன வேண்டுந் தெரிவிப்பாயென்றனள். நளாங்கினி தனது புருஷனுடன் சேரவேண்டுமென்றனள். ஆ! அதற்கென்ன தடை அப்படியேவரச்சொல்வாயென்று அனுப்பினள். நளாங்கினி மஹாபாக்கியமென்று ஓடிவந்து பிராணபதி தாசி சம்மதித்துவிட்டாள் வருவீரென்று, அன்றிரவு பத்துநாழிகையில் கூடையினுட்காரவைத்துத் தலைமீதெடுத்துச்சென்று தாசியின்வீட்டுக்கதவு அருகில்விட்டு தான் மாத்திரம் திண்ணையின்மீது வந்து உட்கார்ந்துகொண்டனள். மாண்டவ்யர் இவளுடைய பதிவிரதா நிலைமைக்கு வெகுவாய்ப் புகழ்ந்து மன்மதனை நினைத்து அன்றிரவில் தனக்கு அவன் சரீரத்தைக் கொடுக்கச்சொல்லி தான் அழகுடைய வாலிபனுயிருந்தனர். தாசியும் சிங்காரித்துக் கொண்டு வெளியே வந்து அவரை அழைத்துக்கொண்டுபோய் அன்றிரவு வெகுசந்தோஷமாய் சுகித்து காதலை தீர்த்தனள். அவர் வெளியேவந்து பழைய உருவத்துடன் கூடையில் உட்கார்ந்து பெண்ணேயென் றழைத்தனர். நளாங்கினி ஓடிவந்து கூடையைத்தூக்கி சிரசின்மீது வைத்துக கொண்டு ஆரண்யமார்க்கமாய் வருகையில் கழுவிலிருக்கும் மவுற்கல்லியர் பாதத்திற் கூடை இடித்தது. அவருக்கு வலி யதிகரித்து பொழுதுவிடியுமுன் அவளுடைய மணாளனிறந்து மங்கிலியமற்று விழவேணுமென சபித்தனர். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற அந்த உத்தமி திடுக்கிட்டு, பொழுது விடியவே கூடாதென்று மறுசாபங் கொடுத்துவிட்டனள்.

இங்ஙனம் இத்தகைய அற்புத சாபத்தைக் கொடுத்த நளாங்கினியினல் பொழுதுவிடியாமலிருக்கவே வெகு நாள் வரையினும் பொழுதுவிடியாமல் அந்தகாரமான இருள்சூழ்ந்து மனிதர் முதலான சகல ஜீவராசிகளுக்கும் அன்னகாரம் புசிப்பதற்கியலாமலும் புசித்தவை ஜீரணியாமலும் தொந்தரையாயிருந்தமையால் அந்தர தேவர்களனைவரும் மதிமயங்கி இந்திரனிடம் முறையிட அவன் சிந்தைநொந்து இதென்னவிபரீதமென்று பிர்ம்மதேவனிடம் முறை

யிட்டு பொழுதுவிடிவதற்கு யாதேனு ஓர்விதமுயற்சிசெய்திடவேணு மென்று பணிதலும், நான்முகன் நாரணன் சிவனுதியோ ரனைவரும் இதென்ன புதுமையென்று யோசித்து, நளாங்கினி மாண்டவ்யரால் விளைந்தனவென் றுணர்ந்து, யாவரும் கானகத்தில் வந்து நளாங் கினியைப் பார்த்து அம்மணி பொழுதுவிடியும்படி அருள்புரிவா யெனக் கேழ்க்க, அந்த பதிவிரதா சிரோன்மணி தேவர்களைப் பணிந்து சுவாமி! பொழுதுவிடிந்தால் எனது மணாளனிறந்து மங்கி லியமற்று விழும்படியாய் இம்மஹான் சாபங்கொடுத்திருக்கின்றன ரேயென்றுரைக்க, தேவர்கள் தபசியைநோக்கி நீர்கொடுத்த சாபத் தைத் தீர்த்தருளும் தயாநிதியென்க, அவரும் இவருடைய பதி விரதா நிலமைக்குமெச்சி அம்மணி பொழுதுவிடிந்திடினும் உனது மணாளனும் இறக்கமாட்டார். நீ சதா சுபமங்கிலிய ஸ்திரீயாயிருக் கக்கடவதென்று வரங்கொடுத்துத் தான் முன்னங்கொடுத்த சாபத் தைதீர்த்துவிட்டார். நளாங்கினியும் பொழுதுவிடியும்படியாய் வரங் கொடுத்து தான் முன்னங்கொடுத்த சாபத்தை தீர்த்துவிட்டனள்.

அப்போதே பொழுதுவிடிந்தது சகல ஜீவராசிகளும் சயனித் தெழுந்தவர்போல மனோல்லாசமெய்தினர். தேவர்களும் சந்தோஷ மடைந்து நளாங்கினியை ஆசிர்வதித்து மாண்டவ்யரைவெகுவாய்ப் புகழ்ந்துக்கொண்டு தமது வாசஸ்தானத்திற்குப் போய்விட்டனர். மாண்டவ்யர் மனையாள்மீது விஸ்வாசம்வைத்து இந்த நளாங்கினி மிகவும் உத்தமியென்று மதித்து தனது தபோபலத்தினுல் மன்மத வடிவாயிருந்து அவளுடன் சரசலீலாவினோதமாய்ச்சுகித்து மனோல் லாசமா யிருந்தனர். ஆகையால் பதிவிரதைகளின் மகத்துவத்தை மஹான்களாலும் புகல்வதற்கருமையாகும். இவ்விதமே இன்னும் அநேகவித உபமானங்களுண்டு அவையனைத்தும்விவரித்துரைப்பின் இவ்வேடிடங்கொள்ளாதாகையால் இம்மட்டில் நிறுத்தலாயிற்று.

# பெற்றோர் கடமை.

உலகின்மிசைவாழும் மாந்தர்கள் தமதுசந்ததிபெருக மைந்தர் களைப் பெற்றால் அவர்களால் சுகப்படுவதுமுண்டு, துக்கப்படுவது முண்டு இவ்விருவகையும் தாய் தந்தையரால் விளைவதன்றி அவர்க ளாலுமல்ல, ஆண்டவனாலுமல்ல, அஃதெவ்விதமெனின், பிள்ளைக ளுக்கு ஐந்துவயதானபிறகு மனதில் ஆசையும் முகத்தில்கோபமும்

வைத்து, அவர்களைத் தனது சரீரத்தைப்போற் பாதுகார்த்து அன்னவஸ்திர பணிபூஷணமனைத்துங்குறையின்றிகொடுத்து வளர்த் திடினும், மேலுக்கு கோபமுற்றவர்போற் கிஞ்சிற்றும் சாந்தமின் றியவராய்மிரட்டி விளையாட்டு விஷயத்திலும் துஷ்டப்பிள்ளைகளிடத் திலும் சேரவொட்டாமற்றடுத்து வித்யாசாலையில் விடுத்து கல்வி கற் பிக்கச்செய்தல்வேண்டும். அவ்விதமாய் பத்து பனிரெண்டு வயது வரையிலும் பார்வையிட்டு அந்தப் பிள்ளைகளின் பிராரத்வகர்மானு சாரம் சரியான தன்றி, சஞ்சிதத்தில் கஷ்டஜீவனைப் பிழைப்பதற் கிருந்தால் கல்வியினுட்பங்கருத்திலமையாமல் மூடமதியாயிருக்கும் அந்தக் குறிப்பை யுணர்ந்த பெற்றோர்கள் பிள்ளைகளைத் தொந்தரை செய்யாமலும் யாதேனும் ஓர் கைத்தொழிலாயினுங் கற்றுக்கொள் ளும்படி செய்யும்முயற்சியை எடுத்துக்கொள்ளுவராயின் அந்தப் பிள்ளைகள் திரவியம் சம்பாதிக்கும் திறமையுடையவரா யிருப்பார் கள். அச்சமயம் தாய்தந்தையென்னும் விஸ்வாசத்தை மறந்திடா மல் அவர்களைத் தமது நேத்திரம்போற் பாவித்துக்காப்பாற்றுவர். அதன்றி ஆசையாய்ப் பிள்ளைகளைப்பெற்று மோசம்போவதுபோல குழந்தைகள் பேசக்கற்றுக்கொள்வதற்கு சமயமாயிருக்கும்போதே தகப்பன் காசைக் கையிற் கொடுத்து அடா! ஐயா! அம்மாளை உதை, அண்ணனை அடி, அக்காளைக் கடியென்று துர்க்குணத்தைப் பாடஞ்செய்வதும், தாயாரும் அதற்கேற்றாப்போல அடா மகனே வித்யாசாலைக்குப் போனால் வாத்தியார் அடிப்பார். அண்டை அயல் வீட்டுப் பிள்ளைகளுடன் தமாஷாய் விளையாடிக்கொண் டிருப்பா யென்று மூடபுத்தி கற்றுக்கொடுத்தா லென்னசெய்வார். அறியாச் சிறுவர்கள் தாய்தந்தையரே பேய்குணத்தினரா யிருந்தால் பிள்ளை களின் பாடு * அம்பலத்தில் ஆபத்துதானே.

அப்பால் அந்தப் பிள்ளைகள் தகப்பன் கொடுத்த காசுக்கு கோலி, காற்றாடி, பம்பரம் முதலாகிய விளையாட்டுதுணைக்கருவிகளை வாங்கி அற்பசிநேகிதருடன் கூடி விளையாடி கெலிப்பு தோற்பில் கலகம்நேர்ந்து அடிதடிவேடிக்கை விளைவித்து அடி உதை பட்டு குய்யோமுறையோவென கூச்சலிட்டழுதுக்கொண்டு வீட்டுக்கு வந் தால் தந்தையரை சண்டைக் கனுப்பி மண்டையுடைந்து கோர்ட்டு கச்சேரிக்கு பணத்தைச் செலவுசெய்யும்படியாய்ச் செய்வதுமன்றி கையில் காசு யிருந்தால் வையகத்திலிருப்பதனைத்தும் வயற்றுக்குச் சொந்தந்தானேயென்பதுபோல வியாதியைத்தரும் சிற்றுண்டிகளை

* அம்பலம்—சபை.

யெல்லாம் வாங்கிப் புசித்து, பித்தம், சீதளம், வாய்வு, சூடு, மந்த மென்னும் வியாதியினல்மெலிந்து வைத்தியரிடம் அவுஷதம்புசித்து சரீரத்திலுள்ள பலத்தையெல்லாம் ஆற்றிற்கரைத்த புளியைப்போக் கடித்துக்கொண்டும் தத்தளித்திடினும் மனேகர்வத்திற் குறையில்லை யென்பதுபோல தாய்தகப்பன் கற்றுக்கொடுத்த பழையபாடத்தை மாத்திரம் விடாமல் தாய்தந்தை சகோதரர் முதலானவரையும் இகழ்ச்சியாய் தூஷித்து அடித்து உதைத்துக் கலகம்விளைவிப்ப துடன், வேசிநேசனுயணைந்து வீட்டிலுள்ள ஆஸ்திபூஸ்திகளையும் நாஸ்திகமாயழித்துத் தாயார் தாலியையும் விற்றுக்தொடுக்கும்படி சச்சரவுசெய்திடில், என்னசெய்வார் பாபம் அண்ணன் தம்பியரனை வரும் அவரவர் பாகத்தைப் பங்கிட்டுக்கொண்டு அப்பால்போய் தன்வரையிலும் மனைவிமைந்தருடன் ஜிவித்துக்கொண்டிருந்தால் செல்வப்பிள்ளை சீரழியுந்தன்மையாய்த் தத்தளிக்கும் ஆசாமியின் கதி ஆபத்துற்ருப்போற் சஞ்சலம்வாய்ந்து தன்பாகத்தையும்தாறு மாருய்ச் செலவழித்து அன்னவஸ்திரத்திற்கு அலைச்சற்பட்டுத் தன்னைப்பெற்ற தாய்தந்தையரை நினைந்து நினைந்து விசனப்பட்டு தன்னைப்போன்ற மனிதர் திரவியம் சம்பாதித்துச் சந்தோஷமாய் வாழ்ந்திருக்கையில் யாம் இவ்விதமாய் அன்னவஸ்திரத்திற்கே அலைச்சற்படுவதற்காயினவேயென கண்ணீர்சொரிந்து மனவருத்த முற்றவனும்.

கட்டளைக் கலித்துறை.

அள்ளிக் கொடுத்திடும் செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்டகடனுக்கு மென்னைக் குறித்ததல்லால்
துள்ளித்திரிகின்ற நாளையிலே யென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே.

என. வருத்தப்பட்டழுதுக் கொண்டுவானுள் வரையினும் வீணுயலைந்து அன்னமோ ராமச்சந்திராவென ஐயமேற்றுண்டு காலங்கழித்து பூமிக்குப்பாரம் சோற்றுக்குக்கேடாய் அநேகவித பாபகிர்த்தியங்களைப் புரிந்து யாவரும் தூஷித்திகழ ஒன்றுக்குமுத வாதவனுய் வையத்தாசைமறந்து மரணமடைந்து மறுஜனனத்திற் கும் கஷ்டஜீவனுயிருப்பான். ஆகையால் பிள்ளைகளைப் பெற்ருேர் அவர்களை நல்வழியிற் பிரவேசிக்கும்படிசெய்து வெகு ஜாக்கிரதை யாய் காப்பாற்றினல் அவர்களால் தமக்கும் நன்மை யுண்டாகும். இதற்கொரு திருஷ்டாந்தம் பின்வருமாறு காண்க.

# தாயைக் கொல்லச் சொல்லிய கதை.

சிர்காரியென்னும் ரிஷியானவருக்கும் அவர் பெண்சாதிக்கும் இல்வாழ்க்கையில் பிணக்குநேரிட்டு அவள் அத்துமீறிப் பேசியபடியால் ரிஷிக்கு கோபஞ்செனித்து தன்குமாரன் மேதையென்பவனை நோக்கி அவன் தாயை வெட்டிப்போடும்படி கற்பித்துவிட்டு காட்டுக்குள் போய்விட்டார் பிள்ளையானவர் தாயின்மீது பட்சத்தினால் அவளை வெட்டத் துணியாமல் தந்தை வார்த்தைக்கும் பயந்து இந்த தர்மசங்கடத்துக்கு என்னசெய்யலாமென்று யோசித்து தன் பிராணனை மாய்த்துக்கொள்வது நலமென்று துணிவுகொண்டான். இப்படி நிற்கையில் கோபத்தினால் காட்டுக்குப்போன ரிஷியானவர் சினந்தணிந்து என் பிராணநாயகியை ஆத்திரப்பட்டு வெட்டச் சொன்னோமே அவன்மிஞ்சி வெட்டிப்போட்டானோ என்னமோ, ஜமதக்கினி சொல்லைக்கேட்டுப் பரசுராமர் தாயைவெட்டினதுபோல் இவன் செய்துவிட்டானோ ஆனால் நமது புத்திரன் அவசரப்படமாட்டான் ஆகிலும் போய்பார்ப்போமென்று நினைத்து ஆசிரமத்துக்கு வேகமாய் வந்தார் பிள்ளையும் பெண்சாதியும் எதிர்கொண்டு வணங்கினார்கள் அவர் மிகவும் பரிவாகப்பேசி புருஷனுடன் மனைவியர் எதிர்த்து தாடப்படாது எதிர்ப்பேச்சில்லாதிருந்தால் ஸ்திரீகள் ஈரேழுலோகத்தையும் வெல்லலாம் என்று புத்திமதி கூறினார்.

ஆனபடியால் துணிச்சலினால் கோபத்தினால் அதிகாரத்தினால் அகங்காரத்தினால் அவசரத்தினால் பொறாமையினால் கொலைகளைச் செய்வதற்கு மனது வருவதுண்டு. கோபமே பாபம், கோபமே சண்டாளம். அது மகா அநர்த்தங்களை உண்டுபண்ணும். கோபத்துக் கிடமுண்டாகிறபோது, சற்றுப்பொறுத்திருந்து தன்பிழையையும் எதிரிபிழையையும் ஆராய்ந்து தனக்குள் இருக்கும் ஒருத்தனுக்குச் சரிசொல்லி, பொறுமையாய்ச் சீர்தூக்கிப்பார்த்து, இந்த மேதை யென்பவன் நடத்தியதுபோல் நடத்தவேணும் ஆகையால் சத்மகருங்களை சுறுக்கிச்செய்யவேண்டும் துற்கருமங்களை சோர்வாய் விடவேணும் சிக்கிரத்திற்செய்வதும் மெதுவிற்செய்வதும் எதுஎதுவென்று இதனால் அறிந்துக் கொள்ளலாம்.

தருமம், அர்த்தம், காமம் என்கிற மூன்று பதார்த்தங்களிலேயும், சீவனுக்கு உறுதியாய்ச் சகாயஞ்செய்யத்தக்கது இன்னதென்று எடுத்துரைப்போம் பின் வருமாறு காண்க.

சீவனுக்குரியவை, தருமம் அர்த்தம் காமம்மோக்ஷம்.

இன்பமென்பது இலக்ஷ்மிபோல் கற்புடைய மங்கையை இல்வாழ்க்கையில் மருவிவாழ்வதே இம்மைப் பிரயோசனம். பொருளாவது வாழ்க்கைத்துணை நலங்களையுடைய ஸ்திரீயுடன்கூடி வாழ்கின்ற மனைவாழ்க்கையில் போஜன முதலாகிய பிதுர்க்கருமங்கள் செய்வதற்குத் தேடும் பொருளை வழி யறிந்து பழியின்றித்தேடி நன்மார்க்கத்தில் செலவழித்து ஜீவகாருண்ணியனு யிருப்பானுகில், அது இம்மைப் பயனையும் மறுமை யின்பத்தையுங் கொடுக்கும். தருமமாவது காலந் தப்பாமல் நித்திய கருமங்களை நடத்தி குருநாதனையும் ஈசுவரனையுந் தனித்து தான் என்கிற அகத்தைவிட்டு யாவத்தையும் பகவத்தற்பணம்பண்ணி அவனல்லது வேறில்லையென்று அறிந்துநடப்பதுவே தருமம். இந்ததருமத்தினுல் இம்மைப் பயனும் மறுமை யின்பமும் அம்மையமைவுங் கிடைக்கும். இவற்றுள் தருமத்தினுல் உண்டாவது இம்மைக்கும் மறுமைக்கும் பலனென்னப்பட்ட பதார்த்தம் தவத்தினுல் வருவது அம்மையென்கிற அழியாதகதி, தர்மார்த்தகாமம்என்கிற மூன்றினுலும் பிராணுதாரலாபம்வரும்.

## துட்டகணவரால் துன்பமடைவது,

சிலர் பெண்களைப் பெற்றுல் பனிரெண்டுவயது வரையினும் காப்பாற்றி பருவதிசையடைந்தபிறகு யாவருக்கேனும் விவாகம் செய்வதாயிருந்திடின் ஆஸ்திபூஸ்திதியில்லாவிடினும் அறிவிற் சிறந்த உத்தமனுக்குத் தமது புத்திரியை மணஞ்செய்தால் அவன் கூலிவேலை செய்தாயினும் நாளொன்றுக்கு நாலுபணம் சம்பாதித்துத் தனது பத்தினியைச் சீரம்போற் காப்பாற்றி கண்ணுக்குச் சமானமாய் காதலுடன் வாழ்ந்திருப்பான். அதன்றி யாவராயினும் தனவந்தர் அநேக ஆஸ்திபூஸ்திதி சம்பாதித்து வைத்திருப்பதைக்கண்ணுற்று அடடா! இவர்களுடைய பிள்ளைக்குப் பெண்ணைக்கொடுத்தால் யாதொரு கஷ்டமுமில்லாமல் வேலைக்காரிகளையும் வைத்து நமது மகளை இராஜகுமாரியைப்போல் வைத்திருப்பாரெனும் பேராசையாய் தமதுகையிலுள்ள திரவியத்தையும் செலவழித்து பணக்காரர் வீட்டுப்பிள்ளைக்கு தமது பெண்ணைக் கலியாணஞ்செய்துவிட்

டால் அவன் நல்லவனுயிருந்தால் தான் என்னமோ ஏதோவென்று இவர்கள் நினைந்ததுபோலாகும். அவனும் ஓர் துஷ்டநேசம் வகித்தவனுயிருந்திடில் அறிவிலிய அண்ணுத்தைகளுடன் சேர்ந்து கள்ளு சாராயங்குடித்து வேசிநேசனுயலைந்து அற்பநேசம் இஷ்டபந்துத்வமென மதித்து தனது தாய்தந்தையர் கஷ்டப்பட்டு சம்பாதித்த திரவியமனைத்தும் சூதாடி தோற்று வெறுங்கை வீணனுயலைந்து வறுமையாளனுய்த் திரிந்து அன்றைக்குச் சமைக்க ஆழாக் கரிசியுமில்லை யென்பதையும் கவனியாமல் கடன்பட்டாயினும் கள்ளு சாராயங் குடித்து வெறி யதிகரித்து வயறுபசியால் மெலிந்து குடுகுடுவென்று வீட்டுக்கு வந்து அடுப்பில் நெருப்பில்லாமலிருப்பதைப் பார்த்து வயறெரிந்து மனையாளை அடித்து மிரட்டி பயங்கரப்படுத்தினுல் என்னசெய்வாள் பாபம். யாரைவெறுப்பதென்று ஆண்டவனை தியானித்து ஐயோ விதிவசமே.

கட்டளைக் கலித்துறை.

கைப்பிடி நாயகன் கள்ளுசாராயங் கலந்தடித்துக்
கொப்பெனச்சீறி யெங்கடீ சோறெனக் கொதித்தெழும்பி
தப்புதிப் பென்று போட்டு தைத்தாலிந்தத்தரணியிலே
எப்படிதான் பிழைப்பேனிறைவாகச்சி யேகம்பனே.

என வருத்தப்பட்டழுதிடினும் தனக்குற்ற துயரம் தவிர்ந்திடுமோ? ஆகையால் "அறிவுடை யொருவன் புருடனுய்மையின் குறையிலாவாழ்ந்து குவலயத்திருப்பார்" இதற்கும் அநேக திருஷ்டாந்தங்க ளுண்டு. இவை யனைத்தும் நமது கலியுகவர்த்தமானி பத்திரிகையை வரவழைத்துக் கவனித்துக்கொள்வீர்.

# பெண்களால் பங்க மடைந்தவர்.

அஞ்ஞான மார்க்கத்திற்கு ஆதாரமாகியவர் ஸ்திரீகளென்றே அறிஞர்களாற் புகலரும் சாஸ்திரங்க ளநேக முளது, அவற்றை விவரித்துரைப்பின் இவ்வேடிடங் கொள்ளாதாகையாலும் சுருக்கமாய் வரைகுதும் கவனிப்பீர். புருஷஜனன மெடுத்தோர்கட்குக் கிஞ்சிற்றுயினும் பாபகீர்த்திய முளதாயின் வாலிபதிசைமெய்திடின் வரிசைக் கிரமமாய்த் துர்க்குண மனைத்தும் தொடர்ந்துவரின் ஸ்திரீ மாய்கையானது சந்திரனை மறைக்கும்மேகத்தைப்போற் ஜீவர்களின்

அறிவை மறைத்து அஞ்ஞான விருளிற் சிக்கச்செய்து மனப்பேயின் கட்டுப்பாடுக்கு உடன்பட்டுழல்வார். அச்சமயம் மாயாசஹிதமாய் விளங்கும் ஸ்திரீகளின்சொரூபம் பார்வைக்குச்சுதந்தரமாகி மன்மத பாணத்தினுற் களைத்திளைத்துசோர்ந்து கண்ணுற்ற ஸ்திரீகளின்மீது காதலுற்றிடில் அநேகவித ஆபத்தெய்திடுமெனினும், அற்பசுகத்திற் கிச்சித்து ஆவியையு மிழந்திடுவரென்பது யான் சொல்லாமுன்னமே யாவருக்கும் தெள்ளிதாய் விளங்கும். அத்தகைய ஸ்திரீ சொரூபத்தை கவனிப்பதே ஊழ்வினையின் காரண மாகும். ஸ்திரீகளைச்சிருஷ்டித்தவையே புருஷரை மாயாசம்பந்தத்திற்சிக்கி யலையும்படி செய்த சேஷ்டையாகும். அவற்றிற் கிசைந்தவிதமே அவர்களுக்கு அழகானந்த முகவஜீகரத்தையும் ;சிருஷ்டித்திருப்பதாயின் அந்த மாயா சம்பந்தமாகிய ஸ்திரீகளைக் கண்ணுற்ருல் விஷஜந்துவைக்கண்டவர்களொதுங்கிப்போவதுபோல கவனியாமல் தப்பித்துக்கொண்டுபோக வேண்டும். அன்றி தமக்கு ஸ்திரீகளின்மீது விருப்புற்ருல் தனத்தைச் செலவிட்டு மனதிற் கிசைந்த கன்னியரை மணஞ்செய்துக் கொள்ளவேண்டும். அப்படியல்லாமல் பிறர்தாரத்தை இச்சித்திடில் பிராணனுக்கு ஆபத்தாய் முடியும். அஃதெவ்விதமெனின்,

வேதவதி யென்னும் ஓர் கன்னிகையானவள் நாராயணனே தனக்கு நாயகனுகவேண்டுமென்று கானிற்சென்று யாகஞ்செய்துக் கொண்டிருக்கையில் தசக்கிரீவனெனும் இராவணன் யாதொரு காரணர்த்தமாய் அம்மார்க்கத்திற் பிரவேசித்து வேள்விபுரியும் வேதவதியைக் கண்ணுற்று மனமயக்கமுற்றவனுய் பெண்ணே! யா னுன்மீது காதலுற்றேன். நீ உன் மதன்சரத்தினுற் பிராணனை விடுத்திடாமற் காந்தர்வ மணம் புரிந்து காதலைத்தவிர்ப்பாயென்று அருகிற்சென்றவுடனே அந்த உத்தமி சித்தந் திகைத்து இனிதாமதித்திடில் தனது கற்பழியுமென்று பயந்து அச்சமயமே தனதுப்பிராணனைப்போக்கிக் கொள்வதற்கு உத்தேசித்து அடடா!இராவணு! யான்நாராயணனைத் தவிர மற்றவரை மணளனெனமதித்திடேன். என்முன் இத்தகைய அற்பவார்த்தையை பாஷித்திடாதே யென்று பலவித நீதிவார்த்தையைப் புகன்றும், அந்த இராவணன் கிஞ்சிற்றும் மனதில் வகித்திடாமல், காதலி! நாராயணனென்ருல் யான் அஞ்சுவேனே இதோ உன்னை இச்சமயமே எனது தேசத்திற் கழைத்துச்சென்று எனது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுகிறேனென்றுசொல்லி வாய்மூடு முன்னமே வேதவதிதிடுக்கிட்டு அடா! மூர்க்காய்! யானே இலக்ஷ்மி

அம்ஸமாய் ஜனித்து, நாராயணனையேமணந்து கானகமார்க்கமாய் வந்து உனது குலத்தினருடன் உன்னை அதஞ்செய்து கொல்லும் படியாய்ச்செய்துவிடுகிறேன் பாரடாவென்று அந்தயாகாக்கினியில் வீழ்ந்து பிராணனைவிடுத்து பூமிதேவிவசத்தில் குழந்தையுருவாய் வளர்ந்து மிதுலாபுரியின் மன்னனாகிய ஜனகராஜனிடம் அகப்பட்டு, அரசபுத்திரியாய் வளர்ந்துக்கொண்டிருக்கையில் இராக்ஷத சம்மாரஞ்செய்யும் பொருட்டு ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தேவர்களை குரங்குகளாகவும், கரடிகளாகவும் ஜனிக்கும்படி ஆக்ஞாபித்து, தாமும் சங்குசக்கர சேஷனுமாய் அயோத்தியாபுரி மன்னனாகிய தசரத ராஜனுக்கு நான்கு பிள்ளைகளாய்ஜனித்து, தாம் ஸ்ரீராமராகபெயர் புனைந்து, மற்ற மூவருக்கும் பரதர், லக்ஷ்மணர், சத்துருக்கரென நாமகரணம் புனைந்து நால்வரும் வளர்ந்து வருகையில் ஸ்ரீராமரும் லக்ஷ்மணரும் விஸ்வாமித்திரருடன் கானிற்சென்று தாடகை முதலாகிய இராக்ஷதரைவென்று மிதுலாபுரி யணுகி பின்னர் ஸ்ரீராமர் சீதையைமணந்து மற்றமூவருக்கும் ஜனகராஜன் சகோதரனுடைய புத்திரிகளை மணமுடித்து, சதிபதி எண்மருடன் அயோத்தியில் வந்து சனியின் கலகத்தினால் ஸ்ரீராமர், லக்ஷ்யணருடனே சீதா சமேதராய் வனவாசியாய் செல்லுந்தருணம். பஞ்சவடியிற்றங்கியிருக்கலாயினர். அத்ததி மெத்தவும் குரூரகுணமமைந்த பாதகியாகிய சூர்ப்பநகையால் விளைந்தகலகாரம்ப காரணத்தினால் இராவணன் மாரீசனை மாயமானாக அவர்கள்முன்னே அனுப்பிவிட்டுத் தானோர் சந்நியாசியாகவருகையில் ராமலக்ஷ்மணரில்லாத சமயமாகையால் சீதையின்மீது காதலுற்று பூமியோடு பெயர்த்தெடுத்துக்கொண்டு போனதினால் அவனடைந்த கஷ்டநிஷ்டூரங்களெவ்விதமாய் முடிந்தனவென்று அவரவர் மனதிற்கே தெரியவரும். அற்பசுகத்திற் கிச்சித்த அசுரேந்திரனாகிய ராவணன் தனது குலத்தினருடனே தானும் ஆவியிழந்து அந்தகன் பதியணுகினன்.

இன்னும் அநேகர் அவ்விதமேஸ்திரீமாய்கையால் அவதிப்பட்டு ஆற்றொணாதுன்பமும் துயரமுமுற்றுப் பற்பலவித கஷ்டநிஷ்டூரமடைந்தனர். சுந்தர உபசுந்திரனென்னும் இரண்டு சகோதரர்களும் மிகுந்த அறிவிற் சிறந்தவர்களாகவும் ஒற்றுமைபிறழாத உத்தமராகவுமிருந்தனர். ஆனால் அவர்கள்யுத்தப்பிரியரானபடியால் வனத்திற்சென்று பிரம்மதேவனைக் குறித்து அகோர தபஞ்செய்துக் கொண்டிருக்கையில் அவர்ப்ராப்தமாகி உமக்கென்னவரம்வேண்டும்

கேட்பீரென்று வினவ அவ்விருவரும் ஆலோசித்து, சுவாமி! யாங்களிருவரும் சகலரையும்வெல்லும்படியான திறமைவாய்ந்தவராகவும் எங்களுக்கு யாங்களே சமர்புரிந்து ஒருவருக் கொருவர் இறப்போமன்றி, மற்றவரால் மரணமடையாதவரமருள்வீரென்று கேட்கவே அவரும் அப்படியே நன்கென் றருள்புரிந்து அவனுக்கிரகஞ்செய்து விட்டுப்போயினர். இத்தகைய வரத்தைப்பெற்ற துஷ்டர்களாகிய அவ்விருவருக்கும் மனோகர்வம்மேலிட்டு, கரத்திற் றனுசேந்தி திரிலோகங்களையும்வென்று தமது அரசைசெலுத்திக்கொண்டிருந்தனர்.

அச்சமயம் தேவர்களனைவரும் பிரம்மதேவனிடத்திற்சென்று சுவாமி சுந்தரோபசுந்தரற்கு நீர்வரமருளியதனால் யாங்கள் படுந் துன்பம் வெகு விபரீதமா யிருக்கின்றன. இனி எங்களைக்காப்பாற்ற வேணுந் தயாநிதியென வேண்டுதலும், நான்முகன் அப்படியாவென்று ஆலோசித்து, அத்தருணமே திலோர்த்தமையென்னும் ஓர் பெண்ணைச் சிருஷ்டித்து அனுப்பினர். அவள் தனது அழகலங்கார முகவசீகரத்துடன் சுந்தரோபசுந்தரர் முன்வந்து உலாவிக்கொண்டிருக்கையில் மூத்தவனாகிய சுந்தரனென்பவன் அவள்மீதுகாதலுற்று அடா! தம்பி! அதோ உனது மதனியாகிய எனது காதலி வருகின்றனள். அண்ணன் பத்தினி தம்பிக்குத் தாயாகையால் யான் அவளுடன் சுகித்திருக்கும்போது நீ காணக்கூடாது தூரத்திற் செல்வாயென்றனன். உபசுந்திரன் மனமயக்கமுற்றவனாய் அண்ணா! என்ன வார்த்தை சொல்லுகிறீர் தம்பியின் பத்தினி தமயனுக்கு புத்திரியாகையால் யாங்களிருவரும் சுகானந்தமாய் விளையாடுவதை நீ பார்க்கலாகாது தூரத்திற்செல்வீரென்றனன்.

இங்ஙனம் இவ்விருவரின்நிலை இத்தகையதாயிருக்கையில் திலோர்த்தமையும் அருகில் வந்துவிட்டனள். அத்தருணம் அவ்விருவரும் எனக்குனக்கெனக்கென்று வழக்கிட்டு திலோர்த்தமையின் கரத்தைப் பிடிக்கவந்தனர். அவள் முல்லையரும்பெனத் துலங்கும் பல்வரிசை பளபளவென்று ஜொலிக்க புன்நகைபுரிந்து கடைக் கண்பார்வையாய் ஐயோ! நீங்களென்ன சுத்த மூழுமூட சிகாமணிகளாயிருக்கின்றீரே. ஒரு ஸ்திரீ இருவருக்கு சுதந்தரமாவதெனின், யாவராயினும் சம்மதிப்பாரா? அன்றியும் நீங்களிருவரும் அண்ணன் தம்பிகளா யிருக்கின்றீர்களே முறைதவறி நடப்பதற்கு நியாயமாகுமா? சீச்சீ தூரத்திற் செல்வீரென்றனள். சுந்தரன் மிகவும் வாஞ்சையுடன் பெண்ணே! யானே உனக்கு நாயகன் அவன் கெட்டான் சிறுவன்

ஓரறை கொடுத்தால் ஓடிப்போவான். இனி யாதொரு சந்தேகமு மெய்தாமல் அடுத்த நந்தவனத்திற்குச் செல்வோம் வருகுவாயென் றழைத்தனன். உபசுந்தரனுக்குக் கோபம் பிறந்து அடா துரோகி! உனக்குமாத்திரம் சுகத்தைத் தேடிக்கொண்டால் யான் எப்படி போவது, சீச்சி! மூடா! மூர்க்காவென்று அதட்டி! அடீ எனதன்பிற் கிசைந்த காதலி! அவன் கெட்டான் மூடன் நீ என்னையே காந்தர்வ மணம் புரிந்து சுகமுற்றிருப்பாயென்றனன். திலோர்த்தமை இது தான் சமயமென்று ஐயா! நீங்களிருவரில் யாவரொருவரேனும் என்னை மணம் புரியவேண்டுமன்றி இருவருக்கும் யான்சம்மதப்பட மாட்டேனென்றனள். அப்போது சுந்தரோபசுந்தரரும் ஆக்கிரமித் துப் பற்கடித்து ஒருவருடன் ஒருவர்சண்டைசெய்ய மனந்துணிந்து தமது வரப்ரசாதத்தின் அனுக்கிரக காரணத்தையுங் கவனியாமல் ஒருவரையொருவர் கொல்லவேணுமெனும் ஆசையினால் வாலி சுக்ரீ பரைப்போல ஒருவரை யொருவர் அடித்தும், கடித்தும், கட்டியும், முட்டியும், தட்டியும், மல்யுத்தம், குத்துசண்டை முதலான குரூர யுத்தங்களனைத்தும் புரிந்து ஒருவர்க்கொருவர் தோற்பு கெலிப்பில் லாமல், கத்தி, கேடயம், ஈட்டி, பாலாபரிசை, வல்லயம் முதலாகிய முப்பத்திரண்டாயுதங்களாலும் சண்டைசெய்தும் தனுசைக் கரத்தி லேந்தி அநேகவித அஸ்திரங்களாலும் ஒருவரையொருவர்கொன்று விட்டனர். அவ்விதமாகிய அருஞ்சமர் புரிந்து இருவரும் மரண மடைந்தபின்னர் திலோர்த்தமை தன் வாசஸ்தானத்திற்குப்போய் விட்டனள்.

இன்னும் சொல்லவேண்டியதானல் அநேக மிருக்கின்றன. விராடபுரத்தின் மன்னனுடைய மைத்துனராகிய கீசகன் உபகீசக ராதியோர் பணிப்பெண்ணாகியவளால் ஒரேதினத்தில் மரணமடைந் தனர். இப்படியே அநேகமாயிரம் புருஷர்களும் அற்பகுணத்தைத் துணைவகித்து ஸ்திரீமாய்கையால் வெகு துயருற்று கஷ்டநிஷ்டூரத் தையடைகின்றனர். ஆகையால் யாதாமொருவரும், அந்நியமாதரை கண்டாலும் கவனியாதிருப்பதுதான் மிகவும் மேன்மையாகும்.

## தாசியால் தனநாசம்.

உலகிற்ஜனித்திடும் மாந்தர்கட்கு ஸ்திரீகளின் மாயாசம்மந்தம் வழக்கமாயிருப்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே ஆகையால், பெற்றோர்கள் பிள்ளைகட்கு பதினறுவயதானவுடனே தமது குலத்தில் பெண்ணைத்தேடிக் கலியாணஞ்செய்துவிட்டால் அவர்கள் அந்த பெண்ணுடனே சுகானந்தமாய் இல்லறவாசியாயிருந்துக் காலங் கழித்திடுவார்கள் அவ்விதமில்லையாகில் தன்மனதிற்கிசைந்த தாதிகளிடத்தில் சிக்கிக்கொண்டால், அவர்கள் தமது தொழிலினை யனுசரித்துக் காசுகளைப்பிடுங்கும் வகையைத் தேடிப்பலவிதமாய் பணம் பறிப்பர் தாசிகள் நேசம் காசில்தான் சிரேஷ்டம் அன்றியும் அவர்கட்குத் தாய்க்கிழவி யொருத்தி யிருப்பாள் அவளுடன்கூட அநேக துஷ்டர்களும் துணையா யிருப்பர் கள்ளுசாராயங்குடிக்கும் நேர்மையும் அவர்களே கற்றுகொடுப்பார்கள். அதனல், அவனுக்கு எவ்வளவோ கஷ்டநிஷ்டூர மனைத்தும் நேர்ந்து பலவித துன்பமனைத்தும் விளைந்துக் கஷ்டப்படுத்தும். வேசிகளோவெனின் தமக்குச் சுகத்தைக் கொடுப்பதுடன் தனக்குபலவித உபசரணைசெய்வதினல் தாங்களே மேன்மையானவர்களென்று தம்மைத்தாமே புகழ்ந்துக் கொண்டு புருஷர்களைத் துரும்பாய் மதித்துத் தாய்க் கிழவியிடம் வெகு பரியாசத்துடன்,

விருத்தம்.

அன்னையே யனையதோழி யறந்தனை வளர்க்குமாதே
உன்னையோருண்மைகேட்பே னுரைதெரிந் துரைத்தல்வேண்டும்
என்னையே மணருவோர்க ளெனக்கொரு இன்பம்நல்கி
பொன்னையுங் கொடுத்துபாதப் போதினில் வீழ்வதேனே.

என, மிகவும் இழிவாக தன்னிடம் வரப்பட்ட புருஷர்களின் நிலைமையைக் குறித்துபேசினல் அதற்கு அந்ததாய்க்கிழவி என்ன சொல்வா ளென்றுல்,

விருத்தம்.

பொம்மெனப்பணைத்து விம்மி போர்மதன் மயங்கிவீழும்
செம்மை சேர்தனத்தினளே செப்புவே னென்று கேண்மோ
இம்மையி லறஞ்செய்யாதா ரவர்பொருள் சிதறவேண்டி
நம்மையுங் கள்ளுஞ் சூதும் நான்முகன் படைத்தவாறே.

என்பதாய் இழிவுபடுத்திப் பேசுவாள் ஆகையால், வேசிநேசத்தை விடுத்துச் சுத்தாத்மாவாய் விளங்குவதேசுகமென்றுணரவேண்டும் அதன்றி ஓர் நாளைக்குத்தானே ஆசைக்குப் போய்வருவோமென்றால் அவர்களால் நேரிடும் ஆபத்தோ சொல்லமுடியாது. வீட்டைவிற்று காட்டைவிற்றுக் கொடுத்தாலும் அவர்களுடைய ஆசை தீராது. அன்றியும் ஒருவன் ஓர் தாசியை வைத்துக் கொண்டால் அவன்வருகிறசமயத்தில் தலைவலி கண்டவள்போற் பாசாங்கு செய்து முக்காடிட்டுப் படுத்துக்கொள்வாள். அவளுடைய சிநேகித தோழிகளெல்லாம் அவளைச் சூழ்ந்து உட்கார்ந்துக்கொண்டு கண்ணைத் துடைத்துக்கொண்டிருப்பார்கள். ஆசாமிவந்தவுடனே அருகிலிருப்பவரெல்லாம் மிகவும் அன்புடையவர்போல அம்மா என்ன செய்யலாம் எல்லாம் அவரவர் அதிர்ஷ்டானுகூலம் நாங்களும் ஒருவனைப் பிடித்துக்கொண்டு தானே ஆடை ஆபரணம் யாவும் சேகரித்துக்கொண்டோம் உனக்குக் கிடைத்தவர் இவ்வளவு தரித்திரமுடையவரா யிருந்தால் நினைந்து நினைந்து வருத்தப்படுவதுசரியல்லவென்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். அத்தருணம், அந்தத் தாசியானவள் காசைப்பறிப்பதற்குத் தகுந்த முயற்சியுடன் அழுதுக்கொண் டிருப்பாள். வந்தவன் சும்மாயிருப்பானா விருதுக்கு வேட்டையாடும் அரசர்களைப்போல் கவுரவத்திற்காயினும் பெண்ணே! நீயாதொன்றுக்கும் அஞ்சாதே எனக்கு பத்துவீடுகளும் நாலுதோட்டங்களும் நாலுபங்களாவும் நிலங்களு மிருக்கின்றனவென்று பொய்யாகிலும்சொல்லிவிடுவானாகில் அச்சமயமே அருகில் காத்திருக்கும் மோசக்காரரை வரவழைத்து ஐயா! எனது நாயகனுக்கு நாலாயிரம் விராகன் கடன்கொடும் அவர் மிகவும்நம்பிக்கையுள்ளவரென்றுசொல்லி வேசிநேசனை கையெழுத்துபோடச்சொல்லி அநியாயவட்டியுடன் பணத்தைவாங்கி காப்பு, கொலுசு, மூதலாகிய பலவித ஆபரணங்களைச் செய்து போட்டுக்கொண்டு ஒரு மாதமாத்திரம் அவனிஷ்டத்தைப்போல விளையாடிக்கொண்டிருந்தால் அப்பால் கடன் கொடுத்தவன் சம்மன்செய்து வாரண்டுங்கையுமாய் வந்து, எடுஎடு பிடிபிடியென்று நிலங்களை ஜப்திசெய்தும் வீடுவாசல்களை எலம்போட்டும் பலவிததொந்தரவுகளுஞ்செய்தால் கைவரண்ட சந்நியாசியாய்க் கோவணாண்டியானவுடனே உற்றார் உறவினரும் கிட்ட நெருங்கமாட்டார்கள். நமது ஆசைநாயகியாகிய தாசியிடம் போனால் அவளும் தெருக்கதவைத் தாளிட்டு நீர் யாரையா புதிதா

யிருக்கின்றது. எந்த வூரென்று ஒன்றுந் தெரியாதவள்போல ஒப்புக்குப்பேசி துரத்திவிடுவார்கள்.

ஆகையால் மனிதராய்ப் பிறந்தோர் அறிவைப் புறப்படுத்தி அஞ்ஞானிகளாய்க் கெட்டலையலாகாது.

## மதுபானம் விலக்கல்,

கடவுள் நாம்புசிப்பதற்கும் அருந்துவதற்கும்அநேகவிதமாகிய ஆகாரங்களை உண்டுபண்ணி யிருக்கிறுரென்றிடினும் மனதைக் கலைத்து மயக்கத்தை யுண்டுபண்ணும் லாகிரிவஸ்துக்களை உபயோகித்தல் மஹா கெடுதியாகும். மது-கள், பானம்-குடித்தல், கள்ளைக் குடிப்போர் தொல்லையிற்சிக்கிக் கவலைப்படுவரென்பது அவனியோரனைவருக்கும் தெரிந்த விஷயமே ஆகையால் அந்த துர்ப்பழக்கத்தை விட்டுவிடவேண்டிய காரணத்தை யாவரும் துணைவகித்தல் வேண்டும். கள்ளைக் குடித்து வெறி யதிகரித்திடில் மரியாதையில்லாமல் யாவரை தூஷித்திகழச் செய்வதுடன்,

கவி.

ஒரு நாட்பழகினும் குடியர் சிநேகம்
இருவரும் பிளக்க உதைபடலாகும்.

என்னும்;தன்மையாய் குடியர்நேசம்கூடாது. குடியாதிருப்பவன் ஏழையா யிருந்திடினும் சிரேஷ்டனுனவன் கள்ளைக்குடிப்பவர்கட்கு சுயநினைவுதோன்றுது பற்பலவிதமாகிய துர்க்குணமனைத்தும் ஒன்றின்பின்ஞென்ருயமைந்து பலவித பாபகிர்த்தியங்களைப்புரியும் படியாய்ச்செய்யும் பெரியவர்களாச்சுதே யென்னும் மதிப்பும் மரியாதையும் எட்டி நிற்குமன்றி கிட்டவருகாது. யாதேனும் ஓர் தொழிலினை யனுசரித்துப் பொருள்சம்பாதிடினும் அவற்றை அன்னவஸ்திரத்திற்குச் செலவுசெய்வதற்கு மனம் வருகாது. மனைவி மைந்தர் சோற்றுக்கு அழுதிடினும் தமது சிநேகிதருடன் கூடி கள்ளுக்கடையை குத்தகை எடுத்துக்கொண்டு குடித்துக்கூத்தாடி வெறியதிகரித்து தன்னை மறந்து தமாஷாக தாமேசிறந்தவராய்மதித்து மஞேகர்வத்தைத் துணைவகித்து அடீல்தடீல் வேடிக்கையாவும் வெகு விமரிசையாய்நடத்தி அடிஉதைப்பட்டு தலையுடைந்து இரத்தகாயம்பட்டு

தலையாரிகளாற் பிடிப்பட்டு அரசனால் தண்டிக்கப்படுவர். இவ்வளவு அனர்த்தமும் குடியினால் வந்ததன்றி மற்றவை யன்றெனமதித்தல் வேண்டுமென்றுணர்வது தான் உலகியல்பாகும் "குடிப்பவர் வீட்டில் தொடுவழக்கதிகமுண்டு" ஆகையால் எத்தகையோரும் சுத்த மனத்தினராயிருப்பதுவே சிரேஷ்டமாகும்.

# சொக்கட்டாடுதல் இக்கட்டாய்முடியும்.

ஜீவர்கள் ஜனித்தபோதே பலவிதமாகிய மாயசம்பந்தத் தியல்புடனே பலவித விளையாட்டுகளால் பொழுதைக் கழிக்கின்றனர். அவைகளில் சொக்கட்டாடுவது தான் மிகுந்த குரூரபயங்கரசேஷ்டையை விளைவிக்கும்படியான துர்ப்பழக்கம், ஆயினும் அவைகளில் மனஞ்செலுத்துவது ஊழ்வினைசம்பவந்தானென்றிடினும் அவற்றை அறிவினால் தடுப்பதே சிரேஷ்டம், விதியினால்நேர்ந்தவை மதியினால் விலக்கலாகுமெனினும் மிகவும் கஷ்டமே ஆனாலும் முயற்சியுடையோர் இகழ்ச்சியுடையாரென்பதுபோல அருகிலிருப்பவர். சொக்கட்டாடுவதற்கு அன்பாயழைத்திடினும் அப்பப்பா அது துன்பத்தைத்தரும் வம்பாய் முடியுமென்று ஒதுங்கிப்போனால் ஒன்றுமில்லை. ஆசைக்கு ஓர் ஆட்டம் ஆடுவோமென்றிடின் அதுவேகாரணமாய்ப் பந்தயம்வைத்தாடுவதற்கு மனது தூண்டுவதாலும் இன்னும் கெலிப்போம் கெலிப்போ மென்னும் அற்பசந்தோஷத்தினால் ஆனந்தமாய் ஆடிக்கொண்டிருப்பார்கள். தோற்றுவிட்டாலும் அடடா! இதோ இந்த ஆட்டத்தில்கெலிப்போமென்று வீணெண்ணமாய் ஆட்டத்தை விடாமல் ஆடிக்கொண்டிருப்பார்கள். அப்படி ஆடுந் தருணம் ஒருவரை யொருவர் கெலிப்பதற்காக பலவித முயற்சி புரிந்து ஒருவரை யொருவர் மோசஞ்செய்வதற்குப் பலவித முயற்சி புரிகுவதுடன் வஞ்சனைநினைவுடன் பொய்மொழிபுகன்று அசத்தியத்திற்கு உட்பட்டவராய் அநியாயமார்க்கத்தை அனுசரித்து அகஸ்மாத்தாய் ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு பலவித கலகம் புரிந்து பகைஞராவார்கள். என்றாலும் இது கலியுகத்தின் மனிதர் கட்கமைந்தவைதானென்றிடினும் முற்காலத்திலும் சக்கிரவர்த்திகள் இராஜராஜாக்கள் முதலானவர்களையும் விடாமற்படிக்குப் புல

வித தொந்தரை நேரிடும்படியாய் ஆபத்திற்சிக்கி அவதிப்படச் செய்தன.

ஆதியில் நிடதபுரிமன்னனாகிய நளச்சக்கிரவர்த்தியும் சூதாடி கானிற்சென்று மனைவிமைந்தரை இழந்து பலவித துயர மடைந்து சனிபகவானருளால் தனது கஷ்டநிஷ்டூரமனைத்தும் தீர்ந்து, மனைவி மைந்தரைக் கண்ணுற்று சுகானந்தமாய்த் தனது தேசத்தைக் கெலித்துக்கொண்டு பழையபடியே சிம்மாசனத்தமர்ந்து ராஜரீகம் செய்துக்கொண்டிருந்தனன்.

பதினாறுசீர்க்கழி நெடிலடி லாசிரிய விருத்தம்.

"சீர்பெற்ற நிடதபுரியரசுசெய் நளராஜன்
திவ்யகுண வீமராஜன்
செல்விதமயந்தியை மணம்புரிந்தானென்றுஞ்
சிறுமியொன் றீன்றபின்பு
பார்வேந்தர்புகழ வரசாக்ஷி செய்திடுநாளில்
பருதிமகன் சனிகொடுமையால்
பார்ப்பவர் திடுக்கிட புஷ்கரனுடன் சூதாடி
பாரிழந் தடவியுற்று
கார்நிறக் கூந்தலாள் மனைவிமைந்தருமகல
கானரவு தீண்டவதனாற்
கரியநிறவடிவாகி ரிதுபர்ன ராஜனிடம்
காலம் கழித்தவர்க்குத்
தேர்ஓட்டசனி இவரைவிட்டு விலகிடவிவரும்
தன்னூரெலாங் கெலித்துத்
தானுந்தன்மனையாளும் மக்களும் வாழ்ந்தனர்
தரணியிற் சீரோங்கவே."

இவ்விதமாய் நளச்சக்கிரவர்த்தியும் வெகுவித துயருற்று சனீஸ்வரன் கிருபையால் தனது துன்பத்தை யொழித்து சுகமுற்றிருந்தனன். ஆகையால், எத்தகையோரும் சூதாடலாகாது, சூதும் வாதும் வேதனைசெய்யு மென்பது சொக்கட்டானாடு மிடத்திற்றான் காவலாயிருக்கும், பாச்சிகை யாடு மிடத்திற் பகைஞர் தரிசனமே யாகும் அன்றியும் கலிபுருடனும் சூதாடு மிடத்திற்றான் வசித்திடுவான். மூதேவிவாசமும் சூதாடுமிடமும் ஒன்றாகவே விளங்கும். தர்மகுணத்தினராகிய தர்மராஜனும் இந்தச்சூதாட்டத்தினால்தானே

பலவித கலகார்த்தத்திற்சிக்கி வனவாசியாய்ப்போனர் இத்தகைய துர்க்குணத்தை விடுப்பதே சுகம். அதெப்படியெனின்,

அஸ்தினபுரியைப் பரிபாலனஞ் செய்துக்கொண்டிருந்த திருத்ராஷ்டிரன் தனது தம்பிபுத்திரராகிய பாண்டவர்கட்கும் தன்புத்திரராகிய துரியோதனதியர்கட்கும் தீராசச்சரவாயிருந்ததினல் பாண்டவர்கட்கு இந்திரப் பிரஸ்தத்தின் அரசுரிமையைக் கொடுத்துவிட்டு தர்மராஜனை இராஜரீகம்புரியும்படியாய் ஆக்ஞாபித்தனன். துரியோதனதியர் பாண்டவர்களை படுமோசஞ் செய்வதற்குப் பொல்லாங்கனைத்தும் வெகுவிமரிசையாய் நடத்தியும் முடியாமற்போய்விடவே அஸ்தினபுரியில் ஓர் நூதனமாளிகை யொன்று கட்டிமுடித்து, அதைப் பார்க்கவேண்டி பாண்டவர்களை வரவழைத்து இவர்களை மோசஞ் செய்வதென யோசித்து மாமனுகிய ஜகுனியால் மாயா சூதாடி ஜெயித்துப் பஞ்சபாண்டவரை பஞ்சுபோற் பறக்கடித்துத் துரத்துவதற்கு தீர்மானித்து பகடை சொக்கட்டான் பாச்சிகை முதலானவையுங் கொண்டுவந்து சபையிலேவைத்துத் தருமராஜனை ஓராட்டம் ஆடுவோம் வருவீரென தூண்டினர். தருமராஜன் சகல சாஸ்திர புராண நூன்முறை யனைத்தும் தெள்ளிதாய்க் கற்றுணர்ந்தவராயிருந்திடினும் ஊழ்வினைசம்பவம் விடுத்திடாதென்பதுபோல ஓர் ஆட்டந்தானேபோடுவோமென்று அன்பாய் உட்கார்ந்தபோது தம்பிமாரனைவரும் தடுத்து அண்ணு இது வம்புவிளைக்கும் வஞ்சக தொழிலென்றெண்ணுமல் விளையாட்டுத்தனமாய் பிரவேசித்திடில் விபரீதகலகம் நேர்ந்து அநியாய ஆபத்தெய்தி ஆவிக்கபாயமெய்துவதுடன் அவமானமாகுமென்று பலவிதமாய்ப் புகன்றும் தர்மராஜனுக்குக் கிஞ்சிற்றும் மனதிற் பதியாமல் அப்பா விளையாட்டு விஷயத்தில் விபரீதகலகம் நேரிடுமோ அவ்விதமாய் யாதொரு கெடுதியும்வருகாது சந்தோஷமாய் சபாரஞ்சிதமாயாடுவதிற் சஞ்சலமணுகாது பழக்கமின்றிய அந்நியர்களும் பக்ஷமாய் விளையாடிக் கொண்டிருந்தால் ஆசையும் அன்பும் வகித்து சந்தோஷமாய் உறவினராகுவர் அப்படிப்பட்ட விளையாட்டு விஷயத்தைக் கலகத்திற்குக் காரணகர்த்தாவென்றுரைப்பது நம்பத்தக்கதோவென்றனர். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற அவருடைய சகோதரர் ஆற்றெணு சஞ்சலமடைந்து அண்ணு பின்னல் வருவதை முன்னல் தெரிவிக்கின்றேம் அண்ணு ஆட்டமோ அனர்த்தமோவென்று அறிஞர்களாற் புகல்வதுபோல யாதாமொருவரும் ஆசையாய் ஆடிப்பாடிக்கொண்டிருந்

தால் அனர்த்தத்திற்கு காரணமாகி அடீல்தடீல் வேடிக்கையாவும் வெகு விமரிசையாய் நேர்ந்துவிடுமே மற்ற விளையாட்டு விஷயங்களாகிலும் ஓர்விதமாயிருக்கும் இந்த சொக்கட்டானடுவதெனின் பலவித சஞ்சலத்தை விளைத்து ஆவிக்கபாயமுமெய்திடச்செய்யும் ஆகையால் அண்ண இத்தகைய குரூரபயங்கர சேஷ்டையை விளைவிக்கும். இந்த சூதாட்டம் வேண்டியதில்லையென்று மறுத்தும் எதிரிகளாகிய துரியோதனன் ஜகுனி துர்ச்சாதனன் முதலானவர்களெல்லாம் தமது மனப்பகையை முடித்தற்பொருட்டும் பலவித மோசவார்த்தைகளால் தருமராஜனுடையமனதைக்கலைத்து அரசே அறியாத சிறுவர்களின் வார்த்தையைக் கேட்காதீரென்றும் இன்னும் பலவித தந்திரவார்த்தைகளால் தர்மராஜன்மனதைக்கலைத்து சூதாடுவதற்கு சம்மதப்படச்செய்து பந்தயங்களும் நியமித்துக் கொண்டனர். துஷ்டர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தர்மராஜனும் சகோதரர் வார்த்தையையும் கேளாமல் தமாஷாய் ஓர் ஆட்டம் ஆடுவோமென்று உட்கார்ந்தவுடனே பாச்சிகையைக்கையிலெடுத்து உருட்டினர் காலத்திற்கிசைந்த கோலமாய் பந்தயமும் குறைவாகவே விழுந்துக்கொண்டிருந்தமையால் எதிரியாகியஜகுனியானவன் மாயாமயக்க பித்தலாட்டஞ்செய்து ஒவ்வொரு தடவையும் தானே கெலித்துக்கொண்டிருந்தான் தர்மராஜன் ஆஸ்தி பூஸ்திதி நாடுநகரம் சகோதரர் மனைவியுடன் தானும் தோற்று அரசனயிருந்த பெருமைதுன்றி அடிமையாகி ஆண்டவன் கிருபையால் மறு ஆட்டம் ஆடி அடிமைத்தனத்தை நிவர்த்திசெய்துக்கொண்டு ஆரண்யவாசியாயலைந்து அஸ்தினபுரியில் வந்து ஆசிரியர் பாட்டன் பெரியோர் சிறியோர் உற்றார் உறவின்முறையாரனைவருடன்யுத்தம் புரிந்து பலவித கலகத்தை விளைத்துக்கொண்டு சண்டை சச்சரவு செய்து அநேகரை உயிரிழக்கச்செய்தனரல்லவோ இவையனைத்தும் கவனிப்பவரே சிரேஷ்டராகும் அன்றியும் சதுர்யுகத்திலும் தருமதேவதை ப்ரசன்னமாயிருந்தபோதிலும், கிரேதாயுகத்தில் நான்கு காலுடனும், திரேதாயுகத்தில் மூன்று காலுடனும், துவாபரயுகத்தில் இரண்டு காலுடனும், கலியுகத்தில் ஒருகாலுடனும் நடக்கும் அதனல், மேற்குறிப்பித்த மூன்று யுகத்திலும் அந்தணர், ஆசாரந் தவராமலும், அரசர்கள் நீதிவழுவாமலும் வைசியர் வர்த்தக நிதானத்தில் திராஸின் முனை பிசகாமலும், சூத்திரர் ஆண்டானுக்கு அடிமை யென்னும் வாக்கியப்படியே அடக்கம் ஒடுக்கமாகவு மிருந்

ததினால் நாடுசெழித்து நன்மழை பொழிந்து செந்நெல் முதலாகிய நவதான்யங்களும் குறையிலாமல்விளைந்து யாவரும் சுகானந்தமாய் வாழ்ந்துக்கொண்டிருந்தனர்.

இந்தக் கலியுகத்தில் தருமதேவதை ஒருகாலால் நடப்பதினால் அநியாய அக்கிரமங்கள் அதிகமாகி பாபகிர்த்தியங்கள் விசேஷித்திருப்பதினால் கலிபுருடன் தோன்றி கரத்தில் வாளேந்தி தருமதேவதையின் முன் ஓடி வருகையில் தருமராஜன் தடுத்து மன்னிப்பீரென்றனர். கலிபுருடன் ஆலோசித்து ஐயா! ஈதென்ன தர்மசங்கடம் யான் வந்தகாரணமென்ன நீர்தடுப்பதென்னவென்றுகேட்க, தர்மராஜன் மிகவும் வணக்கத்துடனே ஐயா! கலிபுருஷரே இந்த தருமதேவதை ஒருகாலாலாயினும் நடந்துக்கொண்டிருந்திடினும் உலகம் ஓர்விதமாயிருக்கும் அவ்விதமுமின்றி தருமதேவதை இல்லாவிடின் உலகம் புரண்டு கலகமெல்லாங்கோர்த்து கண்டபடியாய் ஜீவர்கள் தத்தளித்துப்போவார்களேயென்று பலவிதமாய் புகன்றும் மன்னிப்பு கேட்கவே கலிபுருடன் மஹா விசன மடைந்து, ஐயா! யான் உலகில் வந்துவிட்டேனே இனியான் எங்கிருப்பது தெரியப்படுத்துவீரென்று வினவ, தருமராஜன் ஆலோசித்து ஐயா! நீர் புகன்றவை உண்மையே ஆயினும். நீர் உத்தமரிருக்கும் ஸ்தானத்திற்குச்செல்ல வேண்டாம். பொய், கொலை, களவு, கள் காமமென்னும் பஞ்சமாபாதகங்களைத் துணைவகித்துக்கொண்டு சூதாடுமிடத்திலும், மதுபானரிடத்திலும் வஞ்சகர் வாசஸ்தானத்திலுமிருந்து உமக்கிஷ்டமானபடி உமது ஆண்மையைச் செலுத்திக் கொண்டிருப்பீரென்றனர்.

கலிபுருடனும் அவ்விதமே சம்மதித்து சூதாடு மிடத்திலும் மதுபானர்ஸ்தானத்திலும் வஞ்சகர்வாசஸ்தானத்திலும் பிரவேசித்திருப்பதினால் விபரீதகலகமனைத்தும் நேர்ந்து, பலவித துன்பம் விளைகின்றன. ஆகையால் யாதாமொருவரும் சூதாட்டத்திற் பிரவேசிக்கலாகாது இக்காலத்திலும் அநேகர் வீடுவாசல் ஆஸ்தி பூஸ்திதி யனைத்தும் சூதாடித்தோற்றுப் பலவித கஷ்டநிஷ்டூர மடைந்திருக்கின்றனர். என தன்பார்ந்த நண்பர்காள்! இத்தகைய துர்க்குணத்தைவிடுத்துப் புவியிலிருப்பதுதான் உத்தமர்க் கழகாகும்.

# மாமியார் துன்பம்.

பூதலத்திற் ஜனித்த ஜீவர்கள் சதிபதி மனதிசைந்து சம்சார வாழ்க்கையிற் பிரவேசித்து, மைந்தர்களைப்பெற்று சந்ததமும் அவர்கட்கு ஆதாரமாயிருப்பது உலகியல்புதானென்றிடினும் தந்தையைவிட தாய்க்கு வெகுபிரயாசையாகும், அதெவ்விதமென்றால், தாயானவள் பத்துமாதம் வரையினும் பிள்ளையை வயற்றிற் சுமந்திருப்பதுடன் பூமியிற்பெற்றபின்பும் அந்தப்பிள்ளைகட்கு பசியில்லாமல் பால்கொடுத்து வளர்ப்பதுடன் அந்தப்பிள்ளைகட்கு யாதொருவியாதியும் நேரிடாமல் தனது சரீரத்தைப்போற் காப்பாற்றி பதினாறுவயதுவரையினும் வளர்த்து வாலிபதிசை யடைந்தபின்னர். பிள்ளைக்கு பெண்கொண்டால் தனக்கு சுகமென்று நாலாபக்கத்திலும் தேடியலைந்து கஷ்டப்பட்டு எவர்களிடத்திலாகிலும் பெண்தேடி கலியாணஞ்செய்துவிட்டால், அவர்கள் பாடு அம்பலத்தில் ஆபத்துதான் அவர்களிலும் சிலர் பூர்வீக புண்ணியவசத்தின்படியே உத்தம பெண்களைத் தமது புத்திரருக்குக் கலியாணஞ்செய்துவைத்தால் சீதேவிவந்து சீர்படுவதுபோல சகல சுகவைபவ மனைத்தும் குறையில்லாமல் பந்துஜன மித்திருடன் நாட்டுக்கு நல்லவர் வீட்டுக்கு உத்தமரென பெயரமைந்து சுகஜீவியா யிருப்பர். அவ்விதமில்லாமல் பூர்வீகத்திற் புரிந்த அநியாய அக்கிரமத்தினாலுள்ள பாபகிர்த்தியங் கட்கியன்றவிதமாய் குளிக்கப்போய்ச் சேற்றில் வீழ்ந்து அவதிப்படுவதுபோல துஷ்டப்பெண்களைத் தமது புத்திரர்கட்கு மணஞ்செய்துக்கொண்டால் அவர்கள்பாடு சதாசஞ்சல கஷ்ட நிஷ்டூரமேயன்றி சுகமணுகாது பண்ணியபயிரிற் புண்ணியந்தெரியும் என்பதற்கிசைந்தவிதமாய் மாமியாருக்கேற்ற மருமகள் வாய்ந்திடுவது தான் காரணமாகும்.

சில உத்தமிகள் தமது மணாளனைப்பெற்று வளர்த்தெடுத்த மாமியர்ச்சுதே யென்று ஆசாபாசமாய் அன்புசெலுத்தி அனுதினமும் அதிகாலையிலெழுந்து ஸ்நானபான நேமநிஷ்டையனைத்தும் புரிந்து கடவுளைத்தொழுது மாமியார் முன்வந்து உரத்தகுரலாய்க் கூவினால் திடுக்கிட்டெழுந்திருப்பார். அதனால் தோஷமாகுமென் றெண்ணிக் கொண்டு மயிலினம் குயிலினம் பாஷிப்பதுபோற் சாந்தமனதுடன் மெதுவாய் மாமி! என்று அழைத்திடில் அவர்கள் அன்புடனெழுந்து மஹாலக்ஷ்மி முகதரிசனம் கண்டதுபோல மருமகளைப்பார்த்து

சந்தோஷமாய்த் தந்தசுத்திமுதலான திரேக சுத்திகளைச் செய்துக் கொள்வதற்கு வெளியிற் சென்றவுடனே தனது கணவனையும் எழுப் பிவிட்டு அவ்விருவருக்கும் தகுந்த உபசரணையாவும் குறைவிலாமல் நடத்திவிட்டு அன்னபதார்த்த முதலானவையும் சமைத்து அவர்க ட்கு பங்கிட்டு மீதியாகியதை தான்புசித்து சந்தோஷித்திருப்பர் இ வர்கள்தான் உத்தமிகளாகும்.

சிலர் உலகியல்பிற்கிசைந்தவையாய் மாமியாரெனும் மதிப்பின் றி உலகநிந்தனையாய்விடுமேயென்று மனதில் மரியாதையை நினைந் திடாமலும் மேனுக்கு உபசாரஞ்செய்து சிலவேளைக்குகோபபிடாரி களைப்போற் சண்டை செய்திடினும் சிலவேளைக்கு தன்னைப்பெற்ற தாயைப்போல் அன்புவகித்திடுவார் இவர்கள்தான் மத்திபர்.

ஆனால் அதமஸ்திரீகள் அநியாயத்தைச்சொல்வதற்கு, இவ்வே டிடங்கொள்ளாதாகையால் கிஞ்சிற்று சுருக்கமாய்ச் சொல்கிறேன் கவனிப்பீர். இஜ்ஜனன பாபமெல்லாம் திரண்டுருண்டு பெண் ரூப மாய் ஜனித்தவர்களாகிய பேய்குணத்தின மருமகளின் அநியாய மோ ஆற்றுணு ஆபத்தைவிளைவிக்கும் துர்க்குணசேஷ்டையாகவே யிருக்கும் மணாளனைக் கலியாணம் செய்யும்போதே மணவரைப் பந் தலில் மாமியாரை மல்யுத்தம் புரிய விடுத்து கோலம்வரும்போதே குயவன் வீட்டில் சட்டிப்பானைக்கு முன்பணம் கொடுத்துவிட்டும் தாய் வீட்டுக்கு மரு வென்னும் விருந்தருந்த கணவனுடன் வரும் போதே கலகத்தையும் துணையா யழைத்துக் கொண்டு வருவது போல மாமியார்மீது கோள் சொல்லி அண்டை அயலா ரெல்லாம் கண்டு சிறிக்கும்படியாய்ப் பெரிய கலகம் விளைத்து சண்டையிட்டு மண்டை யுடைந்து குய்யோமுறையோவெனுங் கூச்சலுடன் கதறிப் பதறி கூட்டஞ்சேர்த்து ஐயையோ! மாமியார் வீட்டுக்குப்போவதி லும் பாழுங் கிணற்றில் வீழ்ந்திறப்பேன் யானெனது கணவனுடன் தனியா யிருந்து சம்சாரஞ் செய்வேனென்று அடாவடித்தனமாய் அவற்றிற் கிசைந்த ஏற்பாடுக ளெல்லாம் சரிப்படுத்திக்கொண்டு தனிவீடு பார்த்துக்கொண்டு சம்சாரஞ் செய்துக்கொண் டிருப்பார் கள்.

அவ்வித சஞ்சலம் வாய்ந்திடில் என்னசெய்வாள்ப்பாபம் பிள்ளை களைப் பெற்று வளர்த்தது ஓர் மரத்தை வைத்துத் தண்ணீர் வார்த்து வளர்த்திடினும் பெரிதாய் வளர்ந்தபிறகு காய்கனிகொடுக்

கும் அதனைவிற்கிரயம் செய்துக்கொண்டுவந்த காசைச்செலவழித்து அன்னபதார்த்தங்களைச் சமைத்துத் தனது வயற்றை வளர்த்துக் கொள்வார்களல்லவோ பிள்ளைகளைப்பெற்று வளர்த்து துஷ்டபெண் களைக்கலியாணஞ்செய்து அவதிப்படுவதினுற் கஷ்டநிஷ்டூரமேயன்றி ஒருபோது சுகமிராது.

ஆகையால், யாதாமொருவரும் தாயைப்போற் பெண்ணும், நூலைப்போல் சேலையு மென்பதுபோல பெற்றாள் குணம் போலவே பெண்களும் பிறந்திடுவர். அவர்களில் உத்தமர், மத்திபர், அதம ரெனும் மூன்று வகுப்பினரையும் கவனித்துப் பார்த்து ஏழையா யிருந்திடினும் குணமே சிரேஷ்டமென்பதுபோல நற்குணத்தினரை தமது மைந்தருக்குக் கலியாணஞ் செய்துவைத்தால் யாதொரு கஷ்டநிஷ்டூரமும் அணுகாமல் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பார்கள்.

சுபம். சுபம். சுபம்.

## பூலோக இன்ப துன்பம்

முற்றிற்று.

அறுபத்துநா

# தேவீபர

சமஸ்தலோக காரணபூதையாய்

உற்பத்தி லயஸ்தானமாய் பிரமேந்திராது

களைக் களைந்து அவரவர் இஷ்டசித்திகளை யருளும கருணாநிதி யாய் விளங்கும் சர்வலோகமாதாவாகிய பராசத்தியின் பிரபாவ லீலாவிபூதிகள் தேவிபராக்கிரம மெனப்படும். இந்நூலை தமிழில் வசனநடையி லியற்றி அவ்வற்புதங்களை நேரிற்கண்டாற் போல விளக்கத்தக்க அறுபத்துநான்கு திருவுருவப் படங்கள் சிற்பநூற்படி யெழுதி யமைத்து முக்கியமான இடங்களில் வேதம், உபநிஷதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய பல வடநூல் மேற்கோளுந் தமிழ்நூல் மேற்கோளுங் காட்டி யச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 1-4-0

## ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி,

நெ. 18, பெருமாள் கோவில் தோட்டம், 1-வது தெருவு,

சௌகார்பேட்டை போஸ்ட்,

மதராஸ்.